நன்றி - நூலகத்திட்டம்


SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


இதழ் 184 நவ. 11 - நவ. 24 1999 விலை ரூபா 10. 00.



## தொண்டா: மரணித்ததும் புனிதர்?

## துரையப்பா முதல் அற்புதன் வரை





## சிறில் மத்தியூவின் தளத்தில் வீரவிதான

## தென் கிழக்குப் பல்கலைக்கழகம்: பழிவாங்கப்படும் மாணவர்கள்!



## வன்னி: தொடங்கிய இடத்துக்கே தள்ளப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள்!



நன்றி - நூலகத்திட்டம்



# நம்பியே கெடுவதுண்டு

வன்னிப் படை முகாம்களின் வீழ்ச்சி ஜனாதிபதியின் தேர்தல் வியூகத்திற்கு பலத்த அடி கொடுத்திருக்கிறது. சர்வதேச அரங்கிலோ, உள்ளரங்கிலோ விடுதலைப் புலிகளை கணக்கிலெடுக்காமல் எந்த நடவடிக்கையையும் அரசாலோ, சிங்கள அரசியல்வாதிகளாலோ, முன்னெடுக்க முயடிாது என்பது மீண்டும் ஒரு தடவை பலமாகவே உணர்த்தப்பட்டிருக்கிறது. அதுவும் அறிவு முதிர்ச்சியற்ற வெறும் பயங்கரவாதச் சிறுவர்களுடன் போர்புரிந்து வெற்றிக்கொடி நாட்டிய "சப்புமல் குமார" சத்தம் எதுவுமின்றி அடங்கிப் போயுள் ளார். இரண்டரை ஆண்டுகளாக அங்குலம் அங்குலமாக பெரும் உயிர், பொருள் இழப்புகளுக்கு மத்தியில் நாட்டிய வெற்றிக் கொடிகள் ஒரே வாரத்தில் பிடுங்கியெறிப்பட்ட நிதர்சனத்தை மறைக்கவும் முடியாமல் ஒப்புக்கொள்ளவும் முடியாமல் தவித்துப் போயிருக்கிறார்.

"இது எங்கள் உள்நாட்டுப் பிரச்சினை. நீங்கள் நுளம்புகளுக்கு மருந்து அடிப்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று உலக நாட்டவைக்கு எச்சரிக்கை விடுத்ததன் மூலம் கதிர்காமர் இலங்கை அரசை தருணம் பார்த்து இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கியிருக்கிறார். வெற்றி தங்கள் பக்கமே என்ற மயக்க நிலையில் விடுத்த எச்சரிக்கை இன்று பாதகமான விளைவுகளையே தேடித் தந்திருக்கிறது.

வெறும் பயங்கரவாதச் சிறுவர்கள், பட்டம் பயிற்சி அனுபவம் பெற்றவர்களை ஓட ஓட விரட்டிய சங்கதியை உலக நாடுகள் மௌனமாக, மகிழ்ச்சியாக ரசித்துக் கொண்டிருக்கின்றன. இப்போது கதிர்காமர் தனது ராஜதந்திர நடவடிக்கையை முன்னெடுக்க துணிந்தால் நிச்சயமாக ஐ.நா சபையில் கொஞ்சம் டி.டி.ரியும் மலத்தியோனும் ஒரு தெளிகருவியும் பரிசாகக் கிடைக்கலாம். அதை வைத்துக்கொண்டு நுளம்புக்கு எண்ணை அடிக்கும் வேலைகளை உடனடியாக ஆரம்பிக்கலாம்.

13 பேருக்காக நாட்டையே கொழுத்திய வீரர்கள் இன்று பதறிப்போய் நிற்கிறார்கள். இராணுவ முன்னெடுப்புகளால் ஒரு இனத்தின் உணர்வலைகளை அடக்க முயன்ற அரசு வரலாறு சந்திக்காத பாடத்தை கற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தத்தருணத்தில் ஜனாதிபதி அவர்கள் செய்மதியூடாக நாட்டு மக்களுடன் உரையாடுகிறேன் என்ற போர்வையில் அரச செலவில் தேர்தல் பிரச்சாரங்கள் செய்யத் தொடங்கியுள்ளார். குறிப்பாக யாழ்ப்பாண மக்களிடையே தன்னைக் கொண்டு செல்வதற்கு அரச ஊடகங்களை பயன்படுத்தி வருவது அவரது நேர்மையீனத்தையே காட்டுகிறது.

சந்திரிகா இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக வருவதால் நாட்டு மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைத்து விடப்போவதில்லை. சந்திரிகா வந்தாலென்ன ரணில் வந்தாலென்ன அவரவர் நன்மையும் அவரவரை சார்ந்தோர் நன்மையும் தான் அரச செயற்பாடுகளாக இருக்கப்போகின்றன. சாதாரண மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படவே போகிறார்கள். குறிப்பாக சிங்கள இளைஞர்கள் யுத்தக் களத்தில் தொடர்ந்தும், பகடைக்காய்களாக்கப்படப் போகிறார்கள். தமிழ் மக்கள் குண்டுவீச்சுகளுக்கும், வகை தொகையற்ற கைதுகளுக்கும் இலக்காகப் போகிறர்கள்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. அரசில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தால் அன்றி அரசியலமைப்பில் எந்த மாறுதலையும் பாராளுமன்றத்தின் மூலம் ஏற்படுத்த முடியாது. ஆனால், இந்த அடிப்படை விடயத்தை மறைத்து இன்று தீர்ப்பேன், நாளை தீர்ப்பேன் என்று மக்களை ஏமாற்றி வருடக்கணக்காக பொதி செய்திருக்கிறார் சந்திரிகா.

பொதி செய்வதில் பெரிதும் அக்கறைக் காட்டி உழைத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இந்த விடயம் பற்றி ஆரம்ப நாட்களில் கேட்ட போது: தம்பி அம்மையாரும் ஜி.எல்.பிரீசும் நேர்மையானவர்கள். தீர்வை அமுலுக்குக் கொண்டுவர அவர்கள் மாற்றுவழியொன்றை கையாள இருக்கின்றார்கள். அந்த வழியை இப்போது சொல்வது உசிதமல்ல என்று கூறினார். சட்டம் தெரிந்த அவர் சட்டவிற்பனரான பிரீசிடம் மாற்றுவழி இருக்கிறது என்று கூறுவதை ஏற்காமல் இருக்க முடியவில்லை.

நான்று வருடங்களின் பின் ஐ.தே.கவில் இருந்து பா.உ.க்கள் சிலர் ஆதரவு தந்தாலன்றி மாற்றம் கொண்டுவர முடியாது என்று எல்லோருக்கும் ஏற்கெனவே தெரிந்த உண்மையை அவருடன் சேர்ந்து பொதியை செய்தோரும் புதிதாக கண்டுபிடித்து மக்கள் முன் வைத்து வாக்கு கேட்டு மீண்டும் ஒரு முறை சந்திரிகாவை ஜனாதிபதியாக்கும்படி கேட்கிறார்கள்.

ஐ.தே.கவில் இருந்து சில பா.உ.க்கள் சந்திரிகாவின் 'சாதனை'யில் நம்பிக்கை வைத்து ஓடிவந்து கொண்டிருக்கிறார்கள்.

சந்திரிகாவின் தேர்தல் தந்திரங்கள் அமோகம். ஆனால், ஒரு விட பம் இன்று சந்திரிகா தமிழ் மக்கள் மேல் காட்டும் கரிசனையை இரண்டொரு வருடங்களுக்கு முன்னரும் கூட காட்டியிருக்கலாம். தடையேதும் அவற்றிற்கு இருந்ததாகத் தெரியவில்லை.

இடைக்கால நிர்வாக சபை, செய்மதித்தொடர்பு என்று தமிழ் மக்களை மேலும் முட்டாள் ஆக்க நினைக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா. இடைக்கால நிர்வாக சபையால் எந்தவிதப் பயனும் ஏற்படப்போவதில்லை. கிழக்கு மாகாணத்திலும், வன்னியிலுமுள்ள நகரங்களில் மட்டும் சிலர் தலைப்பாகையுடன் உலாவர வழிவகுப்பதைத்தவிர மக்களுக்கு நன்மை ஏதும் விளைந்துவிடப்போவதில்லை.

சிங்கள, தமிழ் மக்களின் துயரங்களில் கோட்டைகட்டும் ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலில் சிறந்த எதிர்வேட்பாளர் இல்லாத நிலையில் சந்திரிகா மீண்டும் பதவியைக் கைப்பற்றக்கூடும். ஆனால், முதலாவது தெரிவில் பெரும்பான்மையைப் பெறுவாரா என்பது கூடச் சந்தேகம் தான்.

மொத்தத்தில் அழிவு என்ற விஷ வட்டம் மீண்டும் சுழல ஆரம்பித்துள்ளது.

- விவேகி

# கட்சிமாறும் பச்சைவழி

விடுதலைப் புலிகள் வசம் அரசு கைப்பற்றியிருந்த வன்னித்தளங்கள் வீழ்ந்து கொண்டிருக்கும் இச்சமயத்தில் எதிர்க்கட்சியான ஐ.தே.கவிலிருந்து முக்கியமான 35க்கும் மேலான உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் அரசின் பக்கம் சாய்ந்து கொண்டிருப்பது ஒரு வினோதமான உணர்வலைகளை மக்கள் மத்தியில் பரவவிட்ட போதும், அரச தரப்புக்கு ஆறுதல் அளிப்பதாகவே இச்சமயத்தில் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

முக்கியமாக ஜனாதிபதி அம்மையார் ஜனாதிபதித் தேர்தலை அவசரமாகக் குறிப்பிட்ட காலம் வருவதற்கு முன்னரே நடத்திவிட துணிந்தது, தனது கட்சியுள் தனக்கெதிராக சதிச் செயற்திட்டமிட்டவர்களுக்கும், ஐ.தே.கவுடன் கூட்டுச்சேர்ந்து தனது அரசுக்கு கருவறுக்கத் துணிந்தவர்களுக்கும் அஞ்சியே என்பது ஏலவே தெரிந்த ஒன்று.

ஆனால், இப்போது 'தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குதல்' என்ற பெயரில் ஐ.தே.கட்சியிலிருந்து தனக்குச் சார்பாக இவ்வளவு வேகமாகக் காற்று வீசும் என்று ஜனாதிபதி அம்மையாரே எதிர்பார்த்திருக்க மாட்டார். 'வன்னி வீழ்ச்சி' என்ற ஒன்று தொண்டைக்குள் புகுந்து கொண்டு வில்லங்கத்தை ஏற்படுத்தாது இருந்திருக்குமானால், அரசதரப்பு கொண்டாட்டச் சிரிப்பு பெரிதாகவே ஒலித்திருக்கும் என்பதே அரசியல் அவதானிகள் கருத்து.

ஐ.தே.கவிலிருந்து தனக்குச் சாதகமானவர்களை இழுப்பதற்கு அம்மையார் மிக நுட்பமாக மேற்கொண்ட முயற்சிகள் இவ்வளவு வெற்றிகரமான விளைவை ஏற்படுத்தும் என்று அவரே நினைத்திருக்கமாட்டார்.'

ஆனால், ஐ.தே.கவிலிருந்து அரசு தரப்புக்கு வருவோருக்குத் தலைமைதாங்கும் சரத் அமுனுகம, தனது குத்துக்கரணத்தை நியாயப்படுத்துவதற்கு ஒரு தத்துவமூலாம் பூசுகிறார். அவர் பூசும் தத்துவ மூலாம், "நாம் ஐ.தே.கவிலிருந்து வெளியேறவில்லை. இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் நாட்டுக்குத் தேவைப்படுவது ஒரு தேசிய அரசாங்கமே. முன்னைய கட்சி அரசியல் வெறும் சுயநல நோக்கில் மேற்கொள்ளப்பட்டு நாட்டைக் குட்டிச்சுவராக்கியுள்ளது. எனவே பலவற்றின் தீர்வுக்கு ஏற்ற ஒரு மாற்று அரசியலை ஏற்படுத்துவதே எமது நோக்கம்.

இந்த நோக்கில் ஏற்படுத்தப்படும் அரசாங்கத்தை நான் "வானவில் கூட்டணி" அரசு என்று கூறுவேன். வானவில் பல வர்ணங்களைக் கொண்டது. இந்த வானவில் அரசுக்கு பச்சை வர்ணத்தைக்கொடுப்போம்" என்று கூறும் அவர் மேலும் இது பற்றிக் கூறுகையில் "நாம் பூசும் பச்சை நிறம் எனது டட்லி சேனநாயக்கா, ரணசிங்க பிரேமதாச, டி.பி.விஜயதுங்க போன்றவர்கள் காட்டிய வழியில் செல்வதற்கும்" என்றும் கூறியுள்ளதோடு, "நாங்கள் மீண்டும் ஐ.தே.கவிற்குள் வருவோம். அதை எவராலும் தடுக்க முடியாது என்றும் அழுத்தியுள்ளார்.

இவ்வாறு கலாநிதி சரத் அமுனுகமவும் அரவது சகாக்களும் கட்சி மாறியது பற்றி பத்திரிகையாளர் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரசிங்கவிடம் கேட்ட போது "எங்களுக்கு மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பெருஉதவி செய்துள்ளது. அதாவது எமது கட்சிக்குள் இருந்த அழுக்குகளைச் சுத்தம் செய்ய உதவியுள்ளது" என்று கருத்து தெரிவித்தார். அதேவேளை கட்சியின் செயல ளர் நாயகம், "ஐ.தே.க. கட்சி மிகுந்த அரசியல் ஒழுக்கம் பேணுவது. ஆகவே இன்று சட்ட நடவடிக்கை எடுக்க எமது சட்ட வல்லுனர்களின் ஆலோசனையை கேட்டுள்ளோம்" என்றார்.

தற்போது கலாநிதி அமுனுகமவால் முன்வைக்கப்பட்டள்ள மாற்று அரசியல் இயக்கத்தின் ஸ்தாபர்களில் ஒருவராக இருப்பவர் எல்லா குணவன்ஸ தேர என்பவர் ஆவர். இவர் இது பற்றிக் கருத்து தெரிவிக்கையில், நாம் ஆரம்பித்துள்ள இவ்வரசியல் இயக்கம் தேவையான காலத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஆரம்பம் மட்டுமே. இன்னும் வேறு அரசியல் கட்சிகளும், இதில் சேர்ந்து கொள்ளும்போது இது ஒரு பலம் மிக்க ஒன்றாக அணிதிரளும்" என்று கூறினார்.

சரத் அமுனுகம தற்போதுள்ள ஐ.தே.க தலைவர் ரணில் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் தலைமைக்கே பொருத்தமற்றவர். அவரோடு கூட உள்ளவர்கள் சாதாரணமானவர்கள். அத்தோடு அரசியல் மாபியாக்கள்" என்றும் சாடியுள்ளார்.

இன்று அரசு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நேரத்தில் தேசிய அரசாங்கம் என்பது வரவேற்கத்தக்க ஒன்றே. ஆனால், இத்தேசிய அரசாங்கம் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை மேலும் அடக்கி ஒடுக்காது, பேரினவாதவழியில் செல்லாததாக அமையும் பட்சத்திலேயே அது தேசிய அரசாங்கமாக கணிக்கப்படலாம் என்பதே அரசியல் அவதானிகள் கருத்தாகும்.

- எம்.பி.எம்.

# பலமும் அவலமும்

கடந்த வாரம் சித்தன்கேணிச் சந்தியில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் தனது மெய்ப்பாதுகாவலர் சகிதம் துப்பாக்கியுடன் வந்து மோட்டார் சைக்கிளை நிறுத்தினார். பின்னால் பிக் அப் ஒன்றும் வந்து நின்றது. பிக்அப்பிலிருந்து நான்கைந்து பேர் துப்பாக்கிகளுடன் குதித்தனர். குதித்து மூலைக்கு மூலைபோய் துப்பாக்கிகளை நீட்டியவாறு நின்றனர். மோட்டார் சைக்கிளில் வந்தவர் பிக்அப்பைப் பார்த்து கெதியா கெதியா என்றார். உடனே பிக் அப்பிலிருந்து பசை வாளியுடன் இருவர் குதித்தனர். 'உங்கள் பலம் நாட்டின் பலம்' 'உங்கள் கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளிக்கிறார்' போன்ற அம்மையாரின் படத்துடன் கூடிய சுவரொட்டிகளை பசைவாளியுடன் இறங்கியவர்கள் ஒட்டினர். அப்போது சந்தியில் நின்ற ஒரு வயோதிபர் என்ன தம்பி போஸ்டர் ஒட்டுகிறீர்கள் என்றார். அங்கு வீதியில் நின்ற இளைஞர்களில் ஒருவர், உங்கள் பலம் நாட்டின் பலமாம் என்றார். உடனே வயோதிபர் எழுத்துத் தான் பிழை. பலம் என்பதை அவலம் என்று மாற்றினால் நன்றாக இருக்கும் என்றார். அத்துடன் உங்கள் நகரை சுத்தமாக வைத்திருங்கள் என்ற விளம்பரப் பலகையின் கீழ் உள்ள வழிகாட்டி (வீதிக்குறியீட்டு) சுவரின் மீதும் அம்மையாரின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வீதி வழிகாட்டிக்கு இப்போது தான் வெள்ளை அடிக்கப்பட்டுள்ளது இன்னமும் வீதிகளின் பெயர்கள் எழுதப்படவில்லை.

# உங்களுக்குப் புரிகிறதா?

'உந்த சிங்களப் பொலிஸ் நாய்கள் ஏன் உதிலை நிற்கிறார்கள்?" கேட்டவர் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம். கூறிய இடம் யாழ்ப்பாணத்தில் 1977ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம்.


சிங்கள இராணுவம் நாலாம் மாடியில் என்னை அடைத்து வைத்துச் சித்திரவதை செய்தது- கூறியவர் மாவை சேனாதிராஜா. அதே சிங்கள இராணுவம் கூட்டணித் தலைவர் ஒருவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளது 1999ம் ஆண்டு. கடந்த 26.10.99 அன்று கொழும்பில் காலமான வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைவர். அ. ஸ்ரீபாஸ்கரன் அவர்களுக்கு யாழ். மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரியும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பதிகாரியுமான மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்தன அஞ்சலி செலுத்தியுள்ளார். அவர் தனது அஞ்சலியில் பாஸ்கரனின் மறைவு யாழ் மக்களுக்குப் பேரிழப்பாகும் எனக் கூறியுள்ளார். அத்துடன் ஸ்ரீ பாஸ்கரனின் இறுதிச் சடங்கு அன்று வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைவர் அ. ஸ்ரீ பாஸ்கரன் அவர்களுக்கு சிங்கராஜாப் படையணியினரின் கண்ணீர் அஞ்சலி என்ற பாரிய பானரும் மல்லாகம் சந்தியில் தொங்க விடப்பட்டிருந்தது.

அப்படியானால் இராணுவம் இப்போது நாலாம் மாடிச் சித்திரவதைகளை எல்லாம் நிறுத்தி விட்டதா அல்லது உதயசூரியன் சிங்கராஜாக்களுடன் இணைந்து விட்டதா?

புரிந்தால் கொஞ்சம் சொல்லுங்களேன்.

நன்றி - நூலகத்திட்டம்





## தொண்டமானின் மறைவு:

# புதிய தலைமுறையின் முன்னுள்ள சவால்!

சாவு மனிதர்களைப் புனிதர்களாக்கி விடுகிறது என்பார்கள். இறந்தவர் விமர்சனங்கட்கு அப்பாற்பட்ட புனிதராக்கப்படுகிறார். அதுவும் அரசியலில் என்றால் இந்தப் புனிதமாக்கல் விவகாரத்திற்கு எல்லையே கிடையாது. இறந்தவர் வாழ்ந்த காலத்தில் அவரை விட உத்தம புருஷர் ஒருவர் இருந்தது கிடையாதென்று அவரது எதிரிகளே கூடப் புகழ ஆரம்பித்து விடுகிறார்கள்.

இறந்து போன ஒருரைப் பற்றிய, அவர் இறந்து போயிருக்கின்ற துயரத்தால் அவரைச் சார்ந்தவர்கள் பீடிக்கப்பட்டிருக்கிற ஒரு சூழலில் விமர்சனத்தில் இறங்குவது ஒரு நாகரிகமான செயல் அல்ல என்பதில் ஓரளவு உண்மை இருப்பதை மறுக்க முடியாது தான். ஆனால் அதற்காக அவரைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லிப் புகழலாம் என்பதை எப்படி எடுத்துக் கொள்வது? அவரது நெருங்கிய உறவினர்களும் உற்றார்களும் நண்பர்களும் அப்படிப் புகழ்வதை வேண்டுமானால் நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் அவரது சாவிலே தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்காகப் புகழ்பவர்களை...?

அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் காலமானபோது பொ.ஐ.மு, ஐ.தே.க தலைவர்கள் பேசிய பேச்சுக்களைக் கேட்ட போது இந்த எண்ணங்கள் மனதில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர். ஒரு பாரிய தொழிற்சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அவர் ஒரு சக்தி வாய்ந்த தொழிற்சங்கவாதி. பாராளுமன்ற ஆசனங்கள் பலவற்றைத் தரக் கூடிய வகையில் வாக்குப்பலம் கொண்ட அரசியல்வாதி என்ற முறையில், ஒரு சக்தி வாய்ந்த அரசியல்வாதி. ஆளுங்கட்சி எதிர்க்கட்சி இரண்டுமே தவிர்க்க முடியாத அளவிற்கு அனுசரித்துப் போக வேண்டிய ஒருவராக மதிக்கப்பட்டவர். தோட்டத்தொழிலாளர்கள் மத்தியில் மற்றெந்த தொழிற்சங்கத் தலைவரையும் விட அதிகளவு செல்வாக்குப் பெற்ற ஒரு தலைவராக இருந்தவர். தனது நலன், கட்சியின் நலன், தான் சார்ந்த மக்களின் நலன், இனநலன் என்ற அடிப்படையில் வெற்றிகரமாகவும் துணிச்சலாகவும் காரியார்த்தமாக செயற்படும் சாணக்கியம் கைவரப் பெற்ற ஒரு தலைவர் அவர்.

அவரது மறைவு அவரது தொழிற்சங்கத்தையும் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களையும் பெரிதும் பாதித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவரது இழப்பின் துயரத்தை மலையக மக்கள் வெளிப்படுத்திய விதத்தை அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகளைக் கண்டவர்கள் அறிந்திருப்பார்கள். அவரது அரசியல் சார்புக்கும் அப்பால் அவர் மீதான அபிமானத்தை அம்மக்கள் வெளிப்படுத்தியதும் அல்லாமல் தீபாவளிப் பண்டிகையை கூட சோகதினமாக அனுஸ்டித்தார்கள் என்பது முக்கியமான ஒன்று என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் அவரை நெல்சன் மண்டேலா என்றும், மகாத்மா காந்தியென்றும் ஒப்பிட்டு அரசியல்வாதிகள் பேசுகையில் மலையக மக்களின் துயரத்தை வெறும் கேலிக் கூத்தாக தமது அரசியல் லாபத்துக்கான பிரச்சாரமாக பயன்படுத்த அவர்கள் முயல்வதை சகிக்க முடியவில்லை. இத்தகைய புகழுரைகள் வெறும் வெற்றுப் புகழுரைகள் மட்டுமல்லாமல் தீய உள் நோக்கம் கொண்டவையும் கூட. மலையக மக்களை ஏமாற்றவும் அவர்களது தலைவரின் பெயரால் அவர்களை விலை பேசவும் எண்ணுவோரின் செயல்கள் இவை. ஒருவரைப் புனிதராகவும் மாமனிதராகவும் உயர்த்தி விடுவதன் மூலம் அவரது ஸ்தானம் நிரப்பப்பட முடியாதது என்ற ஒரு பிரமையையும் ஏற்படுத்தி விடுகிறார்கள். புதிய தலை முறைக்கு அவரை ஒரு வழிபாட்டுக்குரியவராக காட்டி அந்தத் தலை முறையைக் கருவறுக்க முயல்கிறார்கள். ஆம், தீவிரமான விமர்சனத்தையும் தாக்குதலையும் விட ஆபத்தானதும், அஞ்சப்பட வேண்டியதும் இந்த வெற்றுப் புகழுரைகளுக்குத்தான்!



தொண்டமான் மலையக மக்களின் உரிமைகளுக்காக் குரல் கொடுத்தவர். அவர்களது உரிமைகள் பலவற்றை வென்றெடுத்தவர். ஆயினும் அவர் தனக்கிருந்த பலத்தையும் மக்கள் ஆதரவையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி இன்னும் எவ்வளவோ செய்திருக்க முடியும். ஆனால் ஏதேதோ காரணங்களுக்காக அவர் அவ்வாறு செய்யவில்லை என்ற விமர்சனம் அவர் மீது பலராலும் முன் வைக்கப்பட்டிருக்கிறது. சரிநிகரும் கூட அவ்வாறு விமர்சனம் செய்திருக்கிறது.

தோட்டத் தொழிலாளர் அரசியல் உரிமை, பிரஜா உரிமை, குடியிருப்பு உரிமை மற்றும் ஊதியப் பிரச்சினைகள் பலவற்றிலும் தொண்டமான் செய்திருக்கக் கூடிய பலவற்றைச் செய்யவில்லை என்று விமர்சிக்கின்ற போதும் அவர் அம் மக்களுக்காக ஆற்றிய பங்களிப்பை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

தொண்டமானது அரசியல், அவர் தமக்கென தெரிவு செய்து கொண்ட போராட்ட வழி என்பவற்றினூடாக அவர் சாதிக்க விரும்பியவற்றை சாதிக்கப் பயன்படுத்திய அரசாங்கப் பதவி அவரது செயற்பாட்டின் அளவை மட்டுப்படுத்துவதாக இருந்தது. இறுதிக் காலங்களில் அவர். ஒரு தொழிலாளர் தலைவராக மலையக மக்கள் தலைவராக செயற்பட்டதைவிட ஒரு அரசாங்க அமைச்சராக இருந்து செயற்பட்டதன் மூலம் அதிகம் சாதிக்க முடியும் என்ற கருத்தை உறுதியாக நம்பிச் செயற்பட்டு வந்தார். ஐ.தே.கவுடனும் பொ.ஐ.முவுடனும் அவர் கொண்டிருந்த உறவும் அமைச்சர் பதவியை ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஒரு ஐ.தே.க தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டே பெற்றுக் கொண்ட விதமும் அவர் அந்தக் கருத்தில் எவ்வளவு ஆர்வமாக இருந்திருக்கிறார் என்பதனைக் காட்டவல்லன.

தொண்டமானின் அரசியல் வரலாறு அரை நூற்றாண்டுகளைக் கடந்த வரலாறு. இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமை பிரஜா உரிமை முதல் அண்மைய இன ரீதியான ஒதுக்கல் வரையான பல பிரச்சினைகளைக் கண்ட வரலாறு அது. அவர் அமைச்சராக இருந்த 22 ஆண்டுகள் அந்த வரலாற்றில் அவரது அரசியல் தீவிரத்தனம் குறைந்த வரலாறு எனலாம். ஆயினும் துணிவும் நினைத்ததைத் தனக்குச் சரியெனப்பட்டதை நேரடியாகவே அச்சமின்றி வெளிப்படுத்தும் ஆளுமையும் அவருக்கு இருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக இரண்டு ஆளுங்கட்சிகளும் கொண்டிருந்த கருத்துக்களுடன் அந்தக் கட்சிகளின் அரசாங்கங்களில் அமைச்சராக இருந்தபடியே வெளிப்படையாக முரண்பட்டவர் அவர். புலிகளுடன் பேச வேண்டும் என்பதை மட்டுமல்ல அதைத் தானே முன்னின்று செய்யவும் தயார் என்றும் அவர் அறிவிக்கவும் செய்தார். சிங்கள இனவாதத்தையும் இனவாதிகளின் நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக எதிர்த்து வந்தார். ஆயினும் அவரது அரசாங்கத்தில் அங்கம் வகித்தல் மூலமாக மக்களுக்குச் சேவையாற்றல் என்ற கோட்பாடு காரணமாக அவரது போர்க்குணம் பெரிதும் மழுங்கி இருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஊழல், அதிகார துஷ்பிரயோகம், தொழிலாளர் போராட்டங்களை தமது கட்சி மற்றும் அணி நலன்களுக்காக தவறாக வழி நடத்தியது போன்ற பல்வேறு விமர்சனங்கள் அவர் மீது இருந்தன. இருக்கின்றன. ஆயினும் இவை அனைத்தையும் மீறி அவர் அங்குள்ள மக்களின் அபிமானத்தைப் பெற்றவராக இருந்தார். கட்சியின் செல்வாக்கு அவரது அரசியல் அணிச் சேர்க்கைகளால் சரிந்து கொண்டிருந்த போதும் ஒரு தனி நபர் என்ற விதத்தில் அவரது செல்வாக்கு வீழ்ச்சியைப் பெற்றுவிடவில்லை என்பதை அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தக் கூடிய மக்கள் கூட்டம் வெளிப்படுத்தியது.

அவரது இழப்பின் வெற்றிடம் உடனடியாக நிரப்பக் கூடிய ஒன்றாகத் தோன்றவில்லை. அவரது செல்வாக்கும் ஆற்றலும் ஆளுமையும் அனுபவமும் கொண்ட ஒரு தலைமையை இதொ.காவோ வேறெந்த மலையக அமைப்புகளோ வளர்த்தெடுக்கவும் இல்லை. ஆக இந்த வெற்றிடம் ஒரு சில ஆண்டுகட்கு ஒரு வேளை ஒருதசாப்த காலத்திற்கு நீடித்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

> தொண்டமான் உயிருடன் இருந்த காலமெல்லாம் ஆளுங்கட்சிக்கு மலையக மக்களை அணி திரட்டித் தரும் ஒரு கருவியாக அவர்களால் பயன்படுத்தப்பட்டார்.
> இறந்த பின்பும் கூட அவர்களால் அவ்வாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறார்.

ஆனால் இவ்வளவிற்குப் பிறகும் தொண்டமானை அரசியல்வாதிகள் புகழ்கின்ற விதத்தை நினைக்கையில் எரிச்சலடையாமல் இருக்க முடியவில்லை. அவருக்கு அரச மரியாதை தந்து சுதந்திர சதுக்கத்தில் அடக்கம் செய்தது தொண்டமானோ அவர் பிரதிநிதித்துவப்படுத்திய மலையக மக்களுக்கோ பெருமை தருகிற விடயம் என்பதை விட பொ.ஐ.முவை சர்வதேச அரங்கிலும் உள்நாட்டிலும் பெருமைப்படுத்துகிற ஒரு விடயம் என்றே சொல்ல வேண்டும். அவர் அந்தக் கௌரவத்திற்கு எந்த விதத்திலும் தகுதியற்றவர் அல்ல. ஆனால் அரசாங்கம் அதைச் செய்ய முன் வந்தது. எதிர்வரப் போகும் தேர்தலில் மலையக மக்களின் வாக்குகள் தமக்குக் கிடைப்பதை உறுதி செய்து கொள்வதற்கான ஒரு நாடகமேயன்றி வேறல்ல.

அவர் உயிருடன் இருந்த காலமெல்லாம் ஆளுங்கட்சிக்கு மலையக மக்களை அணி திரட்டித் தரும் ஒரு கருவியாக அவர்களால் பயன்படுத்தப்பட்டார். இறந்த பின்பும் கூட அவர் அவர்களால் அவ்வாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறார்.

தொண்டமான் அவர்களின் மரணமும் அவரது அரசியல் வரலாறும் அதன் தோல்விகளும் வெற்றிகளும் ஆழமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. அந்த ஆழமான கவனிப்பு வெளிப்படுத்தும் புரிதல்களின் ஊடாக மலையகத்திற்கு ஒரு புதிய தலைமை கட்டி எழுப்பப்பட வேண்டும். அந்த தலைமை தொண்டமானின் செல்வாக்கையும் ஆற்றலையும் ஆளுமையையும் கொண்டதாகவும் அதேவேளை மலையக மக்களின் ஆதரவுப் பலத்தினை ஒரு அரசியல் சக்தியாக உரிமைகளை வென்றெடுப்பதற்கான மாபெரும் சக்தியாக வழிகாட்டுவதாகவும் உருவாக வேண்டும். பாராளுமன்ற ஆசனமும் அதிகாரமும் அரசாங்கத்தின் பதவிகளும் வழங்கும் பிச்சைகளால் ஒரு தேசிய இனத்தின் தேவைகளை இனியும் நிறைவு செய்து விட முடியாது என்பதைப் புரிந்து கொண்டு அந்தத் தலைமை உருப் பெற வேண்டும். தொண்டமானின் இறுதிக் கால அரசியலில் இந்த உண்மையை அவர் நிச்சயம் உணர்ந்திருக்க முடியும். மலையக மக்கள் முன்னணியின் உருவாக்கம் இந்த உண்மையின் ஒரு வெளிப்பாடுதான். ஆனால் அவர் தெரிவு செய்து கொண்ட வழி முறை ஒரு பொறிபோல அவரை அதிலிருந்து மீள முடியாமல் செய்து விட்டிருந்தது.

புதிய தலைமுறை இதிலிருந்து மீண்டு நிமிர்ந்து நிற்கத் தயாராகுமா?

நன்றி - நூலகத்திட்டம்



# "சிங்களவர்களே விழிப்புறுங்கள்"

**- சிங்கள பௌத்த பேரினவாதம்**

**நடந்து வந்த பாதை குறித்த சில விவரக்குறிப்புகள்**

'வீரவிதான' தன்னுடைய பன்முகப்படுத்திய பேரினவாதச் சிந்தனையை விசாலப்படுத்தும் வகையிலே திறம்படச் செயலாற்றி வருவது அனைவரும் அறிந்த துரதிஷ்ட நிகழ்வாகும். எண்ணிக்கையில் பெரிதாக இல்லாதுவிடினும் தனது பரப்புரைகள் மூலம் தனது பலத்தை விஸ்வரூபமாகக் காட்டி வருவது 'சமாதானத்திற்கான யுத்தம்' செய்யும் அதிகாரச் சக்திகளின் அரவணைப்பின் வெளிப்பாடு என்பது பரகசியமானது. இந்நிலையிலே கடந்து சென்ற வரலாற்றிலே 'நடந்து வந்த பாதை' தன்னைத் திரும்பிப் பார்ப்பதன் மூலம் பேரினவாத அபாய நிலைத் தோற்றப்பாட்டைத் தெளிவுற அறிவது காலத்தின் கட்டளையாகிறதல்லவா?


அண்மைக்காலமாகப் பெரும்பான்மையினப் பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரங்களாகவும், சுவரொட்டிகள் / பதாதைகள் எனத் தெருக்களெங்கும் "சிங்களவர்களே விழித்தெழுங்கள்" என்று உரத்துக் கருத்து விதைப்புச் செய்யப்படுவதை நாம் காணலாம். இந்த மாபெரும் சொற்றொடரின் "கொப்பிறைட்" இன்றைய சிங்கள 'வீரவிதான"வினதோ, அன்றேல் இதர பேரினவாதப் பீரங்கிகளினதோ அல்ல என்பதை வரலாற்றுத் தகவல்கள் நமக்குச் சொல்லி நிற்கின்றன.

"அரசன் துட்டகெமுனுவை ஆத்மீக ரீதியாக நீங்கள் தரிசித்து பௌத்தத்தையும், தேசிய வாதத்தையும் இருளில் இருந்து மீட்ட அம் மகா மன்னனின் சிந்தனைகளோடு உங்களை அடையாளம் காணுங்கள்" என்று விபரித்துச் "சிங்களவர்களே! விழிப்புறுங்கள்!" என்ற தலைப்பிலே "இலங்கையின் பௌத்த மறுமலர்ச்சித் தந்தை"யாக "வரலாறும் சமூகக்கல்வி"யும் பாடத்திலே போதிக்கப்படும் "அநகாரிக தர்மபால" அழைப்பு விடுத்திருந்ததாகப் பிரபல சிங்கள வரலாற்றாசிரியரான டபிள்யூ. ஐ. சிறிவீர எழுதியிருப்பது இவ்விடத்தில் நினைவூட்டத்தக்கது.

பௌத்தத்தின் 2500 ஆண்டுகால நினைவைக் குறிக்கும் பௌத்த ஜெயந்தியை ஒட்டி எழுதப்பட்ட "விஹாரையில் புரட்சி" (The Revolt in the Temple) என்ற நூல் 1953ல் வெளிவந்தது. டீ. சீ. விஜயவர்த்தனவால் எழுதப்பட்ட இந்நூல் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துவதை நூல் பூராகவும் காணக் கிடக்கின்றது. "இலங்கையின் வரலாறே சிங்கள இனத்தின் வரலாறு தான். இவற்றைத் தனித்தனியாக நோக்கினால் இவற்றில் ஒரு முக்கியத்துவமும் இல்லை" என்று இதன் முன்னுரையில் கூறப்பட்டிருப்பது ஈழத் தமிழர் இறைமைக்கு மட்டுமல்ல, இலங்கையில் வாழும் ஏனைய முஸ்லிம், மலையக மக்களுடையதும் இறைமைக்கு அன்றே விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"விஹாரையில் புரட்சி" என்ற நூலுக்கு முன்னுரை எழுதியிருந்தவர் பௌத்தத்தின் அதியுயர் பீடமாகக் கருதப்படும் கண்டி மல்வத்தை பீடாதிபதியாக அப்போது விளங்கிய 'வண. பஹமுனி சிறிசுமங்கல' அவர்கள். அதில் அவர் "....500 பிக்குகள் துட்டகெமுனுவுடன் சேர்ந்து விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டனர்..." என்று எழுதுவதன் மூலம் சாதாரண மானுட வாழ்வைத் துறந்து காவியுடுத்துத் துறவு பூண்டவர்களில் பலரும் "தீவிர" அரசியலில் முனைந்து செயற்படுவதையும், மஹா சங்கத்தினரின் அரசியல் தலையீட்டையும் "ஆதாரபூர்வமாக" நியாயப்படுத்தியிருக்கிறார் எனக் கூறத் தோன்றுகிறது. 700 பக்கங்களைக் கொண்ட இப்பெரிய நூல் ஹிட்லரின் "மெயின் காம்ப்"ஐ ஒத்தது எனக் கூறப்படுகிறது.

மேலும் இன்று "தமிழர்களைத் தலைநகரிலிருந்து மட்டுமல்ல மலையகத்திலிருந்தும் விரட்டியடிக்க வேண்டும் என்று கங்கணங்கட்டிப் பணியாற்றும் "வீரவிதான"வின் முன்னோடிகளாகப் பல அமைப்புக்கள் செயற்பட்டதை வரலாறு சொல்லி நிற்கிறது. இம்முன்னோடிகளுள் ஒன்றான "திரி சிங்கள பெரமுன" என்பது அப்போது களனியில் நடத்திய கூட்டமொன்றில் உரையாற்றிய "தேவ மொத்தீவ அமர வாஞ்ச தேரோ" அவர்கள், "உங்கள் நாடு, சமயம், பண்பாடு என்பவற்றில் உங்களிற்கு அன்பிருந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடினும் அதைப் பொருட்படுத்தாது தமிழரை இலங்கையிலிருந்து துரத்தியடியுங்கள். எவரது உடலிலும் ஒரு துளியேனும் சிங்கள இரத்தம் இருப்பினும் தமிழரைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கக் கூடாது. "தமிழர்கள் எங்களது முதன்மையான எதிரிகளாவர்" என்று இன்றைய 'வீரவிதான"வுக்கு அன்றே வழங்கப்பட்ட தர்மபோதனையாகத் தென்படுகிறது.



1983 கலவரத்தின் போது

'சுதந்திர இலங்கையின் பிதாமகர்' எனப் போற்றப்படும் டொன் ஸ்டீபன் சேனநாயக்காவை 1951ல் "அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்" தூதுக் குழுவினர் சந்தித்துத் தமது கோரிக்கைகளை வெளிப்படுத்திய வேளையில் "புத்தம், தர்மம், சங்கம் எனும் மும்மணிகளோடு பௌத்தத்திற்கு நான்காவது மணியாக 'அரசாங்கம்' என்பதையும் சேர்க்கப் போகின்றீர்களா?" என்று வினாத்தொடுத்த பெரிய சேனநாயக்கா இன்று வரை தமிழ்த் தேசியத்தின் ஆளுபுலத்தைத் துண்டாடும் சிங்களக் குடியேற்றக் கொள்கையின் பிதாமகராகவும் இருப்பது ஸ்ரீ லங்காவின் அரசியல் வரலாறு எனும் துன்பியல் நாடகத்தின் முக்கிய குணாம்சமாகிறது.

மூத்த சிங்கள வரலாற்றுப் பேராசியரான கே. எம். டீ. சில்வா அவர்கள் "...சிங்களவர் பெரும்பான்மை இனமாய் இருப்பினும் தாம் ஒரு சிறுபான்மை இனமெனத் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள். மக்களாட்சி என்பது பெரும்பான்மை முடிவெனினும், சிறுபான்மையினரின் இசைவையும் பெறுதல் வேண்டும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. சிங்களவர்கள் தம் எண்ணிக்கைப் பலத்தின் அடிப்படையிலேயே அனைத்தையும் தீர்க்க விரும்புகின்றனர். அத்துடன் பௌத்தத்தைத் தம் இனத்தோடு பின்னிப்பிணைத்தே அடையாளங்காண விரும்புகின்றனர்" என்று சிங்களப் பேரினவாதத்தின் பூதாகரத் தோற்றப்பாட்டை "உளவியல்" அணுகுமுறையிலே ஆராய்ந்து கூறியிருப்பதும் இன்றைய காலகட்டத்தில் எண்ணிப் பார்ப்பது பொருத்த மானதாகின்றது.

இந்த வரலாற்றுப் பின்னணியிலேயே ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிறைவேற்றதிகார ஜனாதிபதிகளும் தம்மைப் பௌத்த புனிதர்களாகப் பாவித்துக் காலங்காலமாகக் கருத்துக்களைக் கூறி வந்திருப்பதைக் காணலாம். "போர் என்றால் போர். சமாதானம் என்றால். சமாதானம்" என்று 'தம்மதீப'வில் ஜே. ஆர். கூறியிருக்க, தான் ஒன்றுக்கும் சளைத்தவரல்ல என்பதைக் காட்டச் "சமாதானத்திற்கான யுத்தம்" செய்து "வெற்றி உறுதி' என்று புத்தாயிரமாம் ஆண்டின் புதிய அதிபராக அம்மணியும் பிரியப்பட்டு நிற்கின்றார். "ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்". ஆகவே, ஸ்ரீ லங்காவின் ஆட்சியதிகாரமுள்ளவர்கள் செயற்பட்டு வருவது முற்றுப்புள்ளி வேண்டி நிற்கும் தொடர்கதையாகி நிற்கிறது.

இன்று தீராத "ஒற்றைத் தலைவலி"யாகத் தோற்றம் பெற்றுள்ள இனப் பிரச்சினை தொடர்பான தக்கதொரு விளக்கத்தை 22.11. 1979ல் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது "சிந்தனைச் சிற்பி" சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் கூறியது இவ்விடத்தில் மீள நினைவூட்டப்படுதல் அவசியமாகின்றது. "புனித பௌத்த தத்துவங்களின் அடிப்படையில் தமிழ் சிங்களப் பிரச்சினையை அணுகுகின்றேன்" என்று அவர் பின்வருமாறு பௌத்த மெய்யியலில் ஈழத் தமிழர் இறைமையின் மீள் நிறுவலைக் "கதிர் வீச்சு" ஆக வலியுறுத்துகின்றார்.

"இரு இனங்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளே துக்கம் ஆகும். ஒன்றுபட்டு வாழமுடியாத எம்மிரு இனங்களையும் (1833ல்) ஒன்றாக இணைத்த பிரித்தானியரின் செயலே இத்துக்கத்துக்குரிய துக்கோற்பத்தி ஆகும். வரலாற்றுத் தீர்வுப்படி (1619க்கு முன் இருந்தது போல்) இரு இனங்களும் மீண்டும் தனித்தனியே பிரிந்து வாழ்வது தான் துக்க நிவாரணம் ஆகும். இரு அரசுகளையும் - தமிழீழ அரசு, சிங்கள அரசு - தனித்தனியே மீள்வித்துப் புனரமைப்பது தான் துக்க நிவாரண மார்க்கம் ஆகும்" என்ற அளப்பரிய வியாக்கியானத்தை மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை வேண்டி நிற்கின்ற இவ்வேளையிலே ஈழத் தமிழ் மக்கள் தங்கள் மனதில் நன்கு பதித்துச் சிந்தித்துச் செயலாற்ற விழைவது அவசியமானதும், அவசரமானதும் ஆகும்.

"சமாதானம்" என்ற வார்த்தையே இன்று பலராலும் உச்சரிக்கப்படுவதாக அமைந்து வருவது கண்கூடு. இது நிரந்தர கௌரவமான சமாதானத்தை வேண்டியதா அல்லது இடைக்கால "இடை வேளை" கருதியதா என்ற சிந்தனை எழுவது இன்றைய நிகழ்வுகளைக் குறிப்பாகச் "சமாதான" கோஷங்களைக் கேட்கையில் தவிர்க்க முடியாததாகின்றது. "சமாதானத்திற்கான யுத்தம்" நடைபெறுகின்ற தீவிலே தேர்தல் கலாசாரத்தைக் கருத்திற் கொண்டே சமாதானக் கலாச்சாரம் பல்வேறு தரப்பாலும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வேளையிலே "விக்கிரமாதித்தன் கதை" பாணியிலே பேரினவாதம் வீறுகொண்டெழச் செய்யப்பட்டு, அதிகாரமுள்ளவர்களின் "செல்லப்பிள்ளை"யாக வளர்த்தெடுக்கப்படுவது பிறக்கின்ற புத்தாயிரமாம் ஆண்டினை வரவேற்கும் நல்ல சகுணமல்லவே!

"சமூகத்தில் சீர்திருத்தம், சத்தங்கள் போடுவதாலோ, கோஷங்கள் எழுப்புவதாலோ, குறை கூறுவதாலோ, பிறரைப் பழித்துரைப்பதாலோ, புதுக் கட்சிகளை ஏற்படுத்துவதாலோ கிட்டுவதில்லை. ஆனால், மக்கள் சிந்தனையைத் தூண்டி, கருத்துக்களை முன்னேறச் செய்வதினால் தான் அது தித்திக்கும். எங்கு கருத்துச் சரியாக இருக்கின்றதோ அங்கு சரியான செயல் வந்துவிடும்" என்று 'ஹென்றி ஜோர்ஜ்' என்ற ஆங்கிலேய அறிஞரின் கூற்றைக் கருத்திற்கொண்டு திடமான பணிகளை முன்னெடுப்பதில் தான் ஈழத் தமிழ்த் தேசியத்தின் இருப்பின் தொன்மை பேணப்படுவதும், நாளைய சந்ததியேனும் நிரந்தர, கௌரவமான சமாதானத்தை அனுபவிப்பதும் தங்கியிருக்கின்றது என்பதை உரியவர்கள் உரத்துச் சிந்தித்துச் செயலாற்றுவது நிதர்சனமான தேவையாகின்றது.

*கோ. துரைகுமாரன்*

---

## கை விட்ட கதை!

வடக்கு தெற்கு உறவுப்பாலம் நிகழ்ச்சியின் கீழ் யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் சில மாணவ மாணவியர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். கொழும்பில் இவர்கள் பல்வேறு இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்ட போது இவர்களுக்குத் துணையாக நன்கு தமிழ் தெரிந்த இராணுவ கப்டன் ஒருவரும் பெண் சிப்பாய் ஒருவரும் கூடவே சென்று வந்தனர்.

மாணவமாணவியர் யாழ்ப்பாணம் திரும்பிய போது இவர்களும் கூடவே வந்தனர். பலாலியில் விமானம் தரையிறங்கியதும் அங்கு நின்ற இராணுவ அதிகாரி இப்போது இருட்டி விட்டது. நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்ல முடியாது. காங்கேசன் துறையில் போய் தங்குங்கள். நாளைக்காலை வீடு செல்லலாம் என்றார். மாணவ மாணவியர் எமது மண்ணில் வந்து இறங்கிய பின் எமது வீடுகளுக்குச் செல்ல எம்மால் முடியவில்லையே என முணுமுணுத்தனர். இவர்களை அழைத்து வந்த இராணுவ கப்டன் பலாலியில் நின்ற அதிகாரியிடம் நான் இவர்களை அழைத்துச்சென்ற இடங்களில் எல்லாம் இவர்களுக்கு ராஜ உபகாரம் வழங்கப்பட்டது. இங்கு தான் இப்படி என்றார். அதற்கு அந்த அதிகாரி தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். காங்கேசன்துறை சென்றதும் காங்கேசன்துறை பட்டினசபை மண்டபத்தில் போய் படுக்குமாறு அங்குநின்ற இராணுவத்தினர் கூறினர். என்ன இந்த திறந்த வெளியிலா படுப்பது என்றனர் மாணவிகள். (கொழும்பிலிருந்து கடைசி விமானத்தில் வரும் பயணிகள் யாவரும் இவ்வாறு பட்டினசபையில் தான் தங்கவைக்கப்படுவது வழக்கம்.)

மாணவிகளை அழைத்து வந்த பெண் சிப்பாய் மாணவிகளை உள்ளே படுக்க விட்டு விட்டு அவர்களுக்குக் காவலாக வெளி வாசலில் படுத்திருந்தாராம். சாமத்தில் திடீரென பெண் சிப்பாய் கூக்குரலிட்டாராம். உடனே காவலுக்கு நின்ற இராணுவத்தினர் அனைவரும் ஓடி வந்தனர். இராணுவ பொறுப்பதிகாரியும் வந்தார். என்னவென்று விசாரித்த போது அங்கு காவல் கடமையிலீடுபட்டிருந்த சிப்பாய் ஒருவர் மேற்படி பெண் சிப்பாயின் சட்டைக்குள் கையை விட்டுவிட்டதாகத் தெரிய வந்தது. அந்து இடத்திலேயே முகத்திற்கு டோர்ச் அடித்து அடையாள அணிவகுப்பு நடந்தது. பெண் சிப்பாய் காவலில் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவரை அடையாளம் காட்டினார். சுக சிப்பாய்கள் அந்தச் சிப்பாயை ஒதுக்குப்புறமாக அழைத்துச் சென்று உதைத்தனர். பின் திரும்பி வந்து ஏன் உங்களுடன் கூட வந்த கப்டன் சேட்டை விட்டிருக்கக்கூடாது என்றனராம். அதற்கு பெண் சிப்பாய் இல்லை அவர் இதை செய்யவில்லை என மறுத்து விட்டாராம். பின்னர் நடந்த சம்பவத்தை எழுதித் தருமாறு கூறி எழுதி வாங்கிக்கொண்டு சென்று விட்டனராம்...

-பரமர்

நன்றி - நூலகத்திட்டம்



# துரையப்பா முதல் அற்புதன் வரை!

**சரிநிகரில்** நான் இந்தப் பத்தியை எழுதத் தொடங்கியிருந்த காலம். அப்போது இலங்கை வானொலியில் 'மக்கள் குரல்' என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சியை ஈ.பி.டி.-பியினர் நடாத்தி வந்தனர். ஆமர் வீதி குண்டு வெடிப்பின் போது கொல்லப்பட்டுவிட்ட ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியாளர்கள் வழங்கிய விசேட சலுகை ஒன்றின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சி நடாத்தப்பட்டு வந்தது. இந்த நிகழ்ச்சியின் பிரதான நோக்கமாக இருந்தவை இரண்டு விடயங்கள். ஒன்று பிரேமதாச அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்குவது. இரண்டாவது புலிகளை விமர்சிப்பது. புலிகளை மிகத் தீவிரமாக விமர்சிப்பதில் யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இருந்திருக்க முடியாது. புலிகளை மட்டுமல்ல, எந்த ஒரு அரசியல் குழுவையும் அதன் அரசியல், இராணுவ செயற்பாடுகளை அடிப்படையாக வைத்து விமர்சிப்பதில் யாரும் [illegible]ற கூற முடியாது ஆனால் மக்கள் [illegible] விமர்சிக்கும் [illegible]வையல தமிழ் மக்களின் போராட்டத்தை, யுத்தத்தில் அகப்பட்டு சாகும் அம்மக்களின் துயரத்தை எல்லாம் கொச்சைப்படுத்தும் விதத்தில் நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டு வந்தன. பிரேமதாச அரசாங்கத்தையும் அதன் யுத்த நடவடிக்கைகளையும் முடிந்தளவுக்கு நியாயப்படுத்துபவையாக அந்தச் செய்திகள் வெளிவந்தன.

அந்த வருடம் வருடப்பிறப்புக்கு மறுநாள் வடக்கிலிருந்து கிளாலிக் கடலூடாக வந்த படகுகள் மடக்கிப் பிடிக்கப்பட்டு அதிலிருந்தவர்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட அதிர்ச்சியூட்டும் செய்தி அனைத்துப் பத்திரிகைகளிலும் பிற தொடர்பு சாதனங்களிலும் வெளிவந்தது. கடற்படையினரால் செய்யப்பட்ட குமுதினிப் படகு கொலைக்குப் பிறகு அவர்களால் செய்யப்பட்ட மிகப் பெரிய படுகொலை அது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒரு தகவல். அரசாங்கம் அப்படி ஒரு கொலை நடக்கவில்லை என்று முதலில் மறுத்தது. பிறகு படையினர்க்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம், அதற்கு தாம் பொறுப்பேற்க முடியாது என்று அறிவித்தது. ஆனால், மக்கள் குரல் அப்படகுகளில் வந்தவர்கள் புலிகள் அல்லது புலிகளின் ஆதரவாளர்கள் என்று அடித்துச் சொல்லி அவர்கள் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தியது.

சரிநிகர் மெல்லத் தமிழினி பத்தியில் மக்கள் குரலின் இந்தச் செய்தியை கண்டித்து 'மக்கள் குரல் எந்த மக்களின் குரல்?' என்ற தலைப்பில் கேள்வி எழுப்பியது.

அது இவ்வாறு எழுதியது. "இலங்கை வானொலிக்குள் ஒதுங்கிக் கொண்டு 'மக்கள் குரலை' ஒலிக்கின்றவர்கள் கணக்கீட்டில் செத்தவர்கள், செத்துப் பிழைத்தார்கள் அனைவரும் புலிகள்."

"வழமையாக பாதுகாப்புக்கு வருகிற புலிகள் கூட அன்று வராத நிலையில் வந்து கொலையுண்ட இவர்கள் அனைவரும் புலிகள் தான் என்றால், வடக்கு கிழக்கில் வாழ்கின்ற அனைவருமே புலிகள் தான்!"

"அப்படி என்றால் 'மக்கள் குரல்' எந்த மக்களின் குரல் என்ற கேள்வி எழுகிறது. அந்தக் கேள்வி ஒரு புறம் இருக்கட்டும். வடக்கு கிழக்கில் வாழ்கின்றவர்கள் ஒவ்வொருவரும் புலிகள் தான் என்றால் அவர்களுக்கு பிரபாகரன் தலைவராக இருப்பது தானே நியாயம்?

"மக்கள் குரல் ஏன் பிறகு வீணாக வயிறுநோகக் கத்துகிறது?"

"ஒரு வேளை பிரபாகரனின் பதவிக்கு ஆசைப்படுகின்றதோ?"

இந்தக் கேள்வியுடன் சரிநிகர் நிற்கவில்லை. பத்திரிகையின் முன்பக்கத்தில் "His master's voice" என்ற தலைப்பில் இசைத்தட்டில் ஒலிபெருக்கியின் முன் உட்கார்ந்திருக்கும் நாயின் படத்துடன் ஈழமோகத்தின் கவிதை ஒன்றையும் பிரசுரித்திருந்தது.

"கேட்டீரோ சேதி. கிளாலிக்
கடற்கரையில்போட்டேன்வந்தவர்கள்
புலியாம்-காட்டேறி எனவந்து
கடற்படையோர் கொன்றொழித்த
அனைவருமே மக்கள் குரலார்க்கு"

அவ்வளவுக்கு பிரேமதாச அரசாங்கத்தின் புகழ்பாடுகிற அல்லது வால் பிடிக்கிற ஒரு நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

இதை ஏன் இப்போது சொல்கிறேன் என்றால், கடந்த நவம்பர் 2ம் திகதி



வெள்ளவத்தையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான ரமேஷ் எனப்படும் அற்புதராஜா நடராசா அவர்கள் தான் அன்று இந்த நிகழ்ச்சியை தொகுத்து நடாத்தி வந்தவர். அதே நேரத்தில் அவர் தினகரன் பத்திரிகையிலும் கூட 'புல்லட் பொக்ஸ்' என்ற தலைப்பில் சூரிய தீபன் என்ற பெயருடன் ஒரு பத்தி எழுதி வந்தார். அந்தப் பத்தியிலும் அதே மக்கள் குரல் பாணி எழுத்தை எழுதியது மட்டுமல்லாமல், பிற பத்திரிகையாளர்களை மிரட்டுவதிலும் ஈடுபட்டு வந்தார்.

சரிநிகரில் தொடர் கட்டுரை ஒன்றை எழுதிவந்த நண்பர் அன்ன பூரணா அவர்களை மிரட்டும் விதத்தில் "பிழைத்துப் போகட்டும் என்று விட்டால் அதைப் பலவீனமாக கருதுகிறார்கள்" என்று எழுதியிருந்தார்.

இந்த மிரட்டலுக்குப் பதிலளிப்பதற்காக மேற்குறிப்பட்ட ஜூன் 1993 இதழில் வெளியான இப்பத்தியை ஒதுக்கியிருந்தேன். அப்போது அவர்கள் இன்றிருப்பதை விடவும் பலமாக இருந்தார்கள். பிரேமதாச காலத்து பாதாள உலக நடவடிக்கை களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதோ என்ற சந்தேகமும், அச்சமும் கூட நிலவியது. ஏற்கெனவே ஆட்கடத்தல், மண்டையில் போடுதல் போன்ற விடயங்களுக்கு மிகவும் பேர்போன 'இயக்கப்' பாரம்பரியத்திலிருந்து வந்த ஒரு எழுத்தாளர் என்பதால் தாம் 'பலவீனமாக இல்லை' என்பதை நிரூபிக்க ஏதாவது செய்துவிடுவார்களோ என்ற அச்சம் பரவலாக நிலவியது. எனவே இப்பத்தியில் அது பற்றி எழுதவேண்டிய ஒரு தேவை எழுந்தது.

'சூரிய தீபனின்' சரிநிகர் மீதான தாக்குதல் எந்தவகையான ஜனநாயகம்?' என்று கேள்வியிட்டு எழுதிய அப்பத்தியில் நான் இவ்வாறு குறிப்பிட்டிருந்தேன்:

"பத்திரிகையாளர்கள் பலம் பலவீனம் பார்த்து அடிப்பவர்கள் அல்ல. அது யுத்தம் செய்யும் யுத்தத் தந்திரிகளின் வேலை. எதிரி பலவீனமாக இருக்கையில் தாக்குவதும், பலமாக இருக்கையில் பதுங்கிக் கொள்வதும் கெரில்லாக்களின் தர்மம். பத்திரிகையாளரின் தர்மம் அதுவல்ல. அவர்கள் தாம் சார்ந்துள்ள மக்களுக்கு எது சரியெனப் படுகிறதோ அதைச் சொல்கிறார்கள். எது பிழை எனப்படுகிறதோ அதை விமர்சிக்கிறார்கள். பலமானவர்களை விமர்சிக்காதிருப்பதும், பலவீனர்களை விமர்சிப்பதும் அவர்களது முறை அல்ல.

தவிரவும் அவர்கள் தமது கருத்து வெளிப்பாட்டு உரிமையை யாரும் போடுகிற பிச்சையாக கருதுவதில்லை. அதை அவர்கள் தமது பிறப்புரிமையாகக் கருதுகிறார்கள். இந்தப் பிறப்புரிமை அவர்களுக்கு மறுக்கப்படும்போது அவர்கள் அதை எதிர்த்துப் போராடுகிறார்கள். பேனா அவர்களது ஆயுதமாகிறது....

சூரியதீபன் பத்திரிகையாளர்களை மிரட்டுவது போல எழுதியுள்ளது ஒரு அரசியல்வாதியின் அரசாங்கப் பொலிசின் மிரட்டலைப் போல் உள்ளது. கருத்துக்களுடன் முரண்பாடு இருந்தால் அதை எழுதலாம். விமர்சிக்கலாம். ஆனால், மிரட்டுவது எந்தவகை ஜனநாயகம்?

இத்தகைய மிரட்டல்களுக்கு சரிநிகர் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. ஏனென்றால், கொழும்பில் சரிநிகர் வெளிவருவது யாருடைய ஜனநாயகப் பிச்சையாலும் அல்ல. பத்திரிகையாளர்களின் பிறப்புரிமை மீதுள்ள- சுதந்திர வெளிப்பாட்டிலுள்ள- உறுதியான பிடிப்பால். யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை அடித்தும், மிரட்டியும் கொன்றும் புலிகள் நிலைநாட்டிய 'தாம் பலமானவர்கள்' என்ற சாதனையை கொழும்பில் சூரியதீபனும் செய்ய நினைத்தால் தாரளமாகச் செய்யட்டும். அதன் மூலம் தான் பலமானவர் தான் என்று அவர் நிரூபிக்கட்டும்.

இலங்கையில் கடைசியாக வெளிவந்த ஒரேயொரு ஜனநாயக் குரலையும் நசுக்கிய சாதனையாளருக்கான பெயரை அவர் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால், சரிநிகர் அழியப் போவதில்லை...

அதுவரும். நூறு நூறாய், ஆயிரம் ஆயிரமாய்....

ஓரிரு பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் தெருவில் நிற்கப் போவதால் பத்திரிகையாளர்களின் குரல் நின்றுவிடப் போவதில்லை. அது உலகம் முழுவதும் ஒலித்துக் கொண்டே தான் இருக்கும்"

- இந்தப் பத்தியின் பிறகு அவர் சரிநிகர் தொடர்பாக எழுதுவதை முற்றாக கைவிட்டுவிட்டார்.

இதற்கு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகட்குப் பிறகு தினமுரசு பத்திரிகை வெளிவந்த போது, தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாத பிரதம ஆசிரியராக அவர் செயற்படத் தொடங்கினார். நாரதர், ரசிகன், அற்புதன், அதிரடி ஐயாத்துரை என்று பல்வேறு புனைபெயர்களுடன் அவர் எழுதத் தொடங்கியபோது, முன்னைய அரசியலுக்கு நேரெதிர் மாறாக, புலிகளை ஆதரிக்கும் போக்குடையதாக அவரது எழுத்துக்கள் அமைந்தன. 1994 பாராளுமன்ற தேர்தலில் யாழ் மாவட்ட பா.உ.வாக தெரிவுசெய்யப்பட்ட அவர், தனது பாராளுமன்ற ஆசனத்தைப் பயன்படுத்தி எந்த அரசியற் கருத்துக்களையும் தீவிரமாக முன்வைக்கா விட்டாலும், பத்திரிகையை தீவிரமான கருத்துத் தெரிவிக்கும் ஒன்றாக வெளிப்படுத்திக் கொண்டு வந்தார். ஈ.பி.டி.பி. தவிர்ந்த மற்றைய அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் தீவிரமாக விமர்சித்தும், வாசகர்களது சிந்தனைக்கு வேலை தராத விதத்தில் ஆதரவை திரட்டும் மலினத்துவ (Populist) அரசியற் பத்திகளை நேரடியாக கண்ட ஒருவர் கதை சொல்வதுபோல எழுதியும், வாசகர்களின் வட்டத்தைப் பெருப்பித்துக் கொண்டார். தினமுரசு பத்திரிகையை விளம்பரமில்லாத ஒரு லாபகரமான தமிழ் வாரப் பத்திரிகையாக வியாபித்தெடுத்தார்.

அரசியல் சிந்தனைகளையும், கருத்துக்களையும் கூட வெற்றிகரமான வியாபாரப் பொருளாக எழுத்திலும் பயன்படுத்த முடியும் என்று நிரூபித்துக் காட்டிய சமீபகால எழுத்தாளர் / அரசியல்வாதி என்ற பெருமை அவரைச் சாரும். அந்தளவுக்கு அவரது எழுத்தும் பத்திரிகையும் பிரபல்யம் பெற்றிருந்தன.

அற்புதராஜா நடராசா கொலையைப் பொறுத்தவரையில், அவரது கொலையைப் புலிகளே செய்திருக்கலாம் என்று அவரது கட்சியினர் கூடக் குற்றம் சாட்டவில்லை. அவரது பத்திரிகை வாசகர்கள் கூட ஒரு போதும் புலிகள் இதைச் செய்திருப்பார்கள் என்று நம்பப் போவதில்லை. இந்தக் கொலையின் போது பாவிக்கப்பட்டது 56 ரக ரைபிள்கள் என கூறப்படுவதால், புலிகளாக அது இருக்க முடியாது என்றும் இது அவரது இயக்கத்தின் அல்லது வேறு கொழும்பிலுள்ள இயக்கங்கள் ஒன்றின் வேலையாக அல்லது ஒருவேளை அரசாங்கத்தின் வேலையாக இருக்கலாம் என்ற சந்தேகமே பரவலாக அடிபடுகிறது. இதுவரை யாரும் கைது செய்யப்படவோ, குறிப்பாக குற்றம் சாட்டப்படவோ இல்லை.

அரசியல் பத்தியிலும் சரி, தனது வரலாற்றுத் தொடரிலும் சரி கட்டுரைகட்கு சுவை சேர்ப்பதற்காக தனது கைச்சரக்கையும் கற்பனையையும் சேர்த்து எழுதும் மலினத்துவப் பத்திரிகையாளர் என்ற போதும், அவரது எழுத்துக்கள் அவரது அரசியல் இருப்புக்கும் அவரது கட்சியின் இருப்புக்கும் சவாலாகவே இருந்து வந்தன. குறிப்பாக அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பது, அரசாங்கத்தை பாராளுமன்றத்தில் ஆதரிப்பது, இராணுவத்துடன் சேர்ந்து நின்று யுத்தம் நடக்கும் பகுதிகளில் செயற்படல் போன்ற அவருடைய சொந்தக் கட்சியின் நடவடிக்கைகட்கே அவரது பத்திரிகை எழுத்துக்கள் மிகவும் மோசமான பின் விளைவுகளைத் தருபவையாக அமைந்திருக்கும் என்பதில் ஆச்சரியம் இல்லை. இப்பத்திரிகை நிச்சயமாக கட்சிக்கு உள்ளே பலத்த அரசியல் நெருக்கடிகளை உருவாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அண்மையில் ஈ.பி.டி.பியின் இன்னொரு உறுப்பினரான உமாபதி பாஸ்கரனினால் நடாத்தப்பட்ட பத்திரிகையான தாய்மொழி, அது அவசரக் காலச் சட்டம் தொடர்பாக எழுதிய ஆசிரிய தலையங்கம் காரணமாக கட்சியினால் தடை செய்யப்பட்டது பற்றி வாசகர்கள் அறிந்திருக்கலாம். ஆனால், அவ்வாறான ஒரு தடையை தினமுரசு மீது ஏற்படுத்தக் கட்சிக்கும் தலைமைக்கும் முடியவில்லை என்று கூறப்படுகிறது. அவ்வளவுக்கு கட்சிக்குள் ரமேஷ் பலமானவராகவும், டக்ளஸ் தேவானந்தாவுக்கு சவாலான பலமிக்க ஒருவராகவும் இருந்திருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எமது இயக்க வரலாற்றில் சவாலாக இருத்தல் என்பதன் அர்த்தம் எப்படிப்பட்டது என்பது கூட விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றல்ல.

எவ்வாறாயினும், இக்கொலைக்கு காரணம் எதுவானாலும் கொல்லப்பட்ட ரமேஷ் எவ்வளவு மோசமான அரசியல்வாதியாக, எழுத்தாளராக இருந்தாலும் இந்நடவடிக்கை ஒரு ஆபத்தான சமிக்ஞையை வெளிப்படுத்தி நிற்கிறது.

அண்மையில் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டபோது அக்கொலை தொடர்பாக தினமுரசு பத்திரிகையில் ரமேஷ் எழுதிய கருத்துக்கள் 'அரசியல் அறம் பிழைத்தோர்க்கு' இத்தகைய 'முடிவுகள்' கிடைப்பது நியாயமே என்ற தோரணையில் அமைந்திருந்தன.

அவர் நியாயப்படுத்துகிற அதே அரசியல் சிந்தனை அவரது கொலைக்கும் கூட நியாயத்தைக் கண்டுபிடித்து விடும் என்ற ஆபத்தே அந்த சமிக்ஞையாகும்.

அரசியல் பழிவாங்கல் படுகொலைகளை நியாயப்படுத்துவது, அதற்கு நியாயப்படுத்த ஆயிரமாயிரம் நியாயமான காரணங்கள் இருப்பினும் கூட, அது ஒரு ஆபத்தான கோட்பாட்டின் வளர்ச்சிக்கு - தனி நபர் பயங்கரவாத கோட்பாட்டின் வளர்ச்சிக்கு - உதவுவதால், மிகவும் தவறானது மட்டுமல்ல, நியாயப்படுத்துபவருக்கே ஆபத்தானதும் கூட.

எமது அரசியல் வரலாற்றில் வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதைகள் நிறையவே உண்டு. கடாவை வளர்ப்பவர்கள் இறுதியாக நடந்த ரமேஷின் கொலை மூலமும் அந்தக் கடாவுக்கு மேலும் பலமூட்டியிருப்பவர்கள், என்றைக்கோ ஒருநாள் அது தமது மார்பிலும் பாயும் என்பதை நினைவில் வைத்திருப்பது நல்லது.

ரமேஷ் தனது தொடர்புசாதன துறையுடனான ஆரம்பத்தை கோலின் ஒரு முனை ஆரம்பித்தார். அவரது இறுதிக் கால நடவடிக்கைகள் இன்னொரு முனையில் இருந்தன. அவர் ஒருபோதும் நிதானமான ஒரு எழுத்தாளராக இருந்ததில்லை. எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு மோசமான அரசியல்வாதியாகவும் அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு மோசமான எழுத்தாளராகவும் அவர் விளங்கினார். அவர் தனக்குத் தானே போட்டுக் கொண்ட வேஷங்களால் திறமை மிக்க தனது எழுத்தையும், ஆற்றலையும் அதற்குப் பலியாக்கி விட்டுப் போய்விட்டுள்ளார்.

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை என்று எழுதிவந்த அற்புதனின் முடிவு அற்புதனுடன் முடியட்டும். அதற்கப்பாலும் தொடரக் கூடாது என்பதே எமது விருப்பம்!

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்

# சிறில் மெத்தியூவின் அன்றைய சிங்கள வீரவிதானவின் இன்றைய தளம்

இன்றைய பேரினவாதம் பாசிச வடிவமெடுத்து வருவதும், அது சிங்கள சிவில் சமூகத்தினர் மத்தியில் பாசிசமயப்படுத்தப்பட்டு வருவதும் வேகமாக இடம்பெற்று வருவதை நாமெல்லோரும் உணர்வோம். இவற்றை வெளிக்கொணர்கிற வகையில் சரிநிகரில் பல கட்டுரைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன. மேற்தோற்றத்தில் இதனோடு சம்பந்தப்பட்ட செய்திகள், தகவல்கள் வெறும் சம்பவங்களாக தோற்றமளிக்கின்ற போதும் அதன் இயங்கியலையும், வரலாற்றுப் பின்னணியையும், போக்கின் திசைவழியையும் நுணுக்கமாக பார்க்கும் எவராலும் இன்னும் தெளிவாக இதனை உணர முடிகிறது.

மக்கள் மயப்படுத்தப்பட்டு வரும் இந்த ஆபத்தான போக்கிற்கு வரலாற்றில் பல சக்திகள் மற்றும் பிரிவினர் பங்களித்துள்ளனர். இவை குறித்த விபரங்கள் சரிநிகரில் ஆங்காங்கு வெளிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இம்முறை "சிறில் மெத்தியூ" ஆற்றிய பாத்திரம் இங்கு வெளிக்கொணரப்படுகிறது.

## வீரவிதானவின் கிரிபத்கொட

இன்று சிங்கள வீரவிதான இயக்கத்தின் முக்கிய தளமாக இருக்கின்ற கிரிபத்கொட பிரதேசமானது களனி தேர்தற் தொகுதியில் அமைந்திருக்கிறது. இந்த களனி தொகுதியில் பேரினவாதம் வளர்த்தெடுக்கப்பட்டதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. வரலாற்று சிறப்பு மிக்க களனி விகாரை இங்கு உள்ளது. ஹரிச்சந்திர விஜேதுங்காவின் சிங்களயே "மஹா சம்மத்த பூமி புத்திர பக்ஷ்ய" கட்சியின் தலைமையகமும் இங்கு தான் உள்ளது. தமிழ், முஸ்லிம் மக்கள் அங்கு போய் வர அல்லது வாழப் பயப்படும் பிரதேசம் அது. இனத்துவேசம் மிகுந்த அந்தப் பகுதியில் நீண்ட காலமாக இருக்கின்ற அருந்ததியர்களின் குடியிருப்பொன்றுக்கு சமீபத்தில் போக நேரிட்டது. அங்கு என்னை அழைத்துச் சென்றவர்கள் அக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள், பஸ்ஸை விட்டு இறங்கியதிலிருந்து குடியிருப்பை அடையும் வரை என்னுடன் தமிழில் பேசவில்லை. சிங்களத்தில் உரையாடிக் கொண்டு வந்தார்கள். அக்குடியிருப்பில் உள்ள நகரசுத்தித் தொழிலாள குடும்பங்களில் உள்ள சிறார்கள் அப்பகுதியைச் சேர்ந்த சிங்களப் பாடசாலைகளுக்கே செல்கிறார்கள். இளம் சந்ததியினருக்கு தமிழில் பேச வரும். ஆனால் சிங்களத்தில் தான் எழுத வரும்.

கடந்த வருடம் கிரிபத்கொடையில் ஒரு முஸ்லிம் வர்த்தகர் வாடகைக்கு எடுத்து நடத்திக் கொண்டிருந்த கடையை விட்டுப் போகச் சொல்லி ஐக்கிய வர்த்தகர் சங்கம் (நாடெங்கிலும் நூற்றுக் கணக்கான கிளைகளையடைய வீரவிதானவின் அமைப்பு) ஒப்புக் கொள்ளாத நிலையில் அக்கடை குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இத்தகவல் பத்திரிகைகளில் "இனந்தெரியாதோரால்" என்று வெளிவந்த போதும் அது குறித்து அறிந்தவர்களுக்கு இது பற்றி தெரியும். ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "நியமுவா"விலும் இது குறித்த நடுப்பக்க கட்டுரை சென்ற வருடம் வெளியாகியிருந்தது. அதே கட்டுரை ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வ தமிழ் ஏடான "செஞ்சக்தி"யிலும் வெளியாகியிருந்தது.

## பாசிசத்திடம் ஜே.வி.பி. சரணடைவு?


கிரிபத்கொடவில் எந்தவொரு கடை அல்லது நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளிலும் தமிழ் இருக்கக்கூடாது என்று கட்டளை இட்டிருக்கிறார்கள். தமிழர்களால் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்த கடைகளை அவற்றின் சொந்தக்காரர்களைக் கொண்டு மீளப் பெறுமாறு நிர்ப்பந்தித்திருக்கிறார்கள். அவ்வாறு மீள பெறுவதற்கான நிதியுதவிகளையும் கடன்களையும் வீரவிதான வழங்கியிருக்கிறது. இந்த களனி தொகுதியில் தான் பியகம சுதந்திர வர்த்தக வலயமும் இருப்பதால் ஜே.வி.பி.யின் தமது தொழிற்சங்கக் காரியாலயத்தின் தலைமையகத்தையும் இந்த கிரிபத்கொட பகுதியில் நிறுவியிருந்தனர். அக்காரியாலயத்துக்கு சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் அவர்கள் பெயர்ப்பலகையை போட்டிருந்த போது வீரவிதானவைச் சேர்ந்தவர்கள் தமிழை அழிக்கச் சொல்லி மிரட்டவே அவர்களும் அதனை எடுத்து விட்டனர். ஆனானப்பட்ட ஜே.வி.பி.யே இதன் போக்குக்கு சரணடைய நேரிட்டது என்றால் இதன் பலத்தைப் பற்றி வேறென்ன சொல்ல. அண்மையில் களுத்துறை மாவட்ட ஜே.வி.பி. முக்கியஸ்தர் ஒருவரைச் சந்தித்து இது குறித்து உரையாடிய போது இது தந்திரோபாயமான பின்வாங்கல் என்றும், போர்ட் இல்லாமலும் சிக்கலில்லாமல் அந்த இடத்தில் வெற்றிகரமாக அரசியலை நடத்திச் செல்ல அதுவே வழி என்றும் அரசியல் நியாயம் கற்பித்தார் அவர். இன்றைய அரசியலில் பூர்ஷ்வா கட்சிகள் மட்டுமல்லாமல் புரட்சிகர கட்சிகளின் செயற்பாடுகளில் கூட தலையிடும் அளவுக்கும், சரணடையச் செய்கின்ற அளவுக்கும் சிங்கள வீரவிதானவின் வளர்ச்சி கவனத்துக்குரியதாகியுள்ளது.

## யார் இந்த மெத்தியூ


அப்பேர்பட்ட களனி தொகுதி தான் சிறில் மெத்தியூவின் அரசியற் தளமாக 70களிலும் 80களின் ஆரம்பத்திலும் இருந்தது. (இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு ஆதரவளிப்பதாகக் கூறி ஐ.தே.க.விலிருந்து சென்ற 35 பேரில் ஒருவரும், முன்னாள் இளைஞர் விவகார அமைச்சராக இருந்தவரும், பிரேமதாச காலத்தில் "சூரியகந்த" படுகொலைகளுடன் தொடர்புடையவர் என்றும் பேசப்பட்டவருமான நந்தா மெத்தியூ தான் சிறில் மெத்தியூவின் மகன்.)

## களனி தொகுதிக்கு ஒரு வரலாறு


இந்த களனி தொகுதியானது சிங்கள மொழி மட்டும் சட்டம் கொண்டு வரப்படுவதில் முக்கிய பாத்திரமாற்றிய ஒன்றெனவும் குறிப்பிடலாம். 1953 ஹர்த்தாலைத் தொடர்ந்து டட்லி சேனநாயக்காவின் அரசு கவிழ்ந்தது. அதனைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் பிரதமராக பதவி வகித்தவர் டட்லியின் மைத்துனரான ஜோன் கொத்தலாவல. அவர் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது சிங்களத்தையும், தமிழையும் அரச கரும மொழியாக ஆக்குவதாக கூறியதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புகள் கிளம்பின. இவ்வெதிர்ப்பினால் எதிர்வரும் தேர்தலில் சிங்கள வாக்குகள் தமக்குக் கிடைக்காது போகும் என்ற அச்சம் ஐ.தே.க.வுக்கு வரவே அது சிங்களம் மட்டும் தேசிய மொழியாக கொள்ளப்படும் என்கிற பிரகடனத்தை 1956 பெப்ரவரியில் நடத்தப்பட்ட 8வது வருடாந்த மாநாட்டில் வெளியிட்டதும் இதே களனி தொகுதியில் வைத்துத் தான். இதேவேளை பண்டாரநாயக்கா தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த "சுதேசியவாதம்" எனும் கருத்தாக்கமும் சிங்களமயப்படுத்தலை இலக்காகக் கொண்டிருந்தது. அது போல 1956ம் ஆண்டு என்பது 2500வது பௌத்த ஆண்டாகும். அந்த சமயத்தில் பௌத்தத்தைத் தூக்கிப்பிடிப்பது என்பது முக்கிய அரசியல் போட்டியாகவும் அமைந்திருந்தது. பண்டாரநாயக்காவுடன் கூட்டமைத்திருந்த மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்திருந்த கட்சிகளும் அது வரை சிங்கள மொழியை தேசிய மொழியாக ஆக்குவதற்கான நிர்ப்பந்தங்களை கொடுத்துக் கொண்டிருந்தன. ஐ.தே.க.வின் "சிங்கள மொழி மட்டும்" எனும் களனி பிரகடனமானது 1956 தேர்தலில் இரு பிரதான கட்சிகளுக்குமான சிங்கள வாக்குகளைக் கைப்பற்றும் ஒரு கருவியாக ஆனது. இதன் விளைவாக பண்டாரநாயக்காவும் ஆட்சிக்கு வந்து 24 மணி நேரத்தில் சிங்கள மொழியை தேசிய மொழியாக அமுலாக்குவதாக வாக்குறுதி அளித்ததும், அது போலவே செய்து காட்டியதும் நிகழ்ந்தது. இந்தப் போக்கானது வரலாற்றில் தமிழ் சிங்கள தேசங்களுக்கிடையிலான இடைவெளியை அதிகரித்ததில் முக்கிய பாத்திரமாற்றியிருந்ததுடன். இதன்விளைவாக நடந்த பல்வேறு சம்பவங்களின் விளைவாக 1958 கலவரமும் நடந்து முடிந்தது என்பது பலரும் அறிந்ததே.



சிறில் மெத்தியூ



மாத்ரு பூமி




கவுத கொட்டியா? (யார் புலி?

## சிங்கள மக்கள் முன்னணி

அப்பேர்ப்பட்ட களனித் தொகுதி தான் ஜே.ஆரின் சொந்தத் தொகுதியாகவும் இருந்தது. 70களில் அத்தொகுதியில் சிறில் மெத்தியூ ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதுடன், களனியில் பல பேரினவாத அமைப்புகளின் அலுவலகங்களும் இயங்கின.

முக்கியமாக சிங்கள மக்கள் முன்னணி (சிங்கள மஹாஜன பெரமுன) எனும் அமைப்பும் இங்கு தான் இயக்கியது. இதன் ஆரம்பகர்த்தாவான சிறில் மெத்தியூ அப்போதும் ஐ.தே.க.வின் அமைச்சரவையில் விஞ்ஞான கைத்தொழில் அமைச்சராகவும் இருந்து கொண்டிருந்தார். வடக்கு கிழக்கில் சிங்கள பௌத்த விகாரைகளை புதிதாக அமைப்பது, புனருத்தாபனம் செய்வது போன்ற நடவடிக்கைகளில் இவர் தீவிரமாக ஈடுபட்டார். (இலங்கையின் 10வது பாராளுமன்றம்- லேக் ஹவுஸ் வெளியீடு -1995)

இந்த சிங்கள மக்கள் முன்னணியின் ஆரம்பத்தை இந்த இடத்தில் அறிந்து கொள்வது அவசியம். 1977 கலவரத்தைத் தொடர்ந்து அக்கலவரத்தின் பின்னணிகளை ஆராய்வதற்காக சன்சோனிக் கமிஷன் அமைக்கப்பட்டது தெரிந்ததே. (இக்கலவரம் 1983 இனப்படுகொலைகளுக்காக பேரினவாதிகள் செய்த ஒத்திகை என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது) இக்கலவரத்தின் போது தான் ஜே.ஆர். போரென்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்கிற பிரகடனத்தைச் செய்திருந்தார். கண்கட்டி வித்தைக்காக அமைக்கப்பட்ட அந்த ஆணைக்குழுவின் முடிவில் அக்கலவரத்துக்கு தமிழ் அரசியல் தலைவர்களே காரணமெனக் குற்றம் சாட்டப்பட்டதுடன், அக்கலவரத்துக்குக் காரணமான எவரும் தண்டிக்கப்படவுமில்லை. இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டதும் தமிழர்கள் தான் இத்தனைக்கும் காரணமென்றும், 'தமிழர்களால் தான் சிங்கள மக்கள் கொல்லப்பட்டார்கள், சேதமுற்றார்கள், அகதிகளானார்கள்' என்றும் போலியாக நிறுவி, போலி ஆணைக்குழுவின் அறிக்கையை தயாரிப்பதற்கு சிங்களத் தரப்புக்கு போலிச் சாட்சியங்கள் தேவைப்பட்டன. அவ்வாறு தயாரிக்கப்பட்டவை அனைத்தும் தொகுக்கப்பட்டு எல்லே குணவங்ச தேரோவால் "சன்சோனிக் கொமிஷன் அறிக்கை இல-1" மற்றும் 2 என நூல்களாக வெளிவந்தன.



எரிக்கப்பட்ட யாழ் நூலகம்

## 'மாத்ரு பூமி'யின் வரலாற்றுப் பாத்திரம்

சன்சோனி ஆணைக்குழுவுக்கு போலி ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்காக உருவாக்கப்பட்டது தான் சிங்கள மக்கள் முன்னணி. அவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னணி குறித்து சிங்கள மக்கள் முன்னணியின் உத்தியோகபூர்வ பத்திரிகையாக அன்று வெளிவந்த "மாத்ரு பூமி" (அன்னை பூமி) பத்திரிகையின் முதலாவது இதழில் காணலாம். அதில் "...இவ்வாணைக்குழுவுக்கு நாடெங்கிலும் உள்ள சிங்களவர்களை சாட்சிக்கு கொண்டு வரும் வேலையைத் தொடங்கியிருக்கிறோம். இதற்கு நிதிப்பிரச்சினை ஒரு பெரும் தடையாக இருந்தாலும் சில வள்ளல்களின் உதவியால் அதனை மேற்கொள்ள முடிகிறது.... இதிலிருந்து எமது கடமைகளை ஆரம்பிக்கிறோம். ஆனால் தமிழ் இனவாதத்துக்கு எதிராக நீண்டதூரம் நாங்கள் செல்ல வேண்டியிருக்கிறது...." ("மாத்ரு பூமி"-1979 பெப்ரவரி)

இப்படித் தொடக்கப்பட்ட இந்த அமைப்பும், அதன் பத்திரிகையும் அதன் பின் அவை ஆற்றிய பாத்திரம் குறித்து மேலோட்டமாக எம்மில் பலர் அறிந்திருப்பர். 1979 பெப்ரவரியில் இதன் முதலாவது இதழ் வெளிவந்தது. 1980 ஏப்ரலில் இப்பத்திரிகை நின்று போனது. மாதாந்தம் வெளிவந்த இப்பத்திரிகை மொத்தம் 14 இதழ்கள் கிரமமாக வெளிவந்து கொண்டிருந்தது என்பது சுவடிகூடத் திணைக்கள காப்பகத்திலிருந்து இது குறித்து தேடிய போது அறியக் கிடைத்தது. மொத்தம் 8 பக்கங்களை மட்டுமே கொண்டிருந்தாலும் இப்பத்திரிகை முழுவதும் இனவெறியைத் தூண்டும் ஆக்கங்களைத் தவிர வேறு எதுவும் இருந்ததில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகள், அதன் பத்திரிகையான "சுதந்திரன்" மற்றும் துண்டுப்பிரசுரங்களை மாத்ருபூமியில் முன்பக்கத்தில் படமாக வெளியிட்டு அதனைத் திரிபுபடுத்தி இனவாத கருத்தேற்றம் செய்து கொடுப்பது மாத்ருபூமியின் முக்கிய பணியாக இருந்தது. முதலாவது இதழில் முன்பக்கத்தில் சுதந்திரன் பதிப்பகத்தில் கோப்பாய் தொகுதி உறுப்பினர் சீ.கதிரவேலுப்பிள்ளையால் பிரசுரிக்கப்பட்ட "சுதந்திரத் தமிழீழம் மலர்க" எனும் தலைப்பிட்டு அதில் இலங்கையில் தமிழீழத்தை வேறு பிரித்துக் காட்டி அதில் வடகிழக்கைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் புகைப்படங்களைப் பிரசுரித்து இலங்கைப் பாராளுமன்றத்தின் தமிழீழ உறுப்பினர்கள் என்று குறிப்பிட்டிருந்த அந்த துண்டுபிரசுரம் அப்பயே பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இதனை மீள பிரசுரிக்கும்படி வாசகர்கள் கோரியதால் அதன் 1979 ஏப்ரலில் வெளியான மூன்றாவது இதழிலும் அது பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"...சிங்கள நாட்டின் 7இல் 5 பகுதியைத் தமிழர்கள் பிரித்தெடுக்கப் போகிறார்கள், சிங்களவர்கள் கடலில் தள்ளப்படப் போகிறார்கள். ஒரே ஒரு பௌத்த நாடு இல்லாமல் ஆக்கப்படப்போகிறது, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இதற்கு ஆதரவு. தமிழ்நாட்டோடு "ஈழத்தை இணைத்து" சிங்களவர்களை அழிக்கப்போகிறார்கள், சிங்கள பௌத்த விகாரைகள் வடக்கு-கிழக்கில் அழிக்கப்படுகிறது..."

இவை போன்றவற்றை பேரினவாத கருத்தியலாக புனைவதிலும், திரிபுபடுத்துவதிலும் நிறுவுவதில் இப்பத்திரிகை ஆற்றிய பாத்திரம் லேசானவை அல்ல. பின்னர் வந்த பேரினவாதிகள் இந்தத் தளத்தின் மேலிருந்து இனவெறியைக் கூர்மைப்படுத்த இலகுவாக்கியது சிறில் மெத்தியூவின் பாத்திரம். இது வெறும் சிங்கள பேரினவாத சித்தாந்தம் மட்டுமல்ல அதன் வடிமும், அதன் தளமும் தான். இன்று பேரினவாதம் பலர் நம்பிக் கொண்டிருப்பதைப் போல கிராமியத்திலிருந்து தொடங்கி விசாலிக்கவில்லை அது நகர்ப்புறங்களில் தோன்றி அங்கேயே மையப்படுத்தப்பட்டு வலைப்பின்னல்களாக கிராமங்களுக்குள் விரிவாகிச் செல்கிறது. இது ஒரு முக்கியமான போக்கு.

## 83 இனப்படுகொலையும் மெத்தியூவும்

சிறில் மெத்தியூ எழுதிய "கவுத கொட்டியா" (யார் புலி-1980-சிங்கள மக்கள் முன்னணி வெளியீடு) எனும் நூலை எவரும் இலகுவில் மறக்கமாட்டர்கள். குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் அதிலுள்ளவர்கள் என்போர் எப்படி சிங்கள நாட்டைக் கைப்பற்ற தமிழ் இளைஞர்களை அணிதிரட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், சிங்கள இனம் ஒன்றும் தெரியாத அப்பாவிகளாக இருக்கிறார்கள் என்பதுமே அந்நூலின் சாராம்சம். அது போல அவர் இன்னும் பல நூல்களையும் எழுதியிருக்கிறார். சிங்களயாகே அதிசி சத்துரா" (சிங்களவர்களின் உடனடி எதிரி-1970) எனும் தலைப்பில் சிறில் மெத்திவ் எழுதிய நூல் மலையக மக்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும், நாட்டிலுள்ள சிங்கள பௌத்தர்களின் சொத்துக்களை இந்தியாவுக்கு அள்ளிச் செல்கிறார்கள் என்றும் இந்தியா தமிழீழம் அமைவதற்கு அனைத்து ஆதரவையும் வழங்கி வருகிறது என்றும் உடனடி எதிரிகள் இவர்கள் தான் என்பதுமாக அதன் சாராம்சம் அமைகிறது. இந் நூல் குறித்த சில தகவல்களை குமாரி ஜயவர்தனா தனது இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள் எனும் நூலிலும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதில் இது யாரால் எழுதப்பட்டது என்து பற்றியோ அதன் சாராம்சம் பற்றியோ தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

1977 தேர்தலில் முதன்முறையாக தமிழ் கட்சி (கூட்டணி) பிரதான எதிர்க்கட்சியாக வந்ததானது பாராளுமன்றத்தில் ஐ.தே.க.வுக்கு இருந்த ஒரே இடைஞ்சலாக அது ஆனது. அதற்கு பாடம் படிப்பிக்கும் வேலையையும், சிங்கள பௌத்தர்களை திருப்தி படுத்தும் வேலையையும், சிங்கள பேரினவாதத்தை மக்கள் மயப்படுத்தும் வேலையையும் தனது கட்சியை நேரடியாக சம்பந்தப்படாமல் கட்சியைச் சேர்ந்த சேர்ந்த ஒரு அமைச்சர் அக்கடமைகளைச் செய்வதற்கு ஐ.தே.க. இடமளித்திருந்தது. மாத்ரு பூமியில் வெளிவந்த தகவல்களைப் பார்க்கின்ற போது வெறும் சிறில் மெத்தியூ அல்லது அவரின் அமைப்பால் மட்டும் அவற்றைப் பெற்றிருக்க வாய்ப்பில்லை. நிச்சயம் அது அரசின் புலனாய்வுப்பிரிவினரின் தகவல்கள் என்பதை விளங்கிக் கொள்வது கடினமில்லை. 1979 பெப்ரவரி 14ஆம் திகதி "மாத்ரு பூமி" பத்திரிகைக்கு இரகசிய பொலிஸார் புகுந்து விசாரணை செய்ததாக மார்ச் மாத இதழில் கட்டுரையொன்று

வெளியாகியிருக்கிற போதும் இது வெறும் கண்துடைப்பாகவே இருக்குமெனத் தோன்றுகிறது. ஏனெனில் அதன் பின்னர் ஒரு வருடமாக அப்பத்திரிகை அதனை விட மோசமான இனவெறியைத் தூண்டுகிற வகையில் வெளிவந்துகொண்டு தான் இருந்திருக்கிறது.

"மாத்ரு பூமி" பத்திரிகையில் வந்த சில தலைப்புகளைப் பார்ப்போம்.

-சிங்களவரின் கழுத்தில் சுருக்கிடப்படும் காலம் அருகில்! (79-பெப்), -எமது இனத்தை தூஷிக்க இடம் கொடுப்போமோ? (79-பெப்), ஈழம் தமிழ் நாடு பூட்டு! (79-மார்ச்), தமிழ்நாடுக்கே ஓடுங்கடா! (79-மார்ச்), இனம் இனிமேலும் மிஞ்சுமா?(79-மார்ச்), பூசாரிகள் கொழும்பில் இரகசிய கூட்டம் (79-ஏப்ரல்), எம்.ஆர்.-அப்பாபிள்ளை குசுகுசுக்கிறார்கள். (79-ஏப்ரல்), சிங்கள ஒற்றுமையே தேசத்தின் விடிவு (79-ஏப்ரல்), கஸ்டமஸ் திணைக்களம் இனவாதிகளின் குகை! (79-ஏப்ரல்), பாலஸ்தீன விடுதலை இயக்கமும் பின்னணியில் (79-மே), வவுனியாவில் புராதன விகாரைகள் அழிக்கப்படுகின்றன (79 டிச), மட்டக்களப்பில் அரச நிர்வாகம் சிங்களத்தில் இல்லை! (79-டிசம்பர்), தமிழுக்கும் அரச கௌரவம்! (79-பெப்ரவரி), ஈழம் கோரிக்கைக்கு வாசு-விஜேவீர ஒத்துழைப்பு! (79-ஏப்ரல்)

இவ்வாறு "மாத்ரு பூமி" பத்திரிகை பேரினவாதத்தைப் பரப்பியதில், கருத்துருவாக்கத்தை புனைவதில் ஆற்றிய பாத்திரம் முக்கியமானது. அது போல சிங்கள மக்கள் முன்னணிக்குப் பின்னால் திரண்ட மக்களை தனது அரசியல் செல்வாக்கால் தக்கவைத்துக் கொள்வதிலும் தமது நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதிலும் சிறில் மெத்தியூ முக்கிய பாத்திரமாற்றியிருந்தார். தமிழ் மக்கள் பற்றிய மோசமான அவதூறுகளைப் பரப்பியதும், எதிரிகளாக சித்திரித்ததும் தான் 1983 கலவரத்தைக் கொண்டு நடத்த இலகுவாக ஆனது. 83 இனப்படுகொலைச் சம்பவத்தில் சிறில் மெத்தியூ தமது சகாக்களைப் பயன்படுத்தி தமிழர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்களை பட்டியலிட்டுச் சென்று திட்டமிட்டு அழித்ததும், விரட்டியடித்ததும் தெரிந்ததே. அது போல 1981இல் யாழ் நூலக எரிப்பினை மேற்கொண்டவர் சிறில் மெத்தியூ என்பது இன்று சகலரும் அறிந்த விடயம்.

சிங்களப் பேரினவாதத்தின் தொடர்ச்சியை மாறி மாறி கையேற்று முன்னெடுத்துச் செல்ல வரலாற்றில் பலர் வந்து போயிருக்கிறார்கள். அவர்களை வெறும் நபர்களாக மட்டும் பார்க்கத் தேவையில்லை. அதற்குப் பின்னால் பல்வேறு நலன்களைச் சார்ந்த சக்திகளும் இருந்து வந்திருக்கிறார்கள். வெளித்தோற்றத்தில் இந்த நபர்கள் மட்டுமே தெரிவார்கள். அப்படிப்பட்ட ஒருவர் தான் சிறில் மெத்தியூ. சிறில் மெத்தியூவின் காலம் முடிந்தது. அவரால் வழிநடத்தப்பட்ட சிங்கள மக்கள் முன்னணியின் காலமும் முடிந்தது. ஆனால் அவர் பலப்படுத்திவிட்டுச் சென்ற சிங்கள பௌத்த பேரினவாத சித்தாந்தம் மட்டும் மிஞ்சியது மட்டுமன்றி மேலும் கூர்மைப்படுத்தப்பட்டு இன்று பாசிச வடிவம் எடுத்து வருகிறது. அந்த சித்தாந்தத்தை மக்கள் மயப்படுத்துவதற்கு பல்வேறு பேரினவாத அமைப்புகளும் ஒனறிணைந்து ஒரு குடையின் கீழ் மையப்பட்டு, வலைப்பின்னல்களைக் கொண்டு உறுதியான நிறுவன வடிவம் பெற்று தொழிற்புரிகின்ற காலத்தை வரலாற்றில் இப்போது தான் பார்க்கிறோம் என்பதை நினைவிற் கொள்வோம்.

இந்த பேரினவாதம் மக்கள்மயப்பட மக்கள்மயப்பட தமிழ் சிங்கள இன விரிசல் விரிவடைந்து கொண்டே செல்கிறது. சந்தேகங்கள், நம்பிக்கையின்மைகள் அதிகரித்து சிந்தனைகள் துருவமயப்பட்டு செல்கின்றன. அதனைச் செய்வதற்கு இன்று அரசு, தொடர்புசாதனங்கள், சிவில் அமைப்புகள், கல்வி (அமைப்பும் நிறுவனமும்) எல்லாமே சாதகமாக இருக்கின்றன. சேர்ந்து வாழலாம் என்பது வெறும் வாய்ப்பேச்சாக மட்டுமே ஆகிவிட்டிருக்கிறது.

—கோமதி

# இன்டர்நெட் வரை பாசிசம்

சிங்களப் பேரினவாதம் எடுத்து வரும் நவ பாசிச வடிவம் குறித்த உரையாடல் தற்போது மேலெழுந்துள்ளன. இன்று சிங்கள வீரவிதானவை மையப்படுத்தி ஏனைய சகல இனவாத அமைப்புகளும் அதனைச் சுற்றி வலைப்பின்னல்களாக வகுத்திருப்பதையும், அணிவகுத்து வருவது குறித்தும் பேசி வருகிறோம். அது சகல தளங்களிலும் தன்னை நிறுவி வருவதையும், ஊடுறுவி வருவதையும் கூட வெளிப்படுத்தி வருகிறோம்.

இன்றைய நிலையில் சித்தாந்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்த ஊடகங்களைக் கைப்பற்றல் என்பது கட்டாய நிபந்தனையாக ஆகியிருக்கிற நிலையில் பாசிசம் அதனையும் கவனமாக கைப்பற்றத் தொடங்கியிருப்பதையும் நேரடியாகக் கண்டு வருகிறோம். அந்த வகையில் இணையம் (இன்டர்நெட்) தளங்களை ஏற்படுத்தி தமது பிரச்சாரங்களையும், சித்தாந்தங்களையும் நிலைநாட்டுவது என்கிற விடயத்தில் பேரினவாதமும் மிக நுணுக்கமாக தொழிற்பட ஆரம்பித்திருக்கிறது.

இன்று சிங்கள வீரவிதான இயக்கத்துக்கு என இணையத்தளம் (web site) உண்டு. svv.org எனும் இந்த இணையத் தளத்தில் தேசிய செய்திகள், கட்டுரைகள், வீரவிதான செய்திகள், அறிக்கைகள், இணைப்புகள். (linkகள் தமக்கு சார்பான அல்லது தமது துறையைச் சார்ந்த இணைத்தளங்களுக்கு இது அழைத்துச் செல்லும்) இதனைத் தவிர சிங்கள வீரவிதானவின் இங்கிலாந்துக் கிளை மற்றும் ஜெர்மன் கிளைகளின் வெப் தளத்திற்குமான இணைப்புகளும் இந்த தளத்தில் இருக்கின்றன. www.sinhala.de/ எனும் விலாசத்தில் ஜேர்மனியக் கிளையின் தளத்திற்குச் செல்லலாம். வீரவிதானவின் தோற்றம் அவற்றின் வடிவம், மற்றும் அவற்றின் செயற்பாடுகள், நிலைப்பாடுகள் என்பன குறித்து அவை பகிரங்கமாக முன்வைப்பன மட்டுமே இந்த தளத்தில் காணலாம். மேலும் பயங்கரவாத ஒழிப்பு தேசிய இயக்கத்துக்கும் (NMAT) தமக்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் கிடையாது என்று கூறி வரும் வீரவிதானவின் வெப் தளத்தில் NMATயின் வேலைத்திட்டம் செயற்பாடுகள் என்பனவற்றையும் நாம் காணலாம். சமீபத்தில் சமவாயப்புச் சட்டம் குறித்து அமைச்சர் அஷ்ரஃப்பின் மீது வீண் பழியைச் சுமத்தி செய்யப்பட்ட பிரச்சாரத்தோடு சம்பந்தப்பட்ட அறிக்கைகளையும் இதில் காணக் கிடைக்கின்றன.

கடந்த நான்கு வருடங்களாக தமிழ்த் தேசப்போராட்டத்துக்கான சர்வதேசப் பிரச்சாரத்தை முடக்கி விட்டதில் இணையத்திற்கு முக்கிய பாத்திரம் உண்டு. விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பல்வேறு இணையத் தளங்கள் இருக்கின்றன. சில இணையத்தளங்கள் வேறு ஆதரவு அமைப்புகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. உடனடிச் செய்திகள், தனித் தனியான தலைப்புகள் அமைந்த




செய்திகள், கட்டுரைகள், விசேட குறிப்புகள், படங்கள், பாடல்கள், கவிதைகள் என பலவற்றையும் உள்ளடக்கிய இணையத்தளங்களை உலகம் முழுவதும் எங்கிருந்தும் காணக் கிடைத்து வருகிறது.

எந்த செய்தித் தணிக்கையை ஏற்படுத்தினாலும் இதனை தணிக்கை செய்ய அரசால் முடியாத நிலையில் இதற்கான ஒரே வழி எதிர்ப்பிரச்சாரம் செய்வதே அதற்கு தாமே சில இணைத் தளங்களை ஏற்படுத்தியாக வேண்டும். இந்த சவாலான நெருக்கடிக்குள் சிக்கிய நிலையில் சமீபத்தில் தான் தகவல் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு என்பன தமக்கான இணைத்தளங்களை நிறுவிக் கொண்டன என்றபோதும் அவை போதி தகவல்களை உள்ளடக்கியவை அல்ல. மேலும் அவற்றை கணிணியில் இறக்க (download செய்ய) எடுக்கும் நேரமும் அதிகம். இவற்றை ஒரே தளத்திற்கு சென்று பார்வையிட www.lacnet.org எனும் தளத்திற்குச் செல்லாம். அதிலிருந்து மேற்படி தளங்களுக்குச் செல்லலாம்.

இப்படியான நிலையில் தான் பேரினவாத சக்திகளுக்கு தமிழீழ போராட்டம் குறித்த எதிர்ப்பிரச்சாரங்களை நடத்த இணையத்தளங்களை ஏற்படுத்தும் தேவை ஏற்பட்டது. இப்படியான நிலையில் முதன் முதலில் பேரினவாதத்தரப்பிலிருந்து தோன்றிய இணையத் தளம் நளின் டி சில்வாவின் www.kalaya.com எனும் இணையத்தளம். இந்த தளத்தில் நளின் டி சில்வா ஐலண்டில் எழுதி வரும் கட்டுரைகள் பத்திகள், திவய்ன பத்திரிகையில் வெளியான கட்டுரைகளின் ஆங்கில வடிவம் என்பன கிடைக்கின்றன.

இதனைத் தவிர www.spur.asn.au. எனும் தளத்தை முக்கியமான தளமாகக் கொள்ளலாம். இது அவுஸ்திரேலியாவிலிருந்து இயக்கப்படுகிறது. இத் தளத்தில் புலிகளுக்கெதிராக ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகள் எல்லாவற்றையுமே அடக்கியுள்ளனர். அதை விட சிங்களக் கட்டுரைகளின் ஆங்கில வடித்தையும் காணலாம். இத்தளம் சிங்கள வீரவிதானவின் தளத்துக்கு முன்னமேயே தொடக்கப்பட்டுவிட்டது. ஏகப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய இத்தளத்தில் இது வரை புலிகளால் சிவில் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களின் அட்டவணையொன்று உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அதில் 132 சம்பவங்கள் அடக்கப்பட்டுள்ளன. 1984 இலிருந்து 1999 செப்டம்பர் வரை அதில் உள்ளடங்குகிறது. சம்பவம் நடந்த நாள், இடம், கொல்லப்பட்டோர், காயமடைந்தோர். சொத்துக்கள் என்பன உள்ளிட்ட விடயங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த செப்டம்பர் மாதம் கோணகல கிராமத்தில் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய முழுமையான கட்டுரையொன்று பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன் புலிகள் பற்றியும், புலிகள் சர்வதேச பயங்கரவாதிகளாக இருக்கிறார்கள் என்பதற்கான அமெரிக்க அரச திணைக்கள அறிக்கைகள் தொடக்கம் வேறு நாடுகளின் அறிக்கைகள், சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கைகள் என்பனவற்றையும் அதில் உள்ளடக்கியிருக்கிறார்கள். கோணகல சம்பவம் பற்றி பத்திரிகைகளில் வெளியான 60 கட்டுரைகளின் தலைப்புகளை ஒரே பார்வையில் காட்டியிருக்கிறார்கள். இதிலுள்ள முக்கியத்துவம் என்னவெனில் அந்த ஒவ்வொரு கட்டுரையையும் மவுஸால் கிளிக் செய்து கிளிக் செய்து 60 கட்டுரைகளையும் முழுமையாகப் பார்க்கலாம் என்பது தான். அது தவிர ராஜீவ் கொலை பற்றிய கட்டுரைகள், இது வரை நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகள் என்பன பற்றியும் கட்டுரைகளும் உள்ளடங்குகின்றன.

இதனை விட www.sinhaya.com எனும் தளமும் www.Lankaweb.com எனும் தளமும் www.voiceoflanka.net அதுதவிர www.sinhalanet.org எனும் தளமும் www.members.tripod.com/~sosl/massac.html மற்றும் www.Lankaweb.com/news/latest.html என்பன போன்ற இணையத்தளங்களும் இருக்கின்றன.

இது தவிர மக்கள் ஐக்கிய முன்னணியின் www.mep.netஎனும் தளமும் இருக்கின்றன. இதில் அவர்களின் அரசியல் கொள்கை, வேலைத்திட்டம், என்பனவற்றைக் காணக்கிடைக்கும்.

இந்த வெப்தளங்களின் முக்கிய இலக்காக இருப்பது புலிகளை அம்பலப்படுத்துவது என்பது. புலிகள் பயங்கரவாதிகள். ஆகவே இது பயங்கரவாதப் போராட்டம் என்பதை நிறுவுவதற்கான தளங்கள் இவை. புலிகளை பயங்கரவாதிகளாக சித்திரிப்பதன் மூலம் அவர்கள் நிறுவ வருவது ஒட்டுமொத்தத்தில் தமிழர்கள் இனவாத யுத்தத்தை நடத்துகிறார்கள் என்றும், சர்வதேசத்துக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடிய சக்திகள் என்றும், சிங்கள இனச்சுத்திகரிப்பைச் செய்து வருகிறார்கள் என்றும் ஆகவே சர்வதேச ஆதரவை அனைத்து நாடுகளும் விலக்கிக் கொள்ளும்படியும், தமக்கு அந்த ஆதரவை வழங்கும்படி கோருவதுமே இந்த பிரச்சாரங்களின் சாராம்சமாக இருக்கின்றன. இந்த இணையத்தைப் பொறுத்த வரையில் பாசிசம் காலூன்றியது, உள்நாட்டவர்களை இலக்காக வைத்தல்ல. அது சர்வதேச சமூகத்தை இலக்காக வைத்தே என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும் நுணுக்கமாகவும், திட்டமிட்டும் இவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவை இன்று பேரினவாத அமைப்புகள் அனைத்தும் வீரவிதானவைச் சுற்றி ஒன்றிணைக்கப்பட்டு வருவதைப்போலவே இந்த இணையத் தளங்களும் வீரவிதானவுக்கு பக்கபலமாக ஒன்றிணைவதைக் காண முடிகிறது.

இன்றைய பேரினவாதத்தின் நவ வடிவம் என்பது பாசிசம் தான் என்பதை இன்று சகலரும் உணரத்தொடங்கியிருக்கிற நிலையில் அவற்றின் சாமர்த்தியமான, நுணுக்கமான அணுகுமுறைகள் குறித்து விழிப்புடனும், கண்காணிப்புடனும் இருப்பதும் அவை குறித்த எச்சரிக்கைகளை ஏற்படுத்துவதும், அதன்படி அதிலிருந்து விடுபட எத்தனிப்பதும், அதற்காக அணிதிரள்வதன் அவசியமும் அதிகரித்து வருகின்றன என்பதை சொல்லித் தெரியத் தேவையில்லை.

—ஜென்னி

# தோட்டத் தொழிலாளர்கள் மீது திட்டமிட்ட தாக்குதல்!

மலையகத்தில் வீரவிதானவின் செயற்பாடுகளும் மலையக மக்களுக்குகெதிரான காடைத்தனங்களும் தலைதூக்கியுள்ளதை சமீப கால செயற்பாடுகளிலிருந்து தெரியவருகிறது.

தொண்டாவின் இறுதிச்சடங்கிலிருந்து மூன்று பஸ்களில் வீடு சென்ற தொழிலாளர் மீது கடந்த 6ஆம் திகதி இரவு 11 மணியளவில் ஏறுத்தாழ 30-40 பேர் அடங்கிய ஆயுதம் தாங்கிய குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளனர். பேராதனை -கலஹா வீதியில் வீதியில்உள்ள ஒன்பதாம் கட்டையில் பெரிய கற்களையும் மரக்குற்றிகளையும் குறுக்காகப் போட்டு பஸ்களை மறித்து இரவு 10 மணி முதல் ஆயத்தமாக நின்றுள்ளனர். விடியற்காலை 2 மணிவரை தொடர்ச்சியாக வந்த பஸ்களை மறித்து இவ்வாறு தாக்கியுள்ளனர். இத் தாக்குதலின் போது வெட்டுக்காயங்களுக்குள்ளான 10 பேர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள முத்தையா கணேசன், டேவிட் யேசுதாசன் ஆகிய இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தெல்தோட்ட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள மற்றும் எட்டுப் பேரில் நால்வர் பெண்களாவர்.

தாக்குதல் காரணமாக பஸ்களிலிருந்து சிதறி காட்டுக்குள் ஓடிய தொழிலாளர்களைத் துரத்தித் தேடித் தேடித் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இத் தாக்குதல் நடாத்தப்படும் போது சிவில் உடையில் அவ்வழியால் வந்த படையினர் தொழிலாளர் தாக்கப்படும் சம்பவத்தைக் கண்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்ததாக தெரிய வருகிறது.

இச்சம்பவத்தின் போது பயந்து ஓடி சிங்கள இனத்தவரின் வீடொன்றுக்குள் ஒளியச் சென்ற ஆறுமுகம் தங்கராஜ் என்பவரை அவ்வீட்டார் பிடித்து அடித்து புலியென்று கூறி அதிகாலை ஐந்து மணியளவில் பேராதனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வன்னியில் இடம்பெற்றுவரும் போரில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே இவ்வாறு கொந்தளிப்பை ஏற்படுத்தி தோட்டத் தொழிலாளிகள் மீது வன்மம் தீர்த்திருக்கின்றனர் என்று கூறப்படுகிற போதும் நடத்தப்பட்ட விதத்தைப் பார்த்தால் உடனடி ஆவேச சம்பவம் போலத் தோன்றவில்லை. இது மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட சம்பமென்றே தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

கடந்த வருடம் நுவரெலியா நகரத்தில் உள்ள மக்களிடம் தமிழ்க் கடைகளில் எவரும் எதனையும் கொள்வனவு செய்ய வேண்டாம் என்று கூறியதும், அதன் பின்னர் இவ்வருடம் நுவரெலியாவில் நடத்தப்பட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தின ஊர்வலம் குழப்பப்பட்ட சம்பவமும் தெரிந்ததே.

தற்போதைய சம்பவம் இடம் பெற்ற கண்டி மாவட்டத்தில் (அஸ்கிரி சர்வதேச பௌத்த நிலையத்தில்) தான் சிங்கள வீரவிதானவின் 4வது ஆண்டு நிறைவு விழா பூர்த்தி இடம்பெற்றிருந்தது.கடந்த செப்டம்பர் 19ஆம் திகதி. பண்டாரவலயில் வீரவிதான ஏற்பாடு செய்து நடத்திய ஊர்வலம் கூட்டம் நடத்தியிருந்தனர். அதே மாதம் 13ஆம் திகதி தான் அப்பிரதேசத்திற்கான கிளையையும் ஆரம்பித்திருந்தனர். செப்டம்பர் 4ஆம் திகதி ஹட்டனில் இப்படி ஒரு கூட்டமும் நடத்தி முடித்திருந்தனர். இக்கூட்டங்களை ஏற்பாடு செய்தது ஐக்கிய சிங்கள வர்த்தகர் சங்கம் என்கிற பேரில் இயங்கும் வீரவிதானவின் முன்னணி அமைப்பாகும். கடந்த வருடம் மலையகத்தில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டங்களில் சிவில் உடை தரித்து தொழிலாளர்களைத் தாக்கிய பொலிஸார் உள்ளிட்ட பல ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களும் இக்கூட்டங்களில் கலந்துகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கள வீரவிதானவின் கோட்பாட்டாளரும் அதன் இரகசியத் தலைவருமான சம்பிக்க ரணவக்கவின் சொந்த இடம் 'புளத் சிங்கள' எனும் களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேசம். தற்போது களுத்துறை மாவட்டத்தில் வீரவிதான தமது நடவடிக்கைகளை வியாபித்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்களிலிருந்து தெரியவருகிறது. கடந்த மாதம் களுத்துறை நகரத்தில் கூட்டப்பட்ட வீரவிதான கூட்டமொன்றில் களுத்துறையில் முஸ்லிம் வர்த்தகர்கள் சிங்கள வர்த்தகத்தை ஆக்கிரமித்துவிட்டனரென்றும் இதனை தடுத்து நிறுத்த உடனடியாக களுத்துறை வர்த்தகர்கள் அனைவரும் வீரவிதானவுடன் இணைந்து கைகோர்க்க வேண்டுமென்றும் அக்கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது. களுத்துறை நகரத்தில் வீரவிதானவின் முதல் இலக்காக ஆகப்போவது அங்குள்ள தோட்டத்தொழிலாளர்கள் அல்ல முஸ்லிம்கள் என்பதை அறிய முடிகிறது.

சிங்கள சிவில் சமூகத்தை எப்படி ஆயுதம் தாங்கிய பாசிச மயப்படுத்தலுக்கு வீரவிதான தயாராக்கி வருகிறது என்பதை இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன. அதிலும் அமைதியாக உள்ள மலையகத்தில் இவ்வாறான போக்குகள், அம்மக்களை வன்முறையை நோக்கித் தள்ளிவிடும். அதன் பிறகு மலையகத்திலும் பயங்கரவாதம் என்று கூக்குரலிடுவதில் எதுவித அர்த்தமுமில்லை.

தவிர்க்க முடியாத விளைவுகளை நோக்கித் தள்ளுகின்ற ஒன்றாகவே இவை உருவெடுக்கின்றன என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# பல்கலைக்கழகங்களும் சமூக இயக்கங்களும் அறிவுச் செயல்வாதமும்

## யாழ். பல்கலைக்கழகம் பற்றிய சிந்தனைக் குறிப்புகள்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவையொட்டி பல வாழ்த்துச் செய்திகளும், கருத்துக்களும் அறிக்கைகளும் சமீபகாலமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழகத்தின் ஆரம்பகாலந் தொடக்கம் 1991ஆம் ஆண்டு-வரை- பதினாறு வருட காலமாகப் பல்கலைக்கழக ஆசிரியர்களுள் ஒருவராகக் கடமையாற்றியவர் என்ற வகையில் எனது கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரு பல்கலைக்கழகம் சமூகத்திற்கு அளிக்க வேண்டிய கல்வித்திறன், புலமைப்பயிற்சி ஆகியவை அதன் தவிர்க்க முடியாத அம்சங்களாகும். இவற்றுடன் கூடவே ஆய்வறிவுச் செயல்வாதம் (Acadamic activism) என்கின்ற இன்னோர் விடயமே அப்பல்கலைக்கழகத்தின் தனித்துவத்திற்கும் வரலாற்று முக்கியத்து-வத்திற்கும் காரணமாக அமைகிறது.

இந்தப் பின்னணியில் சிந்திக்கும் போது யாழ் பல்கலைக்கழகத்தின் 25 வருடகாலக் கணக்கெடுப்பு என்பது அதன் மாணவர் தொகை, கல்வித்துறைகள், பீடங்கள், கட்டிடங்கள் ஆகியவை பற்றிய அறிக்கை மாத்திரமல்ல என்பது புலனாகும். இந்தக் காலப் பகுதியில் அந்த நிறுவனம் பதித்த தடங்களையும், எண்ணிப் பார்க்க வேண்டியது முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த போது அது ஒரு பல்கலாசாரத் தன்மையுள்ள ஒரு கல்வி நிறுவனமாக இருந்தது. இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள் பல்கலைக்கழகச் சமூகத்தின் அங்கத்த-வராயிருந்தனர். வெவ்வேறு சமய, கலாசார மொழிகளின் பரிச்சயமும் இணைவும் பல்கலைக்கழகத்திற்கு ஒரு வளமான சூழலை அமைத்தன.

பல்கலைக்கழகத்தின் முதற் தலைவரான பேராசிரியர் கைலாசபதி முற்போக்குப் புலமையாளர். அவ்வகையில் ஒரு அறிவுசெயல்-வாதத்தின் வழியே பல்கலைக்கழகம் நடப்பதற்கேற்ற தலைமைத்துவத்தை வழங்கினார். அவருக்குப் பல்கலைக்கழகத்தின் உள்ளேயும், வெளியேயும் ஆதரவிருந்தது. பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பெரும்-பாலானோர் முற்போக்கான பொதுவான இடது-சாரி அல்லது குறைந்த பட்சம் தாராளமையவாதக் கருத்துடையோராகவாவது இருந்தனர்.

இத்தகையதொரு பின்னணயிலேயே கல்விப்-போதனையும், பல்கலைக்கழகத்துக்கும், சமூகத்துக்கும் இடையேயான உறவும் மாணவர் செயல்வாதமும் அமைந்தன.

தமிழ் சமூகத்தில் எழுபதுகளின் பிற்பகுதி-யிலிருந்து தொண்ணூறுகளின் முற்பகுதி வரையேயான 20 வருடங்களில் செயல்பட்ட மூன்று சமூக இயக்கங்களுடனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடர்புபட்டதாகத் தென்படுகிறது.

இடதுசாரி, மார்க்சீய, முற்போக்குச் சிந்தனை செயல்வாதம் ஆகியவற்றுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இணைந்திருந்தது. இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் - இத்தகைய சமூக இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தோர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினர். இதன் பலனாகவே பல்கலைக்கழகம் தந்தக்கோபுரமாகச் செயற்பட்டது. சமூக நிலைமைகளுடன் தன்னை இணைத்தது. பல்கலைக்கழகம் நடாத்திய பல கருத்தரங்குகள் இத்தகைய இணைப்பைப் பிரதிபலித்தன. ஆக்க இலக்கியமும், அறிவியல் துறைகளும் என்ற தலைப்பிலும் இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல் என்ற தலைப்பிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை நடத்திய கருத்ததரங்குகளை இதற்கு உதார-ணமாகக் கூறலாம். பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி போன்றோர் மாத்திரமல்லாது அப்போது விரிவுரையாளர்களாக இருந்த கலா-நிதி நுஃமான், மு. நித்தியானந்தன் முதலியவர்க-ளும், இந்த மார்க்சீய நிலைப்பட்ட சிந்தனைப் போக்கு கல்வித்துறைகளில் செயறபடக் காரணமாக இருந்தனர்.

அடுத்த முக்கியமான ஒரு அம்சம் தமிழ்த் தேசியவாதத்திற்கு ஆய்வறிவுச் சாலையைப் பல்கலைக்கழகம் அளித்தமையாகும். தமிழ்த்தேசிய இயக்கத்துடன் தொடர்புபட்ட முக்கியஸ்தர்களில் பலர் பல்கலைக்கழகத்துடன் தொடர்புபட்டி-ருந்தனர். குறிப்பாகத் தேசியவாதத்தின் முற்போக்கான போக்குகள் ஆரம்பகாலங்களில் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தன. பிரசுரங்கள் பல இவ்வகையில் அங்கிருந்து வெளிவந்தன. கருத்தரங்குகள் பல நடைபெற்றன. தமிழ் மக்களின் சுயநிர்ண உரிமை என்ற கருத்தாக்கத்திற்கு வேண்டிய ஆய்வறிவு அடிப்படையும் பல்கலைக்கழகத்திலிருந்து கிளம்பியது.

எழுபது, எண்பதுகளில் பெண்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வுக்கும், எழுச்சிக்கும் பல்கலைக்கழகமும் ஒரு தளமாக இயங்கியது. எண்பதுகளின் ஆரம்பத்தில் பெண்கள் முன்னேற்றச் சங்கம், பின்னர் அன்னையர் முன்னணி, பெண்கள் ஆய்வு வட்டம், பூரணி பெண்கள் நிலையம் ஆகியவை வெவ்வேறு அளவில் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தன. பெண் மாணவிகளிடையே தோன்றிய ஒரு உணர்வின் விளைவாகவே எண்பதுகளின் இறுதிப்பகுதியில் யாழ். பல்கலைக்கழகப் பெண்கள் சங்கம் என்ற ஒரு அமைப்பு உத்தியோகபூர்வமாக உருவாகி இயங்கியது.


சமூக இயக்கங்களுடனான பல்கலைக்-கழகத்தின் தொடர்பை இவ்வாறு அடையாளம் காணலாம். பல்கலைக்கழகம் தனது சாதனைகளை நினைவு கூரும்போது இத்தகைய விடயங்-களையும் எண்ணிப் பார்க்க வேண்டியது முக்கியமானதாகும்.

பல்கலைக்கழகம் விமர்சனபூர்வமான மாற்றுச் சிந்தனைகளையும், மாற்றுப் பண்பாட்டையும் உருவாக்கும் தளமாக இயங்கவல்லது. இன்று காணப்படுகின்ற அரசியல் நெருக்கடிகள் பல தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றை மீறித் தனது சர்வதேசத் தன்மையையும் உலகளாவியப் பார்வையையும் விமர்சனப் புலமையையும், வளர்த்துக் கொண்டு தென்னாசியாவின் சிறந்த புலமை மையங்களுள் ஒன்றாக யாழ் பல்கலைக்கழகம் வளர வேண்டும். அதற்குப் பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள சக்திகள் முயலுதல் வேண்டும்.

**பேராசிரியர்**
**மௌனகுரு சித்திரலேகா**

## யாழ். பல்கலைக்கழகம் - 25 ஆண்டு நிறைவு



# யாழ். பல்கலைக்கழகத்தின் தோற்றம்

## வளர்ச்சி பற்றிய சில கருத்துப் பகிர்வுகள்

யாழ்பாணப் பல்கலைக்-கழகத்துடனான எனது தொடர்பு நேரடியானது அல்ல. அங்கு நான் ஒரு ஆசிரியராகவோ, நிர்வாகியாகவோ கடமை ஆற்றியதில்லை. ஆனால், யாழ்ப்பல்கலைக்கழகம் நிறுவப்-படவேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுடனும் அதற்காகச் செய்யப்-பட்ட முயற்சிகளுடனும் தொடர்பு கொண்டி-ருந்தேன். பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால ஆண்டுகள் எனக்கு மிகவும் பரிச்சயமானவை. பல்கலைக்கழகத்தின் (அப்போது அது ஒரு வளாகமாக இயங்கியது) முதலாவது தலைவர் மறைந்த பேராசிரியர் கைலாசபதி என் நண்பனாகவும் இருந்ததால் பல விடயங்களை அறியவும் அதன் வளர்ச்சியை உன்னிப்பாக அவதானிக்கவும் முடிந்தது. இந்த ஒரு பின்னணியிலேயே இங்கு எனது கருத்துக்களைக் கூறுகிறேன்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என்ற கருத்து முன்-வைக்கப்பட்ட போது பிரதான தமிழ்க்கட்சிகள் அக்கருத்தை எதிர்த்தன. எத்தகைய எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது என்பது சுவாரஸ்யமானது.

எதிர்த்தவர்கள் வடக்குக் கிழக்குக்குப் பல்கலைக்கழகம் வேண்டும். ஆனால், அது இந்துப்பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும். அது திருகோணமலையில் அமைய வேண்டும் என்றனர். திருநெல்வேலியில் இருந்த பரமேஸ்வரக் கல்லூரியை பல்கலைக்-கழகத்திற்காக எடுப்பது பிழை என்பதும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வேண்டாம் என்போர் கூறிய இன்னோர் காரணமாகும். யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றம் உருவாக இது வழிவகுக்கும் என்றும் கூறினர்.

ஒரு சிறந்த பாடசாலை இழக்கப்-பட்டுவிடும் என்பது சரியான காரணமே. அதற்காகப் பல்கலைக்கழகத்தையே வேண்-டாம் என்பது ஆச்சரியத்துக்குரியது. பல்கலைக்கழகம் விமர்சனரீதியான கல்வியை ஊக்குவிப்பதாகும்.

மேலும், யாழ்ப்பாணத்திற்குப் பல்-கலைக்கழகம் தேவை என்பதை அக்காலத்தில் ஆட்சியிலிருந்த ஐக்கிய முன்னணி அரசு, சிங்கள ஆட்சி என்ற நிலைப்பாட்டிலிருந்து முன்வைத்தது என்று கூறினாலும் கூட அது சிங்கள பேரினவாதத்தின் விளைவு என்று கூறுவதற்கில்லை. ஏனெனில், ஒரு பல்கலைக்-கழகம் சுயாதீனமாக இயங்கும்போது அப்பல்-கலைக்கழகத்தின் தலைமையும் அந்த அமைப்புமே அதன் பங்கைத் தீர்மானிக்கும்.

இறுதியில் பல்கலைக்கழகம் நிறுவப்-படவேண்டும் என்ற கருத்து வலுப்பெற்ற போது எத்தகைய பல்கலைக்கழகமாக அது அமைய வேண்டும் என்ற விவாதம் பல மட்டங்களில் இடம்பெற்றது. பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளிவந்தன. தமிழ், சிங்கள முற்போக்குச் சக்திகள் பல்கலைக்கழகக் கோரிக்கைக்காகப் பிரச்சாரம் செய்தன.

இறுதியில் பல்கலைக்கழக வளாகம் (அப்போது எல்லாப் பல்கலைக்கழகங்களும் வளாகங்களாகவே இயங்கின.) அமைக்கப்பட்ட-போது பேராசிரியர் கைலாசபதி அதன் முதன் தலைவராக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் ஒரு உயர்கல்வி நிறுவனத்திற்குத் தலைமை அளிப்பதற்கு அவர் பொருத்தமானவர் என்ற கருத்து கல்வியாளர்களிடம் காணப்பட்டதால் அந்நியமனம் வரவேற்கப்பட்டது. கைலாசபதி சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய சமூக விஞ்ஞான ஆய்வாளர் முதற்தடவையாக நியமனம் பெற்றமை முக்கியமான ஒரு விடய-மாகும். இந்நியமனம் யாழ். பல்கலைக்கழகத்தின் எதிர்காலம் பற்றிய பார்வை அதன் விருத்தி ஆகியவை உருவாக முக்கிய காரணமாக அமைந்தது.

பல்கலைக்கழகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துக் கைலாசபதி பலருடனும் உரை-யாடினார். அது ஒரு மேம்பாட்டு மையமாக (Centre of excellence) அமைய வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் தலைமை மாத்திரமல்லாமல் அது இயங்கிய பின்னணியும் அதற்கு ஒரு சாதகமான நிலை-மையையும் ஆற்றலையும் அளித்தன. யாழ்ப்-பாணத்தில் ஏற்கெனவே விருத்தியடைந்திருந்த கல்விப் பாரம்பரியம் தென்னாசியாவின் சிறந்த நூலகங்களில் ஒன்றான யாழ். நூலகம் யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகம் ஆகியவை பல்கலைக்கழகத்துக்கு ஏற்ற பின்னணியாக இயங்கின.

மேலும், கைலாசபதி தமக்கு இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் இருந்தத் தொடர்புகளைப் பயன்படுத்தி ஒரு பரந்த வலைப்பின்னல் அமைப்பைப் பல்கலைக்கழகத்துக்கு ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பல்லின மாணவ, ஆசிரிய சமுதாயம் இயங்கும் ஒரு இடமாக ஆரம்பித்து தென்னிலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து பலர் வருவதும் கருத்தரங்குகளிற் பங்கு பற்றுவதும் நிகழ்ந்தது.

ஆகவே யாழ்ப்பாணத்துக்குள்ளும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருந்த தொடர்புகள் ஆரம்பத்திலேயே பலப்படுத்தப்-பட்டன. சமூக விஞ்ஞான ஆய்வு மரபுகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு பலம் வாய்ந்த புலமை மரபு ஒன்று பல்கலைக்கழகத்தில் உருவாகி வந்தது. இந்நிலையில் 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த அரசியல் மாற்றம், இனவாத வன்செயல்கள் ஆகியவை பல்கலைக்கழக வளர்ச்சிக்கு இடையூறை ஏற்படுத்தின. இதனைத் தொடர்ந்து அங்கு கல்விகற்ற சிங்கள மாணவர்களும் கற்பித்த சிங்கள ஆசிரியர்களும் வேறு பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர். தொடர்ந்து நிகழ்ந்த விடயங்கள் - குறிப்பாக 1981இல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமை இவற்றுள் முக்கியமானது. மேலும் எண்பதுகளில் நிகழ்ந்த அரசியல் பிரச்சினைகளால் பல்கலைக்கழகம் பாதிக்கப்பட்டது.

எனினும், பல்கலைக்கழகத்தின் முக்கியமான சிறப்பம்சம் என்னவென்றால் அது தொடர்ந்து இயங்கியமையாகும்.

இக்காலகட்டத்திலும் தொடர்ந்து பல வளர்ச்சிகள் ஏற்பட்டன. மருத்துவ பீடம் அமைக்கப்பட்டது. பல்வேறு ஆராய்ச்சிகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்னெடுத்தது.

நாவலர் பற்றிய ஆய்வும், பாரதி நூற்றாண்டையொட்டிய கருத்தரங்கும் இவற்றில் குறிப்பிடக்கூடியவை.

இப்போது எம்முன்னுள்ள கேள்வி பல்கலைக்கழகத்தின் எதிர்க ாம் எப்படி-யிருக்க வேண்டும் என்பதாகும். இதனை நான் முற்றிலும் பல்கலைக்கழகத்திற்கு வெளியி-லிருந்துதான் பார்த்துக் கூறுகிறேன்.

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும்போது அதற்கு இருந்த சர்வதேசியத் தன்மை உலகளாவிய பார்வை பல்கலைக்கழகம் ஒரு உலகளாவிய அம்சம் என்ற கோட்பாடு ஆகியவை தற்போது பலவீனமடைந்-திருக்கலாம். இதற்கு இடைக்காலத்தில் ஏற்பட்ட யுத்தம் அதன் பாதிப்பு, அரசியல் நிலைமைகள் போன்றவை காரணமாக இருந்திருக்கலாம்.

எனினும், இன்று வடபகுதி எதிர்-நோக்குகின்ற நிலைமைகளைப் பார்க்கும் போது இப்பல்கலைக்கழகத்திற்கு முக்கியமான பங்கு இருக்கிறது என்பது புலப்படும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வட கிழக்குப் பகுதிகளின் புனரமைப்பு, அபிவிருத்தி ஆகியவை பற்றிய ஆய்வு முக்கியப்-படுத்தப்படவேண்டும். இயற்கை வளங்கள் பற்றிய ஆய்வு முக்கியம், எதிர்கால வளர்ச்-சிக்குப் பங்களிக்கக்கூடிய வகையில் அப்-பல்கலைக்கழகம் இயங்க வேண்டும். முன்னாள் துணைவேந்தர் துரைராஜா அவர்கள் நோர்வே வந்த போது பல்கலைக்கழக எதிர்காலம் பற்றி என்னுடன் கலந்துரையாடினார். அப்போது நான் இதே கருத்தை பல்கலைக்கழகத்தில் ஒரு பிரதேச அபிவிருத்தி மையம் (Regional Development Centre) ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறினேன். இந்த அபிப்பிராயத்தை ஏற்றுப் பின்னர் எனக்குக் கடிதமும் எழுதியிருந்தார்.

சர்வதேச தொடர்புகள் பலப்படுத்தப்-படவேண்டும். சமூகத்துடன் அதிகளவான இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.


இப்போது தமிழர்கள் உலகின் பல பாகங்-களிலும் பரந்து வாழ்கிறார்கள். அவர்களி-டையே பல ஆய்வாளர்கள் வளர்ந்துள்ளனர். சமூக ஆய்வாளர்கள் மாத்திமல்ல இன்றைய தகவல்கள் தொழிநுட்பத்துறையிலும் தேர்ச்சி-பெற்றபலர் இருக்கின்றனர். இத்தகைய திறமைகளையெல்லாம் பயன்படுத்தி பல்கலைக்கழகம் வளரவேண்டும் என எதிர்பார்ப்போம்.

**பேராசிரியர்**
**என். சண்முகரத்தினம்**

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்கள சாதியமைப்பு - சில குறிப்புகள்



இலங்கையில் முரண்பாடுகளின் நிரல்படுத்தலின் போது தமிழ்த் தேசப்போராட்டமானது முதன்மை பெற்றதும் ஏனைய சமூக முரண்பாடுகள் நிரற்படுத்தலில் பின்னுக்குத் தள்ளப்படவும் செய்தன.

எனவே பெருங்கதையாடலாக தமித்ழ்தேசப் போராட்டத்தோடு மையப்பட்ட கருத்தாடல்கள் அமைந்தன. அவ்வாறு நிரல் ஒழுங்கில் பின்னுக்குத்தள்ளப்பட்டவற்றுள் வர்க்க மற்றும் பெண்களின் பிரச்சினைகள், சாதியப் பிரச்சினைகள் என்பனவும் முக்கியமாக அடங்குகின்றன. இந்த நிலையில் சாதியம் குறித்த போதிய ஆய்வுகள், விவாதங்கள் தமிழ்ச் சூழலில் அருகி வருவதையும் இனங்காணலாம்.

சிங்கள சிவில் சமூக கட்டமைப்பில் தமிழ்ச் சமூகம் அளவுக்கு இறுக்கமான சாதிய கட்டமைப்பு மோசமாக இல்லாவிட்டாலும் அங்கு பல்வேறு ஆய்வுகள் வெளிவந்தவண்ணம் உள்ளன. குறிப்பாக தேர்தற் காலங்களில் சிங்களச் சூழலில் சாதியம் தலைதூக்குவதைப் பற்றி பல்வேறு கட்டுரைகள் வெளிவரும். இப்போது தேர்தல் ஆரவாரங்கள் தொடங்கியாகி விட்டது. இப்போது தலைகாட்டத் தொடங்கும்.

இந்த நிலையில் சிங்கள சாதிய கட்டமைப்பு குறித்த மேலோட்டமான அறிமுகத்தையேனும் தமிழ்ச்சூழலில் செய்வது பயனுள்ளதாக அமையும்.

சிங்கள சாதிய கட்டமைப்பு குறித்த ஆய்வுகள் 15ஆம் நூற்றாண்டிலேயே காணக்கிடைக்கின்ற போதும் இந்த 20ஆம் நூற்றாண்டில் அதுவும் குறிப்பாக 1971இல் ஏற்பட்ட ஜே.வி.பி. கிளர்ச்சியைத் தொடர்ந்து சாதியம் குறித்த ஆய்வுகள் பல கோணங்களில் பல ஆய்வுகளாக வெளிவரத் தொடங்கின. 71 கிளர்ச்சிக்கு காரணமான அம்சங்களில் சாதிய பிரச்சினை முக்கியமான பாத்திரமாற்றியது என்பதை பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். 71 கிளர்ச்சியின் பின் அது பற்றிய புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்ட அரச தரப்பினர் கைது செய்யப்பட்டவர்கள், மற்றும் கொல்லப்பட்ட இளைஞர்களிடமிருந்து சாதியவாரியாக தரவுகளை திரட்டியதும் அதன் காரணமாகத் தான். இந்தத் தரவுகள் பின்னர் பல ஆய்வுகளுக்கு மூல ஆதாரங்களாக அமைந்தன.

71 கிளர்ச்சியில் ஜே.வி.பி.யின் படைத் துறையின் ஸ்தாபகரும், முக்கிய தலைவர்களில் ஒருவரும் இன்று வெளிவந்துகொண்டிருக்கும் மாற்றுப் பத்திரிகைகளில் ஒன்றான "ராவய"வின் ஆசிரியருமான விக்டர் ஐவன் சிங்கள சாதிய கட்டமைப்பு குறித்து இலங்கையில் பல ஆய்வுகளைச் செய்திருப்பவர். அது மட்டுமன்றி இலங்கையின் அரசியலில் எந்த பிரதான நிகழ்வுகளிலும் அதில் உள்ள சாதியத்தின் பங்களிப்பைப் பற்றி தேடித்துருவுபவர்.

இலங்கையில் நிலவுகின்ற சாதிய அமைப்புமுறையானது சிக்கல் வாய்ந்தது. வடக்கு கிழக்குச் சூழலில் நிலவுகின்ற சாதியம், இந்திய வம்சாவழியினர் மத்தியில் நிலவி வரும் சாதியம், மற்றும் சிங்கள சமூகத்தினர் மத்தியில் நிலவுகின்ற சாதியம் ஆகிய மூன்றுவித கட்டமைப்புகளுக்கிடையிலும் உறவுகளும், முரண்பாடுகளும் உண்டு. இவற்றுக்கென்று தனியான பண்புகள் வடிவங்கள் உண்டு. சாதியப் படிநிலை ஒழுங்கிலும் கூட ஏகப்பட்ட வித்தியாசங்கள் உண்டு.

ஆனால் சாதியம் என்பது பிறப்பால் தீர்மானிக்கப்படுவது, அகமணமுறை, சாதிய ரீதியிலான தொழிற்பிரிவினை என்பன எல்லாம் இங்கும் பொருந்தும்.

ஆனால் இந்திய சாதிய கட்டமைப்பு மற்றும் வடகிழக்குக்குள் நிலவுகின்ற சாதிய கட்டமைப்புக்குள் நிலவுகின்ற அதிகாரப் படிநிலை ஒழுங்கு (நிரலொழுங்கு) போல சிங்கள சாதிய கட்டமைப்பில் இல்லை. இங்கு மிகவும் சிக்கல் வாய்ந்தது. தவிரவும் சில சாதிகளுக்கு சமமான வேறு சாதிகளையும் இதில் காண முடியும்.

பௌத்த சித்தாந்தத்தைப் பொறுத்தளவில் அது சாதியத்துக்கு எதிரான ஒன்று. புத்தரின் போதனைகள் பல சாதிய எதிர்ப்புகளைக் கொண்டவை. "வசல சூத்திரய" எனும் புத்தரின் போதனையானது சாதியத்தைக் கடுமையாக சாடும் ஒன்று. இலங்கை அரசர்களுக்கும் இந்திய அரசர்களுக்குமிடையில் ஏற்பட்ட உறவுகள், ஆக்கிரமிப்புகள், என்பனவற்றுக்கூடாகவே இந்திய சாதியம் சிங்கள சமூகத்தவரிடமும் மெல்ல மெல்ல நிறுவப்பட்டதாக பல்வேறு ஆய்வாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். சிங்கள சமூகத்தில் இச்சாதிய கட்டமைப்புக்கு தோதான படிமங்கள் அதன் கட்டமைப்பில் பிறக்கவில்லை. ஆனால் இந்த சாதிய கட்டமைப்பை நிலைநிறுத்துவதை அன்றைய அரசர்களும் நிலப்பிரபுத்துவ சக்திகளும் சாதகமாகக் கருதினர். (இலங்கைக்கு இந்தியாவிலிருந்து தோட்டத்தொழிலாளர்களை இறக்குமதி செய்த போது ஆங்கிலேயரும் தமது நிர்வாகத்தை செவ்வனே நடாத்த அங்கிருந்த சாதிய கட்டமைப்பை அப்படியே தக்க வைப்பதில் இப்படித் தான் அக்கறை காட்டியிருந்தனர்.) இலங்கையில் பின் வந்த பல பௌத்த துறவிகள் சாதியத்தையும் சிங்கள பௌத்த கட்டமைப்போடு இணைத்து இலக்கியங்கள், மற்றும் ஒழுக்கக் கோவைகளை அமைத்துக் கொண்டனர். இவை தான் பின்னர் சாதிய கட்டமைப்புக்கு நிறுவன வடிவம் கொடுப்பதில் பங்காற்றின. கண்டிய ராச்சிய காலகட்டத்தின் கீழ் அமைந்த நிலப்பிரபுத்துவ கட்டமைப்பின் கீழ் தான் சிங்கள சாதியம் வலுப்பெற்றதாக ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.


பெண்களுக்கு எதிராகவும், அடிமட்ட தொழில்களைப் புரிந்த விளிம்புநிலையினருக்கு எதிராகவும் சாதிய ஒழுக்கக்கோவைகளை "பௌத்த முலாம் பூசி" அளித்ததில் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராக கருதப்படும் அநகாரிக்க தர்மபாலவின் பாத்திரம் முக்கியமானது.

நாவலர் சைவ சித்தாந்த ஒழுக்கக் கோவையை நிறுவுகின்ற பணியைச் செய்கின்ற போது பெண்கள் குறித்த மோசமான ஒழுக்க விதிகளை சுமத்தியதற்கு ஒப்பானவற்றை அநகாரிக்க தர்மபாலவின் ஒழுக்கக்கோவையிலும் காணலாம். (இது குறித்து தனியாக பார்க்கலாம்.)

மலைநாட்டுச் சிங்கள சாதிய கட்டமைப்பை விட கரையோரச் சிங்கள சாதியக் கட்டமைப்பு மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன. காலனித்துவ சக்திகளின் முதல் ஆக்கிரமிப்பாகிய கரையோரங்களில் இருந்து வந்த கராவ (தமிழில் கரையார் சாதியையொத்த மீனவத் தொழிலைச் சார்ந்தோர்) சாதியானது கத்தோலிக்க மதச் செல்வாக்கின் பின் "கத்தோலிக்க கராவ", "பௌத்த கராவ" என்கிற பிரிவுகளாக தம்மை அடையாளப்படுத்துகின்ற போக்கெல்லாம் இருக்கின்றன. சிங்கள சமூகத்தில் பிரதான இடத்தையும், பெரும்பாலானவர்களும், ஆதிக்க சாதியாகவும் உள்ள கொவிகம (விவசாய நிலப்பிரபுத்துவத்தைச் சார்ந்த-தமிழ்ச் சூழலில் வெள்ளாளர் சாதிக்கு ஒப்பானவர்கள்) சாதி மற்றும் கராவ சாதி போன்றவற்றுக்கு தனியான அமைப்புகளும், அச்சாதிகளுக்கான கொடிகளும் கூட இருந்திருக்கின்றன. (பார்க்க படம்)


"ஜனவங்சய" எனும் பழமைவாய்ந்த நூலில் 26 சாதிகள் குறிப்பிடப்படுகிறது. (பார்க்க அட்டவணை) மத்தியகால இலங்கையில் இருந்ததாகச் சொல்லப்படும் சாதிகள் 17ஐ ஜே.டி.லெனரோல் குறிப்பிடுகிறார். அதில் அட்டவணையில் உள்ள சாதிகளும் அடக்கம். பேராசிரியர் நந்ததேவ விஜேசேகர எழுதிய "இலங்கை மக்கள்" எனும் நூலில் 43 சாதிகளின் பட்டியலைக் குறிப்பிடுகிறார். ரொபர்ட் நொக்ஸ் 12 சாதிகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

பௌத்த கராவ சாதியினரின் கொடி



"Sri Lanka Flags"-Edith M.G.Fernando (Unique memorials of Heraldry)

கத்தோலிக்க கராவ சாதியினரின் கொடி



"Sinhalese Banners and Standards" By Edward W.Perara -1916

நெகிழ்ச்சியானது. ஏனெனில் காலனித்துவ ஆக்கிரமிப்பின் கீழ் கத்தோலிக்க மதத்தின் செல்வாக்கு இதில் குறிப்பான மாற்றங்களைக் காணச் செய்தன. என்றாலும் சாதியத்தின் பண்பை அப்படியே குலைக்காமல் வடிவத்தில் எவ்வாறிருந்த போதும் சாதிகளின் அளவு மேலும் கீழும் இருந்தாலும் சகலர் முன் வைத்ததிலும் வித்தியாசம் இல்லை. பல சிறிய சாதிகள் வழக்கொழிந்து போய்விட்டன. அவை ஏனைய சாதியினரோடு காலப்போக்கில் கலந்து விட்டன.

**1970இல் இலங்கையில் சாதியவாரியான கணக்கெடுப்பு**

| இனம் | சாதிப் பெயர் | மக்கட் தொகை 000 | சிங்கள மக்கட் தொகையில் | மொத்த சனத் தொகையில் |
|---|---|---|---|---|
| சிங்களம் | கொவிகம | 4.50 | 50.56 | 36.0 |
| | கரா்வ /சலாகம/ துராவ | 0.80 | 8.98 | 6.4 |
| | பத்கம / வகும்புர | 3.00 | 33.70 | 24.0 |
| | வேறு | 0.60 | 6.74 | 4.8 |
| தமிழ் | | 1.41 | | 11.2 |
| முஸ்லிம்/மலே | | 0.75 | | 6.0 |
| வேறு சிங்கள | | 0.05 | | 0.4 |
| இந்தியத் தமிழர் | | 1.40 | | 11.2 |

ஆதாரம்: janice jiggins, *Caste and the Family in the Politics of the Sinhlese, P 35*

**இலங்கையின் சிங்கள சாதியத்தைப் பற்றிய மிகவும் பழமைவாய்ந்த நூல் என கருதப்படுகின்ற "ஜனவங்சய" வில் குறிப்பிடப்பட்டுள்ள 26 சாதிகளும் அவற்றின் தொழிற்பிரிவினைகளும்**

| சாதியின் பெயர் | வேறு பெயர்கள் | தொழிற் பிரிவினை |
|---|---|---|
| 1. கொவியோ | ஹந்துருவோ | விவசாயம் |
| 2. பேசகாரயோ | சலாகம. ஹாலி | நெசவு |
| 3. கம்புரோ | நவந்தன்னோ. கல்லந்தோ | தட்டார், பொற்கொல்லர் |
| 4. வடுவோ | வடுவோ | தச்சன். கொல்லர் |
| 5. ஹன்னாலி | | தையல் |
| 6. ரதவு | | சலவை |
| 7. எம்பட்டயோ | | முடிதிருத்தல் |
| 8. சொம்மன்யோ | | தோல் பதனிடுவது |
| 9. துராவோ | ராமதின்னோ | கள் இறக்குபவர் |
| 10. கும்பகாரயோ | படகெலயோ | மட்பாண்டம் செய்பவர் |
| 11. கராவோ | | மீன்பிடி |
| 12. வெத்தோ | | வேடுவம் |
| 13. பெரவாயோ | நெக்கதியோ | பறையடித்தல் |
| 14. ஹக்குரோ | | கருப்பட்டி செய்வோர் |
| 15. குண்ணோ | | சுண்ணாம்பு பதனிடல் |
| 16 பன்னயோ | | புல்வெட்டுவோர் |
| 17 யமன்கோ | | இரும்புக்கொல்லர் |
| 18 வெல்வடுவோ | | கதிரை பின்னுவோர் |
| 19 கஹாலயோ | | "கீழ்த்தர" வேலை புரிவோர் |
| 20 பதுவோ | | பல்லக்கு தூக்குவோர் |
| 21 மாலாகாரயோ | | பூத்தொடுத்தல் |
| 22 கின்னரயோ | | பாய் பின்னுவோர் |
| 23 ரொடியோ | | கயிறு பின்னுவோர் |
| 24 ஒலியோ | | நடனமாடுவோர் |
| 25 இந்திரஜாலகயோ | | விதூசகர் |
| 26 சண்டாலயோ | | இறைச்சி வெட்டுவோர் |

சிங்கள சாதியமைப்பில் இறுக்கமான சாதிய படிநிலையொழுங்கு இல்லாததும் சில சம அந்தஸ்தான சாதிகள் இருந்ததும் இதற்கான காரணமாக இருக்கலாம்.

என்றாலும் இன்றும் எஞ்சியிருக்கிற வர்க்க நிலையில் பலம்வாய்ந்த ஆதிக்க சாதிகள் பல இன்றும் இலங்கையின் வர்க்க, அரசியல், நிலைகளில் தமது அதிகாரத்துவத்தைத் தக்க வைத்திருக்கின்றன. இலங்கையின் அரசியலை தீர்மானிக்கின்ற சக்திகளாக நிலப்பிரபுத்துவ பின்னணியைக் கொண்ட, அதேவேளை இன்று பெரும்பாலும் தரகுமுதலாளித்துவ சக்திகளாக தங்களை நிறுவியிருக்கிற கொவிகம மற்றும் கராவ ஆகிய சாதியினர் தான் அதிகாரத்துவ நிலையில் முக்கியத்துவ இடத்தை வகிக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று கீழ் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் அகமணமுறை உடைந்து கலப்பை நோக்கிச் செல்வது அதிகரிப்பதனூடாக அடித்தட்டு மக்களிடையே சாதியம் ஓரளவு தகர்ந்து வந்தாலும் மத்தியதரவர்க்க மற்றும் உயர் மத்தியதரவர்க்க மேட்டுக்குடியினரிடம் இந்த அகமணமுறை பேணப்பட்டே வருகிறது. சொத்து வேறு சாதியினருக்கு பிரிந்து செல்லாமலிருக்கவும் அது ஓரிடைத்தைநோக்கி (தம்மை) மையப்படுத்துவதற்காகவும், இந்த சாதிய அகமணமுறை இறுக்கமாக இந்த வர்க்கத்தினரிடையே பேணப்படுகிறதெனலாம்.

இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கையைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களும் அடித்தட்டு மக்களிடையே சாதிய கலப்புகளை ஏற்படுத்திவிட்டாலும், மறுபுறம் ஆதிக்க சாதிகள் கேந்திர தளங்களில் தம்மை நிறுவனப்படுத்தவும் செய்திருக்கின்றன. அதனை இலங்கையில் சகல சாதிய கட்டமைப்புக்குள்ளும் பார்க்கலாம்.

வர்க்க மற்றும் ஏனைய சமூக அந்தஸ்த்து சார்ந்த விடயங்களில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதற்கான வாய்ப்புகள் ஓரளவு இருக்கின்ற போதும் சாதியமானது பிறப்பால் தீர்மானிக்கப்படுவது என்பது முக்கிய பண்பாகும்.

இலங்கையின் அரசியலில் அன்று இலங்கை தேசிய காங்கிரஸ் தொடக்கம் அதன் பின் வந்த சகல அரசியல் கட்சிகள், அரசியல் நிலைமைகள் அனைத்திலும் சாதியத்தின் செல்வாக்கு இருந்ததை பலர் அறியார். தோற்றப்பாடாக எட்டப்பட்ட நிகழ்வுகள் இந்த உண்மைகளை துலங்க வைக்க வாய்ப்பளிக்கவில்லை. இது தமிழரசியலிலும் சரி சிங்கள அரசியலிலும் சரி பொருந்தும். அதே வேளை இவ்வாறு சாதியம் செல்வாக்கு அந்தந்த சாதிய (சிங்கள, தமிழ்) கட்டமைப்புகளுக்குள் தான் இயங்கின என்றில்லை. இனங்களுக்கிடையிலான உறவுகள் முரண்பாடுகள் என்பனவற்றைத் தீர்மானிப்பதிலும் இந்த சாதியம் பரஸ்பரம் தலையீடு செய்திருக்கிறது. இவை குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உதிரிகளாக ஆங்காங்கு இவ்வாறானவற்றுக்கு தகவல்களாக பல ஆதாரங்கள் கிடைக்கப்பெறுகின்ற போதும் இந்த நோக்கில் அவ்வகை ஆய்வுகள் முறையாக செய்யப்பட்டதில்லை. அதுவும் முக்கியமாக இலங்கையில் தற்போது நிலவும் தமிழ்த் தேசப்போராட்டத்தைத் தீர்மானிப்பதில் இவற்றின் பாத்திரம் கண்டறிவது இன்றைய நிலையில் அவசியமானதும் கூட.

-என்.சரவணன்

நன்றி - நூலகத்திட்டம்



சென்ற இதழ் தொடர்ச்சி

### இதனை ஒரு உண்மையான இனச் சுத்திகரிப்பு என்று சொல்லலாமா?

இப்பொழுது புலிகள் அறிவித்திருக்கின்ற அறிவிப்புக்கள் எம்மை அந்த முடிவுக்கு வரமுடியாமல் தடுக்கின்றது. அவர்களுடைய செயற்பாடுகளும், கருத்துக்களும் எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கின்றன. வழமையிலேயே புலிகளுடைய ஒவ்வொரு நடவடிக்கைகளும் புலிகளை நோக்குபவர்களை குழப்பத்தில் ஆழத்துவது போன்று இந்த விஷயமும் எங்களைத் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரமுடியாமல் குழப்பத்தில் ஆழத்தியிருக்கின்றது. இதுவும் புலிகளுடைய ஒரு யுத்தியாக இருக்கலாம்.

### நீங்கள் வெளியேற்றப்பட்ட பின் இந்த மாதிரியான ஒரு நிலைமை வந்தபின் தமிழ்த் தரப்பினரிடையே இருந்து எத்தகைய எதிர்வினை ஏற்பட்டது?

வெளியேற்றப்பட்ட காலகட்டத்திலே தமிழ்த்தரப்பில் இருந்து மக்கள் கேள்வி [illegible]ழுப்பி[illegible]ருக்கின்றார்கள் தமிழ்த் தலைவர்களைப் பொறுத்த வரையிலே இது ஒரு அதிர்ச்சியான ஒரு செயலாக இருந்திருந்தாலும் கூட, அவர்கள் இதைப்பெரிதாக அலட்டிக் கொண்டு இந்த மக்களுடைய வெளியேற்றம் தொடர்பாக, இந்த மக்களிடம் பலவந்தமாகப் பறிக்கப்பட்ட உரிமைகள் தொடர்பாக இந்த மக்களை ஒருமைப்படுத்திக் கொண்டு செய்யக்கூடியதான பணிகளை யாரும் செய்ததாக இல்லை.

இதில் வந்து வடக்கு முஸ்லிம்கள் மீது கரிசனையும், அக்கறையும் முற்றாகக் காட்டப்படவில்லை என்று நாங்கள் சொல்ல முடியாது. ஆனால், வடக்கு முஸ்லிம்கள் விமோசனம் பெறக்கூடிய அளவுக்கு அக்கறை காட்டப்படவில்லை. இந்த ஒன்பது வருட காலங்களில் தமிழ் மக்கள் அதாவது புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள், சாதாரண மக்கள், ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள் அனைவரும் இதில் அடங்குகிறார்கள். இவர்கள் மூலமாக வடக்கு முஸ்லிம்களுக்கு பெற்றுத் தரப்பட்டிருக்க வேண்டிய உரிமைகள் பெறப்படக் கூடிய நிலைமை ஏற்படுத்தப்படவில்லை. ஏதேதோ அவர்கள் அவர்களால் முடிந்த பங்களிப்புகளை செய்திருக்கிறார்கள். அதை நாங்கள் மறுப்பதற்கில்லை. தனிப்பட்ட ரீதியில் செய்திருக்கிறார்கள். அமைப்பு ரீதியாகவும், செய்திருக்கிறார்கள்.





எழுத்துக்கள் மூலமாகவும் செய்திருக்கிறார்கள். மறுப்பதற்கில்லை. ஆனால், ஒரு விமோசனத்தை இந்த மக்களுக்கு பெறக் கூடிய அளவில்அது இல்லை. இப்பொழுதும் எங்களுடைய தமிழ் முஸ்லிம் உறவு பழைய நிலைமையில் தான் இருக்கிறது. வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்படுவதற்கு முன்னால் எப்படித் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் உறவும், நட்பும் இருந்ததோ அது இன்னும் வடக்கிற்கு வெளியேயும் உள்ளது. அந்த உறவு அதில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இப்படி ஒரு தவறு நடந்து விட்டதே என்று அவர்களும் உணர்கிறார்கள். உதாரணமாக 95 ஒக்டோபரிலே தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்திலே இருந்து வெளியேற்றபட்டபோது (பல தரப்பட்ட தமிழ் மக்கள் அதில் இருக்கிறார்கள்.) சொன்னார்கள் நீங்கள் வெளியேற்றப்பட்ட போது மௌனமாய் இருந்ததற்குரிய தண்டணையைத் தான் இன்று அனுபவிக்கிறோம் என்று.

நாங்கள் வடக்கில் வாழும்போது போராட்டத்திற்கு எதிரானவர்களாகவோ, போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பவர்களாகவோ இருக்கவில்லை. எப்படி அந்த மக்களோடு சகல விஷயத்திலும் ஒன்றிணைந்து இருந்தோமோ அதேபோல் போராட்டத்திலும் , ஒன்றிணைந்து தான் இருந்தோம்.புலிகளிலும் நிறைய முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தார்கள். இன்றைக்கும் புலிகள் அமைப்பில் முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

### வ.மு.உ.அமைப்பின் (NMRO) நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லுங்கள் ?


வெளியேற்றப்பட்டதன் பிறகு இன்றுவரை



வடக்கு முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் (N.M.R.O.) செயலாளர் மௌலவி பீ.ஏ.எஸ்.சுப்யான் அவர்களுடனான நேர்காணல்

வ.மு.உ.அமைப்பின் (NMRO) நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அதாவது அதன் பிரதானமான குறிக்கோள் எங்களுடைய தாயகமான பாரம்பரிய பூமிக்கு நாங்கள் மீளச் சென்று உரிமையோடு வாழ வேண்டும் என்பதே. எனவே மீளச் செல்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதானால் நாங்கள் வெளியேற்றப்பட்டதன் பிறகுகும் தமிழ் மக்களுடன் எந்தவிதமான முரண்பாடும் கொள்ளாது அவர்களுடைய போராட்டத்திற்கு எந்தவிதமான இடைஞ்சலாகவோ தடையாகவோ இல்லாமல் எங்களை நாங்கள் ஒரு சரியான கட்டுக்கோப்பிற்குள் தான் கொண்டு செல்கின்றோம். உதாரணமாக நாங்கள் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது அதனைப் பகிஷ்கரிக்கும்படி குறிப்பிட்டோம். அதிலே எங்களுடைய பிரதான நோக்கம் பற்றி எங்களுடைய அகதி இதழ் 05, 06 ஆகியனவற்றில் எழுதியிருக்கிறோம். அதனுடைய பிரதான நோக்கம் என்னவென்று சொன்னால், தமிழ் மக்கள் வாக்களிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தால் ஒரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் முஸ்லிம்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. இந்த ஒரு சந்தர்ப்பத்திலே நாங்கள் அவர்கள் வாக்களிக்க முடியாத சூழ்நிலையிலே இருக்கும் பொழுது அதனைப் பயன்படுத்திக் கொள்வதானது சந்தர்ப்ப ரீதியான ஒரு துரோகமாகக் கருதப்படும் என்ற நிலையிலே தான் நாங்கள் அது தவறானது எனப் பார்த்தோம். இன்று வரையும் அந்த நிலைப்பாட்டோடு தான் நாம் எங்களது நடவடிக்கைகளை முன் எடுத்து வந்து கொண்டிருக்கிறோம். அதற்காகவேண்டி விமர்சனங்களை நாங்கள் மூடிமறைக்க முடியாது.

உண்மையிலே புலிகளைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களுடைய விருப்பம் என்ன என்பதை புலிகள் வந்து வாழ்ந்த காலத்திலே நன்றாக அறிந்திருப்பார்கள். பல்வேறு வழிகளிலே முஸ்லிம் மக்கள் தங்களுடைய விருப்பத்தை, தங்களுடைய அபிலாஷைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே சரிநிகர் கூட எங்களுக்குச் சரியான தளம் அமைத்துத் தந்திருக்கிறது. ஆனால், புலிகள் இதுவரையும் முஸ்லிம் மக்கள் தொடர்பாக மௌனமாக் இருப்பது எமது மக்களை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இப்போது யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. இந்த யுத்த சூழ்நிலையில் எமது மக்கள் மீண்டும் அங்கு போவது, வாழ்வது, இருப்பது தொடர்பான விஷயங்கள் எல்லாம் மக்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஆனால் வடமாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மீளவந்து குடியேறலாம் என்ற ஒரு செய்தியை புலிகள் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்த வேண்டும். புலிகளின் தலைவர் பிரகடனப்படுத்த வேண்டும். இதைத் தான் இப்போது முஸ்லிம்கள் விரும்புகிறார்கள். அதன்பின்பு அடுத்தகட்டமாக முஸ்லிம்களுடைய மீள் குடியேற்றம் தொடர்பாக புலிகளுடைய தலைமையும், வடபகுதி முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற - பிரதிநிதித்துவம் என்று அரசியல் கட்சிப் பிரதிநிதித்துவத்தைக் குறிப்பிடவில்லை.- தலைமையும் ஸ்தாபக ரீதியாக ஒரு பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் திரும்பிச் சென்று வாழக் கூடிய சூழ்நிலையில் மீண்டும் இது போன்ற பிரச்சினை வராமல் எப்படி நாங்கள் கண்ணியமாகவும், உரிமையுடனும், பாதுகாப்புடனும், நல்லுறவுடனும் வாழ முடியும் என்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் செய்து உடன்பாடு காணப்படவேண்டும். இந்த உடன்பாட்டிலேயே சர்வதேச ரீதியான ஒரு கண்காணிப்பு இருக்க வேண்டும் என்றும் மக்கள் விரும்புகிறார்கள். புலிகளுடைய கடந்த கால நடவடிக்கை தான். பல உடன்பாடுகளும் ஒப்பந்தங்களும், பல்வேறு விதமான சக்திகளோடும் புலிகள் செய்திருக்கிறார்கள். யார் தரப்பில் பிழை, சரி என்பது வேறு. ஆனால், இவையெல்லாம் நடைமுறையிலே வரவில்லை. எனவே இந்த மக்கள் ஒன்பது வருடகாலமாக அகதி முகாமிலே பலவிதமான கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இனிமேலும் இப்படியொன்று வராமல் இருக்க வேண்டும். அப்படி வரக் கூடிய சூழ்நிலை வராமல் இருக்க வேண்டும். எதிர்காலத்தில் எங்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய சக்திகளும் சர்வதேச ரீதியிலே இருக்கிறார்கள் என்பது உலகத்துக்கு தெரிய வேண்டும் என்பதற்காக வேண்டி இப்படியான உடன்பாட்டை வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் மத்தியில் செய்யவேண்டும் என்று விரும்புகிறார்கள். இதுதான் மக்களுடைய நிலைப்பாடு. முதல் பிரகடனம் வடமாகாணம் முஸ்லிம்களுடைய பூமி. அவர்களுக்குக் கதவுகள் திறந்திருக்கின்றது, அவர்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம், போகலாம் அது அவர்களுடைய விருப்பம் என்பதை பிரகடனம் செய்ய வேண்டும். NMRO உடைய கோரிக்கையும் அது தான். புலிகள் தடை விதித்திருக்கிறார்கள். அந்தத் தடை இன்னும் அமுலில் இருக்கிறது என்று சொல்வதற்கு ஒரே ஒரு அத்தாட்சி என்னவென்று சொன்னால், வவுனியாவிலே தாண்டிக்குளத்தைத் தாண்டிய ஆறு முஸ்லிம்கள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. புலிகள் வந்து முஸ்லிம்களுக்கு அங்கு தடையேதும் இல்லையென்று சொன்னால், தடையேதும் இல்லையென்ற நிலைப்பாடு எடுத்திருந்தால் அந்த முஸ்லிம்களையாவது போகச் சொல்லி விடுதலை செய்திருக்க வேண்டும். 1990இலே அவர்கள் வெளியேற்றப்பட்ட பின்னர், கூலி வேலை செய்வதற்காக வவுனியாவிலே அந்த எல்லையிலே இருந்து வரும் ஆட்களின் சாமான்களைத் தூக்கி வந்து ஓமந்தையிலே இருந்து வவுனியாவிற்கு கொடுப்பதும், வவுனியாவிலிருந்து ஓமந்தைக்கு கொண்டு போவதுமாக இருந்தார்கள். அப்படிக் கொண்டு போகும் போது புலிகளுடைய எல்லையைத் தாண்டி கொஞ்சம் உள்ளே சென்று விட்டார்கள். புலிகள் அவர்களை பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். ஆறு பேரும் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இது எதை எடுத்துக் காட்டுகிறது. எங்களுடைய எல்லைக்குள் நுழைந்தால் எங்களுடைய தண்டனைக்கு உள்ளாவீர்கள் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. இப்பொழுது சில பகுதிகளிலே முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அந்த முஸ்லிம்கள் நாங்கள் அறிந்த வகையிலே அவர்கள் பெரிய அளவிலே புலிகளுடன் பேசிக் கொண்டு, பேச்சுவார்த்தைகள் செய்து கொண்டு, இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சில புரிந்துணர்வுகள் இருந்திருக்கலாம். யாழ்ப்பாணத்திற்கும் சில முஸ்லிம்கள் போய் வந்து கொண்டு இருக்கின்றார்கள். வியாபாரங்கள் நடத்தக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் குறிப்பிட்ட ஒரு சாரார் தான் போய் வந்து கொண்டிருக்கின்றார்கள். மன்னார் மக்களிலே பத்து வீதமான மக்கள் அங்கு குடியேறி விட்டார்கள். விடுவிக்கப்பட்ட பிரதேசத்திலே இவர்களுடைய நடவடிக்கைகளை. புலிகள் அனுமதித்துக் கொண்டிருக்கின்றார்கள். அது வெறுமனவே முஸ்லிம்களுடைய தாயகம் என்ற , முஸ்லிம்களும் இத்தாயகப் பூமியிலே வாழலாம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலா அல்லது இவர்கள் வாழ்வதால் புலிகளுக்கு அங்கு ஏதாவது நலன்கள் இருப்பதனால் இவர்களுடைய வாழ்கையின் நிலைப்பாடுகளை அனுமதித்துக் கொண்டிருக்கின்றார்களா என்பது தெரியவில்லை.



### வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் கட்சி போன்ற அரசியல் கட்சிகள் மேற்கொண்ட அணுகுமுறையை உங்களுடைய ஸ்தாபனம் எவ்வாறு நோக்குகிறது?

1992ம் ஆண்டு அதாவது நான் புலிகளுடைய தடுப்புக் காவலிலிருந்து விடுபட்டு தென்பகுதிக்கு வந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலே எங்களுடைய மக்கள் இவ்வளவு துன்பங்களையும், துரயங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையை நான் சகித்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்தேன். நேரடியாக மக்கள் வாழும் ஒவ்வொரு முகாமிற்கும் ஒவ்வொரு படலையாகச் சென்று ஒவ்வொரு மக்களுடைய குறைகளையும் தெரிந்து கொண்டேன். எந்த நேரத்திலே எந்த மக்களும் என்னிடத்திலே எனக்கு அது தா இது தா என்று கேட்கவில்லை. நாங்கள் எப்படியாவது எங்களுடைய மண்ணுக்குப் போக வேண்டும். அதற்குரிய வழியைப் பாருங்கள் என்று சொல்கின்ற அதே சந்தர்ப்பத்திலே இன்னொன்றையும் சொன்னார்கள். போங்கள் அஷ்ரஃப்பிடம் போங்கள் என்று எங்களை வெளியேற்றினார்கள். ஆனால், இதுவரை அஷ்ரஃப் வந்து என்ன என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. 90 ஜனவரியில் வெளியேற்றப்பட்டது. ரம்ழான் எல்லாம் முடித்துவிட்டுப் போகும் போது மக்கள் சொன்ன வார்த்தைகள் இதுவரை அஷ்ரஃப் வந்து என்னவென்று கேட்கவில்லையே என்று. என் மனசில் ஒரு கவலை வந்தது. இன்றும் நல்ல ஞாகபமாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உயர் நீதியரசராய் இருந்த அப்துல் காதருடைய ஜனசா வீட்டில் அமைச்சர் அஷ்ரஃப்பைச் சந்தித்தேன். இப்படி நான் முகாம்களுக்கு சென்ற நேரத்திலே மக்கள் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.

உங்களுக்கு அங்கு சென்று அந்த மக்களைச் சந்திக்க முடியாவிட்டால் நீங்கள் ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்திலேயாவது மக்களை ஏன் சந்திக்கக் கூடாது எனக் கேட்டேன். அவர் அவ்வாறான ஏற்பாட்டைச் செய் தாகக் கூறி அந்த நேரத்திலே தாருசலாம் பழைய கட்டிடத்திலே ஒரு ஏற்பாட்டைச் செய்தார். ஆனால், இவையெல்லாம் ஒரு அரசியலுடைய லாபங்களைப் பின்னணியாகக் கொண்ட ஒரு செயற்பாடகத் தான் இருந்திருக்கிறது. ஏன் இப்படிச் சொல்கிறேனென்றால் அவர் இப்போது அதிகாரத்தில் இருக்கும் போது அதிகாரங்கள் கையில் கிடைத்தவுடன் பல வாக்குறுதிகள் இந்த முஸ்லிம் மக்களை நோக்கி விடப்பட்டது. குறிப்பாக சந்திரிக்கா - அஷ்ரஃப் ஒப்பந்தம் கூட இந்த மக்களுக்காகத்தான் செய்யப்பட்டது. ஆனால், இதுவரை நாங்கள் அந்த ஒப்பந்தத்தைப் பார்க்கவில்லை. அது வேறு விஷயம். ஆனால் அமைச்சர் பீரிஸ் இடத்தில் இந்த ஒப்பந்தம் தொடர்பாக கேட்ட இடத்திலே அவர் சொன்னார். இது ஒரு அரசியல் ஒப்பந்தம் என்று. ஆனால் இது அரசியல் ஒப்பந்தமில்லை. இது கட்சிகளுக்கிடையேயான ஒப்பந்தம். ஆனால், அஷ்ரஃப் சொன்னார். இன்னும் சொல்லிக்கொண்டே இருக்கிறார் சரி. அப்படித்தான் பார்த்தாலும் கூட இந்த மக்களுக்குக் கிடைத்த விமோசம் என்ன? சில பாடசாலை கட்டிடங்கள் கிடைத்திருக்கிறது. இப்பொழுது நிவாரணவெட்டிற்கு உட்பட்டிருக்கும் எங்கள் மக்கள் சொல்கிறார்கள். எங்களுக்கு அமைச்சர் தந்த காணியின் காரணத்தால் தான் சாப்பாட்டிற்கு வழி இன்றி நிவாரணம் வெட்டப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். ஏனென்றால் மீள்குடியேற்றம் என்று ஒரு வேலைத்திட்டம் அங்கு கொண்டுவரப்பட்டது. இந்தத் திட்டத்திலே காட்டப்பட்ட ஆசைவார்த்தைகளிலே எமது மக்கள் இழுக்கப்பட்டு அந்த மீள் குடியேற்றத்திற்குக் கீழ் வந்தார்கள். நிலம் சொந்தமாக வாங்குவதற்கு ஊக்குவிக்கப்பட்டது. அது ஒரு வகையில் மக்களுக்கு நன்மையானாலும் கூட நிவாரணம் நிறுத்தப்பட்டதானது மக்களால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

### கிட்டத்தட்ட எவ்வளவு பேர் இப்படி நிரந்தரமாகக் குடியேறி இருக்கிறார்கள்?

இதுவரையில் கிட்டத்தட்ட 6,222 குடும்பங்கள் இவ்வாறான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

### 6222 குடும்பங்களுக்குக் காணிகள் சொந்தமாக இருக்கிறதா?

ஆம், மொத்தமாக வெளியேறிய குடும்பங்கள் 15,000. அதில் நிவாரணம் வெட்டப்பட்ட குடும்பங்கள் 3827. அவர்களுக்கு நிவாரணம் துண்டாகவே இல்லை. இது அவர்களுக்குச் செய்த அநியாயம். யாருமே 4000/- காசு எடுக்கவேயில்ல. எடுக்காமல் எப்படி நிவாரணம் வெட்டப்படும். அரசாங்க அறிவிப்பின் பிரகாரம் 4000/- காசு

நன்றி - நூலகத்திட்டம்



எடுத்தால் 6 மாதங்களின் பின் நிவாரணம் வெட்டப்படும். அவர்கள் யாருமே 4000/-காசு எடுக்காமலே நிவாரணம் வெட்டப்பட்டுள்ளது.

அம்பாறையிலே ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் ஒரு பிரதி கல்வி நிலையம் இருக்கிறதாம். சந்தோஷசப்படவேண்டும். எங்கு இருந்தாலும் அவர்களுடைய வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமைய வேண்டும். அதேநேரத்தில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட கிட்டத்தட்ட 12,000 குடும்பங்கள் வாழக் கூடிய புத்தளம் மாவட்டத்திலே முஸ்லிம்களுக்கான ஒரு தொழில் பயிற்சி நிலையம் கூட இல்லை. அங்கு ஒன்று உருவாக்கப்பட்டால் அங்குள்ள மக்களும் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நிவாரணம் வெட்டுப்பட்டாலும் தொழில் வாய்ப்பை பெற்றிருக்கலாம். நாங்கள் அரசியலுக்-காகத் தான் பயன்படுத்தப்படுகிறோம். எங்கள் மக்களில் உண்மையான நலனும் அக்கறையும் எதிர்கால வாழ்வில் ஒரு நல்லெண்ணமும் வைத்து எங்களுக்கு வேலை செய்வதாகத் தெரியவில்லை எல்லாம் அரசியல் காணி வாங்கியது அரசியல், தொழில் முயற்சியைப் பார்த்தால் அதுவும் அரசியல் தான். இது குறிப்பாக முஸ்லிம் காங்கிரசினுடைய சார்பான விஷயங்களைச் சொன்னேன்.

இது அல்லாமல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கட்சி முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி என்பவற்றையும் பொறுத்த-மட்டில் அவர்கள் பலமான நிலையில் இல்லை. அவர்களுடைய சில அறிக்-கைகளிலே வடபகுதி முஸ்லிம்களைப் பற்றி சேர்த்திருக்கிறார்கள். பெரியளவில் வடபகுதி முஸ்லிம்களுக்காக அவர்கள் எதுவும் செய்யவில்லை. செய்யக் கூடிய ஒரு சூழ்நிலையில் அவர்களும் இல்லை. ஆனால், அப்பப்போ எமது சில பிரச்சினைகளுக்காக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி குரல் எழுப்பியுள்ளது. முஸ்லிம் கட்சியைப் பொறுத்தமட்டிலே அந்தளவு பெரியளவுக்குச் சொல்லக் கூடிய அளவுக்கு இல்லை. முஸ்லிம் காங்கிரசைப் பொறுத்தவரையில் எங்கள் மக்களுக்காக நிறைய வேலைகள் செய்திருக்கிறது. அதிகமான வேலைகளைத் திட்டமிட்டுச் செய்திருக்க முடியும். ஏனென்றால் எந்தவித வேலைத்திட்டமும் அங்குள்ள முஸ்லிம் மக்களோடு கலந்து ஆலோசித்து அல்லது முஸ்லிம் ஸ்தாபனங்களோடு கலந்து ஆலோசித்துச் செய்யப்படவேயில்லை. எந்த வேலையில் அவர்களுக்கு இலாபம் இருக்கின்றதோ அந்த வேலை அங்கு செய்யப்படும். உதாரணத்திற்குச் சில சில் முகாம்களுக்கு அவசர அவசரமாக வீதிகள் போடப்படுகின்றன. பெருந் தொகையான நிதி அங்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 8 கோடி ரூபா ஒதுக்கப்-பட்டிருப்பதாக கதை அடிபடுகின்றது. முகாம் மக்களுக்கு வேலை செய்வ-தற்காக. அதுவும் இந்த காலகட்டத்தில் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இது எதிர் வரக் கூடிய தேர்தல் பிரசாரம். இப்பொழுது முகாம் மக்கள் சொல்கின்றார்கள், எங்களுக்கு வான்குளத்திலுள்ள சேற்று பாதைக்காக போடுகின்றார்கள். பாதையெலாம் [illegible]ியாக இருக்கின்றது. வான்குளம் இப்பொழுது திருத்தப்பட்டு ஒரு அழகிய நீரோடை நிறைந்த பூங்காவனமாக ஆக்கும் முயற்சி நடைபெறுகின்றது. அதுவும் இந்த அகதி மக்களின் நிவாரண நிதியின் மூலமாகத்தான். புனர்வாழ்வு அமைச்சு தான் அதற்கான நிதியுதவி செய்கின்றது. ஆனால் அங்கே வான்குளத்தை தோண்டும் போது வரும் மண் தான் அகதி முகாம்களுக்கான வீதி போடுவதற்கு பயன்படுகின்றது.


அங்கு நடக்கும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலே எந்தளவு தூரம் விலைமனுக்கோரல் முறைகள் எல்லாம் பாவிக்கப்படுகிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எப்படி எப்படி யார் செய்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. சில வேளை அதிகாரியே ஆளை வைத்துச் செய்வார். அதிகாரியுடைய தம்பி எடுத்தார், மச்சான் எடுத்தார். நிறைய ஊழல்கள் எமது மக்களை வருத்திக் கொண்டு வயிற்றை வளர்த்துக்கொண்டு போகிறார்கள்.

# ஒக்ரோபர்:
# இரு இடப் பெயர்வுகளின் மாதம்

-எஸ்.ஏ.ஹஸ்புல்லா


ஒக்டோபர் மாதத்தில் இலங்கையில் நடந்த இரண்டு பாரிய மக்கள் இடப்பெயர்வுகள் தொடர்பான ஒரு ஒப்பீட்டைச் செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். இந்த இரண்டு இடப்பெயர்வுகளும் இந்தத் தசாப்தத்தில் தான் நடந்தன. முதலாவது இடப்பெயர்வு நடந்தது ஒக்டோபர் 1990ல். இரண்டாவது 1995 ஒக்டோபரில் நடந்தது. கிட்டத்தட்ட 5 இலட்சம் மக்களைச் சம்பந்தப்படுத்திய இந்த இரு பாரிய இடப்பெயர்வுகளும், கடந்த 15 ஆண்டுகளில் ஏற்பட்ட மொத்த இடம்பெயர்ந்தோர் தொகையை 30 இலட்சமாக உயர்த்தி விட்டுள்ளன. இரண்டு இடப்பெயர்வுகளிலும் அகதிகளின் ஓட்டம் வடக்கு மாகாணத்தில் இருந்து உருவா-கியதுடன், இந்த இரு இடப்-பெயர்வுகளுக்கும் பெருமளவுக்குக் காரணமாக இருந்ததும் - வெவ்வேறு காரணங்களுக்காக - ஒரே அணி-யினர் தான். இனத்துவ அடிப்ப-டையில் நோக்கினால் இந்த இரு அகதிகளது பெயர்வும் வேறு வேறானவை தான் என்ற போதிலும், இரு அகதிக் குழுமங்களதும் பட்ட, படுகின்ற அவலத்தைப் பொறுத்த-வரை அவை ஒன்றாகத் தான் உள்ளன. இந்தக் காரணத்திற்காக, ஒக்டோபர் மாதம் முடிந்து கொண்-டிருக்கும் இந்த நேரத்தில் அவர்களை நினைவு கூர்வோமாக.

1990இன் ஒக்டோபர் மூன்றாம் வாரத்தில், வட மாகாணத்தில் வாழ்-ந்து வந்த அனைத்து முஸ்லீம்களும், தமது வீடுவாசல்களை விட்டு வெளியேறுமாறு பலவந்தப்-படுத்தப்பட்டனர். அவர்களது அப்போதைய தொகை கிட்டத்தட்ட 75,000 பேர். வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் உள்ள கிட்டத்தட்ட 100 குடியிருப்புப் பகுதிகளில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். 1990 ஒக்டோபர் 23ம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத்தினர், முஸ்லிம்கள் எங்கு இருந்தாலும் 48 மணி நேரத்தில் அங்கிருந்து வெளியேற வேண்டும் அல்லது சாவை எதிர்நோக்க வேண்-டிவரும் என்று ஒலிபெருக்கிகள் மூலமாக அறிவித்தனர். ஒக்டோபர் 30ம் திகதி , யாழ் நகரத்தில் உள்ள மூர் வீதியில் (சோனகத் தெரு) இருந்த முஸ்லிம்கள் இரண்டு மணி நேர அவகாசத்தில் தமது வீடு-வாசல்களை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டனர். முதலாவது வரைபடம் வட மாகாண முஸ்லிம் அகதிகளின் 1990 ஒக்டோபர் இறுதி வாரத்தில் இடப்பெயர்வு நிகழ்வைக் காட்டுகிறது. அவர்கள் பெரிதும் வட மத்திய, வட மேல் மாகாணங்களில் சென்று அடைக்கலம் புகுந்தனர்.




ஒக்டோபர் 1995இல் கிட்டத்-தட்ட நான்கு இலட்சம் மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளியேறி வன்னியில் தஞ்சம் புகுந்தனர். இரண்டாவது உருவப் படம் இதனைக் காட்டுகின்றது. அவர்கள் அனைவரும் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த தமிழர்கள். சுயாதீனச் செய்திகளின் படி அவர்கள் கூடத் தமது வீடுவாசல்களில் இருந்து வெளியேறுமாறு அதே விடுதலைப் புலிகளால், இலங்கை இராணுவம் யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்த அந்த வேளையில் பல வந்திக்கப்பட்டார்கள். முஸ்லிம்-களைப் போலவே தமிழர்களும், மிகக் குறுகிய கால அவகாசத்தில் தமது வீடுவாசல்களை விட்டு வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்-பட்டனர்.






இவ்வாறு வெளியேற்றப்பட்ட சூழ்நிலையில் எதிர்கொண்ட துன்ப, துயரங்களை இலகுவாக விளக்கவிட முடியாது. 'தமிழ் ரைம்ஸ்' பத்திரிகை, தமிழ் மக்களின் அன்றைய துன்ப நிலையை இவ்வாறு எழுதியது " இவ்வளவு பெருந்தொகையான மக்கள், இவ்வளவு குறுகிய கால அவகாசத்தில் தமது வீடுவாசல்களில் இருந்து இவ்வளவு கொடூரமாகப் பிடுங்கி எறியப்பட்டதும் ஓரிர-விலேயே தம்மை அகதிகளாக்கிக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்-பட்டதும் இதற்கு முன் ஒரு போதும் நிகழ்ந்திராத ஒரு நிகழ்ச்சியாகும். இந்தத் துயரம் ஐந்து வருடங்களுக்கு முன் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. நாம் தமிழர்களது இடப்பெயர்-வையும், முஸ்லிம்களது வெளியேற்-றத்தையும் ஒப்பிட்டு ஆராய வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் இனத்துவச் சிக்கல் என்பவை குறித்த ஒரு நல்ல புரிதலை ஏற்படுத்திக் கொள்ள இது உதவும்.

இந்தத் திடீர் இடப்பெயர்வு காரணமாக ஒரு கையறு நிலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். தமது வீடு வாசல்களை விட்டு வெறும் கையுடன் அவர்கள் வெளியேற வேண்டி-யேற்பட்டது. அவர்கள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் இந்த வெளியேற்றத்தின் போதும் பிறகும் பாதிக்கப்பட்டனர். வெளியேறிக் கொண்டிருக்கையில் பலர் இறந்-தார்கள். இன்னும் பலர் வெளி-யேற்றத்தின் பின்னால் ஏற்பட்ட நோய்களாலும் வேறு காரணங்-களாலும் இறந்தனர். அவர்கள் ஓரிடத்தில் இருந்து இன்னோரி-டத்துக்கு வெளியேற வேண்டி-யிருந்தது. அவர்கள் மிகவும் வசதி குறைந்த குடில்களில் வாழ்ந்தனர். இன்னும் சிலர் தமது இடப்பெயர்வு நாட்களை மரங்களின் கீழ் கழித்-தனர். பட்டினி கிடந்தனர். பெரும்-பான்மையானோர் பலவீனமான-வர்களாயினர். இந்த நிலை இரு சமூகத்திற்கும் பொதுவான ஒன்றாக இருந்தது. ஆனால், இந்தத் துயரம் இந்தப் பாரிய இடப்பெயர்வுக்கு உள்ளான மக்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. ஏனைய இடம் பெயர்ந்த மக்களின் நிலையும் இதுவே.

ஐந்து ஆண்டுகட்குப் பிறகும், பல வன்னி அகதிக-ளுக்கு அவர்களது வீடுவாசல்-கள் இருந்த இடங்கள் சுமூக நிலைக்குத் திரும்பாததால் திரும்பிப் போகக் கூடிய நிலை இல்லை. இன்று வன்னியில் நடந்து கொண்டிருக்கும் யுத்தம் அவர்களைத் தொடர்ந்தும் இடத்துக்கு இடமாக மாறி விரட்டிக் கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்திற்கு, தமது வீடுகளை நோக்கித் திரும்பி வந்தவர்கள் தமது வீடுகள் வெறுமையானவையாகவும், சேதப்படுத்தப்பட்டவையாயும் இருப்பதைக் காண்கின்றனர். இவ்வாறு திரும்பியவர்களில் பலர் திரும்பிய பின்னும் கூடத் தமது இடப்பெயர்வின் துயரங்களை இன்னமும் அனுபவித்துக் கொண்-டிருக்கின்றனர்.

இடம்பெயர்க்கப்பட்ட முஸ்-லிம்களுக்குத் 'திரும்பிப் போதல்' ஒரு கனவாகவே உள்ளது. அவர்கள் இப்போது புத்தளத்தில் செறிந்து வாழ்கின்றனர். அவர்கள் திரும்பிப் போய், எந்தவித இடையூறும் அற்ற விதத்தில் வாழ்வதற்கான உத்தர-வாதத்தையும், வாழக் கூடிய வீட்டு வசதியையும், அமைதியான சூழ்-நிலையையும் எதிர்பார்க்கின்றனர். ஆனால், புத்தளத்தில் உள்ள வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் ஒரு மறந்துபோன கடந்த காலமாகப் போய்விட்டனர்.

இறுதியாக, இனத்துவ முரண்-பாடு காரணமாக மக்களின் இடப்பெயர்வு இலங்கையின் ஒரு முக்கிய விடயமாக மாறிவிட்டுள்ளது. 3 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் கடந்த 15 ஆண்டுகளில் இடம்-பெயர்ந்துள்ளார்கள். இப்போது இடம்பெயர்ந்து வாழும் மக்களின் தொகையைக் கிட்டத்தட்ட ஒன்றரை மில்லியன் என மதிப்பிடலாம். இது உள்நாட்டில் இடம்பெயர்ந்-தோர்களுடன் வெளிநாட்டுக்கு பெயர்ந்து சென்றோரையும் உள்ளடக்குகின்றது. இதுவரை இந்த இடப்பெயர்வுப் பிரச்சினையானது நாட்டின் இனத்துவ முரண்-பாட்டிலிருந்து வேறுபடுத்தியே அணுகப்பட்டு வந்தது. இந்தக் கொள்கையானது பெருமளவான மக்களை உள்நாட்டிலும், வெளி-நாட்டிலும் அதீத அகதிகள் அந்தஸ்திலேயே நீண்ட காலமாக வைத்திருந்து வருகிறது. இந்த நாட்டின் அகதிகள் தொடர்பான கொள்கை மாற்றப்பட வேண்டிய ஒரு தேவை இன்று உருவாகி-யுள்ளது. அகதிகள் தொடர்பான கொள்கைகளில் கொண்டுவரக் கூடிய பொருத்தமான மாற்றங்கள் அகதிகள் தொடர்பான பிரச்சினைகளைக் குறுகிய காலத்தில் தீர்ப்பதுடன் இடப்பெயர்வுக்குக் காரணமான அடிப்படைக் காரணிகளைக் கண்ட-றிந்து இந்த நாட்டின் இடப்பெயர்வுப் பிரச்சினைக்கு ஒரு முடிவான தீர்வைக் காணவும் வகை செய்யும்.

நன்றி - நூலகத்திட்டம்



# சிறப்பு முகாமா? சிறைக் கூடமா?

– சுதா இராமலிங்கம்

பல்லாண்டு காலமாக இந்தியத் துணைக் கண்டம் அகதிகளை வரவேற்று உபசரிக்கும் நாடாகவே இருந்து வந்திருக்கின்றது. பெருவாரியான அகதிகள் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட, இலங்கையிலிருந்து வந்துள்ள தமிழர்களாவர். இந்தியா அகதிகளுக்கான சர்வதேச நெறிமுறைகள், 1951(International Covenant on Refugees, 1951) மற்றும் 1967ல் இயற்றப்பட்ட (Protocol) நெறிமுறைக்கும் உட்பட்டுக் கையொப்பம் இடவில்லை. ஆயினும், அகதிகளை வரவேற்று அவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை இந்தியா கொடுத்து வருகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

01. அகதிகள் முகாம்களில் உள்ளவர்கள். இன்று தமிழ் நாட்டில் 133 முகாம்களில் 65,000 அகதிகள் இந்தப் பிரிவில் அடங்குவர்.

02. முகாம்களுக்கு வெளியில் தமிழக அரசிடம் பதிவு செய்துகொண்டு இருப்பவர்கள். இவர்கள் ராஜீவ் காந்தி மறைவுக்குப் பின்னர் அவர்கள் வசிக்கும் இடத்தில் உள்ள காவல் நிலையங்களில் பதிவு செய்து கொண்டு இருப்பவர்கள். இவர்கள் முகாம்களில் இருப்பவர்களை விட வசதி மிக்கவர்கள்.

03. வேலூர், திப்பு மஹால், மேலூர் மற்றும் செங்கல்பட்டுச் சிறப்பு முகாம்களில் உள்ள அகதிகள்.

ராஜீவ் காந்தி மறைவிற்குப் பின் இரண்டாவது பிரிவினர் காவல் நிலையத்தில் பதிவுசெய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தப்பட்டதோடு தப்பித்தனர். ஆனால், முதல் மற்றும் மூன்றாம் பிரிவினர் பல கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அதிலும் சிறப்பு முகாம்களில் இருக்கும் அகதிகளின் நிலை சாதாரண சிறைக் கைதிகளைக் காட்டிலும் மோசமாக இருந்ததால் மக்கள் சிவில் உரிமைக் கழகம் கவலை கொண்டு அவர்கள் நிலை பற்றி அறியவும், குறைகள் நீக்க வழிவகுக்கும் ஒரு உண்மை அறியும் குழு அமைத்தது. அக் குழுவில் இடம்பெற்றவர்கள் பின்வருமாறு:

01. கே.மனோகரன், துணைத் தலைவர், தேசிய பீ. யூ. சீ. எல்.

02. சுதா இராமலிங்கம், தலைவர், பீ. யூ. சீ. எல். தமிழ்நாடு மற்றும் பாண்டி.

03. டாக்டர் வி. சுரேஷ், பொதுச் செயலாளர், பீ. யூ. சீ. எல். தமிழ்நாடு மற்றும் பாண்டி.

04. டி.நாகசைலா, பீ. யூ. சீ. எல். தமிழ்நாடு மற்றும் பாண்டி.

05. ஆர்.வெங்கடேஷ், பீ. யூ. சீ. எல். தமிழ்நாடு மற்றும் பாண்டி.

07.07.1999 அன்று குழுவினரில் கே. மனோகரன், சுதா இராமலிங்கம், ஆர். வெங்கடேஷ் ஆகியோர் வேலூர் திப்பு மஹாலில் உள்ள சிறப்பு முகாமிற்குச் சென்று வர, மற்ற இருவரும் இந்த முகாம்கள் பற்றிய ஆவணங்களைச் சேகரித்தும், வெளியில் வந்துள்ள அகதிகளை நேர்கண்டும் இந்த அறிக்கையைத் தயாரித்தோம்.

## வேலூர் சிறப்பு முகாம்

வேலூர் கோட்டையில் திப்பு மஹால், ஹைதர் மஹால் என்று இரண்டு கட்டிடங்கள் சிறப்பு முகாம்களாக ஒதுக்கப்பட்டன. இவை 14.12.1990ல் நிறுவப்பட்டன. ஆரம்பத்தில் திப்பு மஹாலில் 163 அகதிகளும், ஹைதர் மஹாலில் 491 நபர்கள் கொண்ட 120 குடும்பங்களும் (ஆண், பெண், குழந்தைகள் உட்பட) வைக்கப்பட்டனர். ஆனால், இன்று ஹைதர் மஹால் சிறப்பு முகாம் இல்லை. திப்பு மஹாலில் 56 அகதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

வேலூர் சிறப்பு முகாம் பற்றி உயர் நீதிமன்ற நீதிபதி சிங்காரவேலு அவர்கள் தமது கமிஷன் அறிக்கையில் விவரித்துள்ளார். அவர் கூறுவதாவது,

திப்பு மஹால், ஹைதர் மஹால் ஆகிய இரண்டு முகாம்களும் வேலூர் கோட்டையினுள் இருக்கின்றன. இரண்டும் இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனத்தால் பாதுக்கப்படும் கட்டிடங்கள் (Monuments). இக் கோட்டையின் மதில்கள் 03 கி. மீ. நீளமுடையவை. 67 மீட்டர் அகலமுடைய அகழி உடையது. 126 ஏக்கர் நிலப்பரப்புடையது. முழு கோட்டையும் கருங்கற்கள், சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்டது. திப்பு மஹாலும், ஹைதர் மஹாலும் கோட்டையின் தென்மேற்கு மூலையில் கோட்டையின் உட்சுவர் அருகே கட்டப்பட்டன. இரு மஹால்களும் ஒன்றுக்கொன்று அருகில்



இருந்தாலும், அவை பழைய மதிலால் பிரிக்கப்பட்டுள்ளன. திப்பு மஹாலில் 45 அறைகள் தரைத் தளத்திலும், 67 அறைகள் முதல் தளத்திலும் உள்ளன. ஹைதர் மஹாலில் 65 அறைகள் தரைத் தளத்திலும், 86 அறைகள் முதல் தளத்திலும் உள்ளன. இதில் எந்த அறைக்கும் கதவுகள் இல்லை. ஆகவே இதில் உள்ளவர்கள் அறைகளுக்கு இடையில் சுலபமாக நடமாட முடிகிறது.

இந்த மஹால்களில் ஒன்றன் பின் ஒன்றாக உள்ள, மூன்று இரும்புக் கதவுகளைக் கடந்து போவதைத் தவிர இம் மஹால்களுக்குள் செல்ல வேறு வழி இல்லை. ஆறு அடி உயர இரும்பு முட்கம்பிகள், உள் மதில் சுவற்றின் மேல் போடப்பட்டுள்ளது. அதன் வெளிப்புறம், ஆறு அடி உயர சுற்றுப்புறச் சுவர் உள்ளது. அதற்கு வெளிப்புறம், தண்ணீர் நிறைந்த அகழியும், தெற்கு மற்றும் கிழக்குப் புறம் யானைப் புல் வளர்ச்சியும் உள்ளது.

இந்தச் சிறப்பு முகாம்களை வருவாய்த் துறையின் பராமரிப்பில் வைத்துள்ளனர். இதன் பாதுகாப்புப் பொறுப்புக் காவல்துறைவசம் விடப்பட்டுள்ளது. வருவாய்த் துறை சிறப்பு முகாம்களின் செலவினங்கள் யாவையும் ஏற்கிறது. திப்பு மஹால் முகாம், காவல் துறை பயிற்சிப் பள்ளியின் முதல்வர் பொறுப்பில் உள்ளது. அவர் கமாண்டன்ட் (Commandant) என்றும் அழைக்கப்படுகிறார். அவருக்குக் காவல்துறைப் பயிற்சிப் பள்ளியில் முன்பு பணியில் இருந்த Chief Drill Instructor மற்றும் Chief Law Instructor ஆகியோர் உதவுகின்றனர்.

தமிழக அரசு, சிறப்பு முகாம்கள் சிறைகள் அல்ல என்கிறது. இம்முகாம்களில் சிறை விதிகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இம்முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் கைதிகள் இல்லை. இவர்கள் நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவர்களோ, நீதிமன்றக் காவலில், தங்கள் வழக்குகள் நிலுவையில் உள்ளபோது பிணைக் கைதிகளாக (Under Trial Prisoners) உள்ளவர்களோ அல்ல. இவர்களை "Inmates" என்றும், "Interns" என்றும் தான் அரசாங்கம் குறிப்பிடுகிறது.

ஆயினும், இம்முகாம்களில் உள்ள காவல் கெடுபிடிகள், சிறைகளை விடப் பல மடங்கு அதிகமாக உள்ளன. இருபத்து நான்கு மணி நேரமும், ஆயுதம் ஏந்திய காவலர்கள் ரோந்து வர, மணல் மேட்டில் பொருத்தப்பட்ட பெரிய குழல் துப்பாக்கிகள் முகாம்களை நோக்கி எப்போதும் வெடிக்கத் தயாரான நிலையில் அருகே நிற்க, 05 பெரிய கோபுரங்களில் காவலர்கள் துப்பாக்கிகளுடன் நிற்க, இம்முகாம்கள் ஏதோ போர்க்களத்தை நினைவூட்டுவதாகவே உள்ளன. இம்முகாம்கள், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரின் நேரடிப் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ளன.

சிறப்பு முகாமில் உள்ள வாயில் கதவுகள், உணவு வழங்குவதற்கும், அங்கு உள்ளவர்களின் கணக்கெடுப்பிற்கும், அங்கு உள்ளவர்களை மருத்துவமனை அல்லது நீதிமன்றம் கொண்டு செல்லவும் மட்டுமே திறக்கப்படுகின்றன.

இச்சிறப்பு முகாம்களில் உள்ளவர்களுக்கு, அரசாங்கம் நாளொன்றிற்குத் தலா ரூபாய் 20 மட்டுமே உணவிற்காக ஒதுக்குகிறது. அதிலும், குழந்தைகளுக்கு ரூபாய் 14 தான் கொடுக்கப்படுகிறது. வேலூரிலும், மேலூரிலும் இத்தொகைக்குச் சமையல்காரர்கள் ஒப்பந்த முறையில் நியமிக்கப்பட்டு, அவர்கள் தான் சமைத்து உணவு வழங்குகின்றனர். செங்கல்பட்டில் மட்டும் மனைவி, குழந்தைகளுடன் அகதிகள் உள்ளதால், அவர்களுக்கு இத்தொகை கொடுக்கப்பட்டு, அவர்கள் சமைத்துக் கொள்கிறார்கள்.

சிறப்பு முகாம்களில் உள்ள அகதிகளைப் பார்க்கவேண்டும் என்றால், முதலில் தாசில்தாரிடமும், பின்பு மாவட்டக் காவல்துறை ஆணையாளரிடமும் அனுமதி பெற்று, முகாம்களுக்கு வெளியில் உள்ள க்யூ - பிராஞ்ச் காவலர்களிடம் மனுக் கொடுத்து, அவர்களுடைய சோதனைக்கும் பிறகே காணமுடியும். இதுவும் சிறைகளில் கைதிகளைப் பார்ப்பதை விடச் சிரமமான வழிமுறை.

இம்முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் எவ்வளவு நாள் / மாதம் / வருடங்கள், அங்கு இருக்க வேண்டும் என்று ஆணை எதுவும் இல்லை. இவர்களைப் பற்றி எந்த ஒரு கொள்கையோ, திட்டமோ இன்றி அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் உடல் ஊனமுற்றவர்கள். 12 உடல் ஊனமுற்றோரைப் பற்றிய விவரங்களை பீ. யூ. சீ. எல். உண்மை அறியும் குழு அறிந்து வெளியிட்டுள்ளது.

சிறப்பு முகாம்களில் உள்ள சிலருக்கு, வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அப்படி, இந்தியாவிலிருந்து வெளியேற அனுமதி பெற்றவர்கள், அவர்கள் போக விரும்பும் ஐரோப்பிய நாடுகளிலும் அனுமதி பெற்றால் தான் அவர்கள் இங்கிருந்து போக இயலும்.

ஐரோப்பிய நாடுகளில், அகதியாக ஒருவரை அனுமதிக்க, அவர்கள் இரண்டு முக்கிய நிபந்தனைக முன்வைக்கின்றனர்.

01. அகதியாக விரும்புபவர் தன சொந்த நாட்டிற்குச் சென்றால் அவர் உயிருக்கு ஆபத்து என்றும்,

02. அவர் இப்போது இருக்கும் நாட்டில், சிறை வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் நிரூபிக்க வேண்டும். இதில் முதலாவது, இலங்கைத் தமிழர்களுக்கு எளிது. ஆனால், இவர்கள் சிறப்பு முகாம்களில் இருப்பதால், சிறையில் இல்லை எனக் கருத்தில் கொண்டு இவர்களை, ஐரோப்பிய நாடுகளில் நிராகரிக்கின்றன. எனவே தான் இவர்கள் வைக்கப்பட்டிருக்கும் முகாம்கள், உண்மையில் சிறையே என்பதை மக்கள் சிவில் உரிமைக் கழகம் வலியுறுத்தி ஆதாரபூர்வமாகவும், சட்டபூர்வமாகவும் தம் உண்மை அறியும் அறிக்கை மூலம் விளக்கியுள்ளது.

மனித நேயம் மிக்க யாரும், இம்முகாம்களில் காலவரையற்ற முறையில் அகதிகளை அடைக்க ஒப்புதல் அளிக்க முடியாது. இவர்களை மீட்க, மனித நேயம் மிக்க யாவரும் ஒன்றுபட்டுச் செயப் பட வேண்டும். முகாம்கள் என்ற பெயரில், முகமூடி போட்டு உண்மையில் கடுங்காவல் சிறைகளாக, இவை செயல்படுவதை வெளி உலகுக்குத் தெரிவித்து நியாயம் பெறப் போராட வேண்டும்.

நன்றி: நந்தன்

## அல்லாஹ்வைச் சாட்டியபடிக்கு...

நாளைக்கும் நான்
மரணிக்கலாம்
ஒரு முறை துரோகியாய்
அல்லது அன்னியனாய்...
ஒரு விளை நிலமொன்றில்
குண்டு பட்டுக் கூட...
ஒரு சிந்தனை விருட்ஷம்
தானாய் முளைக்கும்
பின்னர் கருகும்.
ஒரு உடலம் என்னுள்
ஓவென்று கத்தும்
மேடையில் ஒரு முறை
'அல்லாஹு அக்பர்' சொன்னார்கள்.
பின்னர் ஹதீஸ்....
வாய் பிளந்தேங்கினேன்.
ஸலவாத் ஓத முதல்
ஓசை கேட்டு நானும் பாறி விழுந்தேன்.
அது குண்டு. என்னிலும் இரத்தம்.
நம்புவதவற்கென்று ஒரு நாய்தானுமில்லை.
சமாதானச் சீட்டிகையோடு
அல்லோலப்படும் நிழல்கள்
யாருக்குத்தான் ஆசையில்லை
கை நனைக்க கதிரையில் இருக்க
நான் என்னவாய்ப் போனால் என்ன?
நாளைக்கும் தேர்தல் வரும்
அகதி முகாமை நோக்கியாவது...

21.10.99

இளைய அப்துல்லாஹ், இலண்டன்

நன்றி - நூலகத்திட்டம்



பெண்ணின் சிந்தனைகளை எழுச்சி பெறச் செய்யவும், அவளின் அபிவிருத்தியை மேம்படுத்தவும், பெண்கள் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தீர்மானமெடுக்கும் செயல்முறையில் பங்கேற்க வேண்டும். பெண்களுக்கும், ஆண்களுக்குமிடையில் சமமான நிலைமை என்ற விடயத்தை யதார்த்தத்தில் செயன்முறைப்படுத்த பெண்களுக்கும், ஆண்களுக்குமிடையில் அதிகாரங்கள் சமமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதே நாம் நடைமுறைப்படுத்த வேண்டிய ஆரம்ப நடவடிக்கையாகும்."

"உலக சனத்தொகையில் ஒரு பகுதி பெண்களாக இருந்தாலும், அரசியல் தலைமைத்துவத்தில் அவளின் பிரதிநிதித்துவம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டே இருக்கின்றது. நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் பெண்களுக்கும் சமூக, அரசியல் உரிமைகள் இருக்கின்றன."

"தேசிய அரசியலில் செயற்றிறன்மிக்க வகையில் பங்கேற்பது அவளின் பொறுப்பாகும் எனினும், அவள் அவ்வாறு பங்கேற்பதில்லை." (Nairobi Forward Looking strategies for the Advancement of Women,1989- Part 1, para 32 and 51)



# பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்து சில குறிப்புகள்

*பெண்கள் அரசியலில் ஈடுபடாத விடயம் பற்றி பலவாறாகக் கலந்துரையாடலுக்குட்படுத்தப்படுகின்றது. குறிப்பாக தேர்தல் காலங்களில் இவ்விடயம் பலராலும் பரவலாக கலந்துரையாடப்படுவது வழமையாகும். பெண்களின் அரசியல் பங்கேற்பை அதிகரிக்க ஒரு புறம் பெண்கள் அமைப்புகளும் முயற்சியிலீடுபடுகின்றன. பெண்களிடையே அரசியல் பங்கேற்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவென கருத்தரங்குகள், கூட்டங்கள் என்பனவற்றை ஏற்பாடு செய்கின்றன. அண்மைய மாகாணசபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் சுயேட்சையாகப் போட்டியிட்ட சிங்கள தமிழ் கிராமிய பெண்கள் அமைப்பு தோல்வியைத் தழுவிய போதிலும், கூட்டான செயற்றிறன் மிக்க அரசியல் முயற்சியாக இதனைக் கொள்ளலாம்.*

*1991ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது இலங்கைப் பெண்களில் 60-70வீதமான பெண்களுக்கு அரசியல் பற்றி போதுமான அறிவு இருப்பது தெரிய வந்துள்ளது. ஆனால் செயற்பாட்டு ரீதியில், தீர்மானம் எடுக்கும் உயர் அமைப்புகளில் பெண்களின் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ஐக்கிய தேசியக்கட்சியில் 7 வீதமாகவும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் 10 வீதமாகவும், லங்கா சமசமாஜ கட்சியில் 2 வீதமாகவும், கம்யூனிஸ்ட் கட்சியில் 4 வீதமாகவும் கட்சி அடிப்படையில் பெண்கள் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் கட்சி அமைப்பாளர்களில் பெண்களின் தொகை 3-4 வீதமாகும். ஆய்விலிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி கட்சிகளில் பெண்களின் அங்கத்துவம் 25 வீதமாகும்.*

*ஊர்வலங்கள், போராட்டங்கள், கொடி பிடித்தல், நிதி சேகரித்தல் போன்ற கட்சி செயற்பாடுகளில் பெண்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்களவு காணப்பட்டாலும், பெண்களின் நேரடி அரசியல் பங்கேற்பு அதி குறைவான மட்டத்தில் - ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு - உள்ளது. பெண்களை தீர்மானம் எடுக்கும் மட்டத்திற்கு வரவிடாமல் தடுக்கும் விதமாக சமூகம் கட்டமைக்கப்பட்டிருப்பதும் கூட இவ்விடயத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றதெனலாம். பெண்கள் பொதுவிடய தலைமைத்துவத்திற்கு உதவாதவர்கள் என்ற புனைவான கருத்தியலும், பெண்கள் மத்தியில் இவ்வாறானதொரு தாழ்வுச் சிக்கலுமே இதற்குக் காரணம் எனலாம்.*

*இந்நிலையில் தமிழ்ப் பெண்களின் அரசியல் பங்கேற்பு, பங்களிப்பு பற்றி யாது கூற முடியும்?*

*இந்த கேள்வியின் பதிலுக்கு ஒரு அடிப்படையை தரக் கூடிய நிகழ்வொன்று கொழும்பில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.*

*பிரட்ரிச் ஈபர்ட் மன்றமும் இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து பெண்களின் அரசியல் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான ஐந்து நாள் பயிற்சிநெறியை தமிழ் மொழியில் ஒழுங்கு செய்திருந்தன. அரசியலில் பெண்கள் ஈடுபடுவதற்கான தடைகள் எவை என்பதை இனம் காணல். பெண்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் அரசியல் ஈடுபாட்டை வலியுறுத்தல், தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் பெண்களின் தலைமைத்துவத்தை ஊக்குவித்தல், பெண்களின் அரசியல் திறன்களை வளர்த்தல், பெண்களின் அரசியல் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை தயாரித்தல் போன்ற குறிக்கோள்களின் அடிப்படையில் இந்தப் பயிற்சிநெறி தயாரிக்கப்பட்டிருந்தது.*


*இந்த ஐந்து நாள் வதிவிடப் பயிற்சிநெறியில் பயிற்றுனர்களாக இலங்கை மன்றக் கல்லூரி விரிவுரையாளர் விமலா பெரியண்ணன்பிள்ளை, பிரட்ரிச் ஈபர்ட் மன்ற திட்ட அலுவலர் சந்திரா குமாரசுவாமி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிரேஸ்ட செய்தித் தொகுப்பாளர் சற்சொரூபவதி நாதன், பேராதனைப் பல்கலைக்கழக பொருளாதார அரசியல் துறை பேராசிரியர் ஏ.சிவராஜா, கொழும்பு பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் வி. பழனியப்பன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே. கணேசலிங்கம், இளைப்பாறிய சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் மற்றும் சுயேட்சையாளர் கே. வைத்தீஸ்வரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை செய்தித்தொகுப்பாளர் பி.முத்தையா, பாராளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.*

*இவ்வாறானதொரு தலைப்பிலான பயிற்சிநெறியை சிங்களத்தில் ஒழுங்கு செய்திருந்தபோது சுமார் 100 விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும், தமிழ் மொழி பயிற்சிநெறிக்கு 32 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்தனவென்றும் அதில் 22 பங்குபற்றுனர்களே கலந்துகொண்டனர் என ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியமையானது தமிழ்ப் பெண்கள் கொண்டிருக்கும் அரசியல் ஆர்வத்தின் அளவை துல்லியமாக வெளிப்படுத்தியது எனலாம். மேலும், பெண்கள் அமைப்புகள், பலதரப்பட்ட கட்சிகள் என்பனவற்றுக்கு இப்பயிற்சிநெறி பற்றி அறிவிக்கப்பட்ட போதிலும் இ.தொ.காங்கிரஸ் மட்டுமே ஆர்வம் காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலும் இ.தொ.கா. கட்சியினைச் சேர்ந்த பெண்கள் சங்க அமைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.*

*இப்பயிற்சிநெறியில் கலந்து கொண்ட 22 பெண்களில் 06 பெண்கள் மட்டுமே நேரடி/மறைமுக அரசியல் பங்கேற்பாளராகவிருந்தனர். பிற பெண்கள் அரசியலில் ஈடுபடும் ஆர்வம் கொண்டவர்களாகவே இந்நிகழ்வில் பங்குபற்றினர்.*

*பெண்கள் அரசியலில் ஈடுபட இருக்கும் தடைகள், ஏன் அரசியலில் ஈடுபட வேண்டும், விசேடமாக பெண்கள் அரசியலில் ஈடுபடும் பொழுது எவற்றைத் தடையாகக் கணிக்க வேண்டியுள்ளது, தடைகளை வெற்றி கண்டு அரசியலில் நுழைவது எப்படி என்பன போன்ற கேள்விகள் இங்கு முன்வைக்கப்பட்டு பங்குபற்றுனர்களுடன் கலந்துரையாடப்பட்டன. கலந்துரையாடலின் போது பங்குபற்றிய பெண்கள், அரசியல் தொடர்பான பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்தனர்.*

*பொதுவாக அரசியல் சூழ்நிலை, வன்முறைகள். மதச் சட்டங்கள், அரசியல் மேடைகளில் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் கேலியும் நையாண்டிமான கதையாடல்கள் என்பன பெண்களுக்கு பெரும் தடையாகவுள்ளன என குறிப்பிடப்பட்டது. உதாரணமாக கடந்த வடமேல் மாகாண சபைத் தேர்தலில் பெண் வேட்பாளர்கள் மீதான கொலைப் பயமுறுத்தல்கள், வன்முறைகள் இங்கு அவதானத்திற்குட்படுத்தப்பட்டது. அதேபோல் கடந்த மாகாண சபைத் தேர்தலில் வாக்குவங்கிக்காக மனைவிமாரை வேட்பாளர்களாக நிறுத்திவிட்டு, அவர்கள் வெற்றி பெற்ற பின்னர் அவர்களை*



*பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும்படி கோரி பதவிகளை பெற்றுக் கொண்ட சம்பவம் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.*

*அதேவேளை கட்சி மட்டத்தில் சேவையிலீடுபடும் பொழுது மோத வேண்டிய ஆணாதிக்க கருத்தியல்கள் பற்றியும் இங்கு உரையாடப்பட்டது. ஆண்கள் பெண்கள் அரசியல் ரீதியாக உயர் மட்டத்திற்கு வரத் தடையாகவுள்ளனர். குறிப்பாக பதவியுயர்வுகளில், மேல்மட்ட செயற்பாடுகளில் இந்த நிலைமை நிலவுகின்றது எனலாம்.*

*பெண்கள் அரசியலில் ஈடுபட்டு தீர்மானம் எடுக்கக் கூடிய நிலைமைக்கு வருவதினால் கொள்கை வகுப்பிலும், திட்டமிடுதலிலும் பங்கேற்கக் கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றதெனலாம். ஆனால் அரசியல் பின்னணியற்ற எத்தனை பெண்கள் இவ்வாறான ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றனர் என்ற கேள்விகள் இங்கு எழுப்பப்படாமல் இல்லை.*

*நாம் இவ் விடயம் பற்றி கூடியமர்ந்து கலந்துரையாடுகின்றோம். பின்னர் பெரிய திட்டங்களுடன் பிரிந்து செல்கின்றோம். ஆனால் தம் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தமது வாக்குகளை இந்த குறிப்பிட்ட நபருக்கு தான் இடவேண்டும் என தீர்மானம் செய்யும் ஆணாதிக்க சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதனால் இவ்விடயம் பற்றித் திரும்பத் திரும்ப உரையாட வேண்டியுள்ளதெனலாம்.*

*மாறாக வினைத்திறன் மிக்க வகையில் பெண்கள் யாவரும் அரசியல் பங்கேற்பு பற்றி உணருதல் வேண்டும். ஒரு கட்சியை தேர்ந்தெடுத்து இணைந்து கொள்ளுதல் தொடக்கம் தடைகளை களைந்து முன்னேறுவது வரை பெண்கள் சுயமாக முன் வரவேண்டும்.*

*பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகமுள்ள நோர்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளில் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான ஒழுங்கமைப்புத் திட்டங்கள், வாய்ப்புகள் சிறப்பாக கடைப் பிடிக்கப்படுகின்ற போதிலும், இலங்கை போன்ற நாடுகளில் காணப்படும் ஆணாதிக்க சுயநலப் புனைவுகள் இவற்றை கடைப்பிடிக்காதிருக்க வலுவான வகையில் கருத்தியல்களை கட்டமைத்துள்ளமையைக் காணலாம். பெண் பலவீனமானவள், சீக்கிரம் மனம் மாறக் கூடியவள், என்பன போன்ற அபிப்பிராயங்களை ஏற்படுத்துவதினால் பெண்கள் கூட தலைமைத்துவத்திற்கு, அரசியலுக்கு உபயோகமற்றவர்கள் என்ற விதை தூவப்பட்டு விட்டது.*

*பெண்கள் அமைப்புகளும், அரச சார்பற்ற அமைப்புகளும், தொண்டர் அமைப்புகளும் ஓரிரு கருத்தரங்குகளை நாடாத்தி விட்டு திருப்தி அடைந்து விடுகின்றன. மாறாக நீண்ட கால திட்டத்துடன் கூடிய மேல்மட்ட பெண்களுக்கு மட்டுமன்றி நடுத்தர வர்க்கப் பெண்களுக்கும் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி பயிற்றுவிக்கும் திட்டம் இவற்றுக்கில்லை. பெண்களை எவ்வாறு அரசியலில் பங்கேற்கச் செய்யலாம், அப்பங் கேற்பு அவளின் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் எங்ஙனம் செல்வாக்கு செலுத்துகின்றது என்பனவற்றை செயற்பாட்டு ரீதியில் விபரிக்க இந்த அமைப்பு கள் ஏதும் முன்வருமா என்பது பிரதான கேள்வியாகும்.*

*இக்கருத்தரங்கில் பயிற்றுனர்களாக கலந்து கொண்டவர்களில் ஒரு தமிழ் பெண் அரசியல்வாதி கூட இல்லாதது பெரும் துரதிர்ஸ்டமாகும். நேரடியாக அரசியல் களத்தில் உள்ளவர் என்ற வகையில் அவரது பங்களிப்பானது பங்குபற்றுனர்களுக்கு பெரும் பயன்தரக் கூடியதாகவிருக்கும். ஆனால் விரல் விட்டு எண்ணக் கூடிய தமிழ் பெண் அரசியல்வாதிகள் தாம் நம்மிடையே உள்ளனர். இந்த குறைபாட்டை சமூகம் தற்பொழுதாயினும் உணரத் தலைப்படுமா?*

*- ரத்னா*

நன்றி - நூலகத்திட்டம்




'எண்கவுண்டர்' என்ற ஆங்கிலச் சிற்றிலக்கிய ஏட்டின் செப்டெம்பர் 1957 இதழில் இக்கதை இடம்பெற்றுள்ளது. ஆசிய - ஆபிரிக்க எழுத்தாளர்களுக்காக அந்த சிற்றிலக்கிய ஏடு நடத்திய சிறுகதைப் போட்டிக்கான பரிசை இக்கதை பெற்றிருந்தது. தேர்வுக்குழுவின் நடுவர்களில் ஒருவர் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் 'ஸ்ரீபன் ஸ்பெண்டர்'. இக்கதையின் ஆசிரியரான த. ராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தை தனது பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு வெஸ்லிக் கல்லூரியிலும், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் கல்வி கற்றவர். பட்டப்படிப்பை முடிக்காமல் இந்தியாவுக்கு 1943இல் சென்றார். கன்னியாகுமரியிலிருந்து பம்பாய் வரை நீண்ட ஒரு நடைப்பயணத்தை மேற்கொண்டார்.

வழி நெடுகிலுமுள்ள கிராமங்களில் தங்கினார். பெங்களூருக்கு அருகாமையில் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டவரது பயிர்களை குரங்குகள் நாசம் செய்தன. சென்னைக்கு 1947ல் வந்தவர், அங்கு சுயாதீனமான எழுத்தாளராக நான்கு வருடங்களாக இயங்கினார். இலங்கைக்கு 1951ல் திரும்பி வந்தார். 'ரைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகையில் பல காலம் பத்திரிகையாளராகப் பணிபுரிந்தார்.

ஆ-ர்

# உலகின் மிகப் பெரிய சென்சஸ்



நான் வசதிக்காக 'அறை' என அழைக்கும் நரிக்குகை போன்ற ஒன்றின் கதவருகே அவன் எனக்காகக் காத்திருந்தான். யாராவது "நீ எங்கு போகிறாய்?" எனக் கேட்கும் போதெல்லாம் "எனது அறைக்குப் போகிறேன்" என நான் கூறினாலும், அரிதாகவே யாரையாவது "அறைக்கு வாருங்களேன்" என அழைப்பு விடுத்திருக்கிறேன்.

இன்னும் அந்த உயரமான அந்நியன் எனக்காகக் காத்திருக்கிறான். அவன் இன்று எந்த நேரத்திலும் வரலாம் என எனக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது. அவனது வருகையை எவ்வகையிலும் என்னால் தடுத்து விட முடியாது. எனது பெயரை வைத்துத் தெருப்பையன்கள் சுவரில் எழுதியிருந்த புகழுரைகளை அவன் வாசித்துக் கொண்டிருந்தான். (அவை பென்சிலால் கிறுக்கப்பட்டிருந்தன.)

"தெருப்பையன்களால் பெரிய தொந்தரவு தான்" எனக் கூறிய நான், உரையாடலின் நடுவே, "ஒரு கரித்துண்டை அவர்களுக்குக் கொடுத்துப் பாருங்கள்: அதுவே போதும், அவர்கள் உடனே காட்டுமிராண்டிகள் ஆகிவிடுவார்கள்" என்றேன்.

இந்தப் பேச்சுக்களால் 'சென்சஸ்' [1] செய்ய வந்தவன் ஈர்க்கப்படவில்லை. நான் கதவைத் திறந்து அவனை உள்ளே விட்டேன். அவன் மிகவும் உயரமானவனாக இருந்ததால் உள்ளே வர குனிய வேண்டியிருந்தது. எனது அழுக்குத் துணிகள் ஒழுங்காகவும், மிகச் சிலவேயான புத்தகங்கள் அடுக்கப்பட்ட நிலையிலுமிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமே என்ற நிறைவேற முடியாத எதிர்பார்ப்பு எனக்கு ஏற்பட்டது.

ஒரே பார்வையில் அவன் எல்லாவற்றையும் எடைபோட்டு விட்டான் போலிருந்தது.

"இப்போது கிட்டத்தட்ட ஏழு மணியாகிறது" என்றேன்.

"இரவு வெகுநேரம் வரை நீங்கள் வேலை செய்யவேண்டியிருக்குமோ?". சுவரில் ஒரு வெள்ளிச் சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்த எனது அழகிய 'குயின் ஆன்' பொக்கற் மணிக்கூட்டின் மேல் அவனது கவனத்தை ஈர்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதுவே என்னிடமிருந்த ஒரேயொரு பெறுமதிமிக்க பொருள். அடுத்த வீட்டுப் பையன்களின் கண்களுக்கு அது ஒன்றே என்னை ஓர் உயர்வான இடத்தில் இருத்தி வைத்திருந்தது. ஆனால், 'சென்சஸ்' செய்ய வந்தவன் அந்தப் பொக்கற் மணிக்கூட்டுக்கு எந்தவிதமான முக்கியத்துவத்தையும் கொடுக்கவில்லை.

"அடுத்த வீட்டில் யார் யார் வசிக்கிறார்கள்?'

"வீட்டின் சொந்தக்காரனும் அவனது மனைவியும்."

"அதை விட யாராவது இங்கு இருக்கிறார்களா?"

"அவன் வீட்டின் பின் பகுதியை வேறு குடும்பங்களுக்குக் கொடுத்துள்ளான்."

"இந்த அறை கூட இந்த வீட்டின் ஒரு பகுதி தானே?'

"ஆம்."

"உனது தொழில் என்ன?"

"எழுதுவது"

"அப்படி யென்றால், நீ சொல்வது பத்திரிகையாளன் என்பதைத் தானே குறிக்கிறது?"

அவன் அதில் அரைவாசியைத் தனக்குள்ளே கூறிக் கொண்டான்.

"உனக்கு அப்படி எடுக்க விருப்பமானால் அப்படியும் எடுக்கலாம்."

நான் சிரித்துக் கொண்டேன்.

"உனக்கு என்ன வயதாகிறது?'

"முப்பத்தைந்து"

"உனக்குத் திருமணமாகி விட்டதா?"

"ஆம்."

"மாத வருமானமாக எவ்வளவு கிடைக்கிறது?"

"உத்தேசமாக தொண்ணூறு ரூபாய் கிடைக்கிறது"

"அது என்ன உத்தேசமாக எனக் கூறுகிறாய்?" சென்சஸ் செய்ய வந்தவன் குறுக்கிட்டுக் கேட்டான்.

"அது சென்சஸிற்கு தேவைப்படாத ஒன்று" என எரிச்சலுடன் கூறினேன். "சொல்வதென்னவோ தொண்ணூறு ரூபாய் என்று தான் ஆனால், ஒரு பச்சைத் தாளைக் கண்டே பல காலமாகிறது."

"நீ ஓர் இந்தியன் தானே, பின் வேறு எப்படித் தான் இருக்க முடியும்"

"நீங்கள் அதில் சந்தேகப்படுகிறீர்களா?"

"நான் பேச்சை முறிப்பதுபோலக் கேட்டேன். அவன் எனது எரிச்சலைச் சட்டை செய்யவில்லை.

"நீயும் உனது மனைவியும் மட்டும் தானே இந்த அறையில் வசிக்கிறீர்கள்?"

நான் தலையை அசைத்து அதை ஆமோதித்தேன். அவன் எதையோ அசிங்கமாக நினைக்கிறான் என எனக்குத் தெரிந்தது.

"உனக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா?"

"இல்லை"

தேவையான தகவல்களை எல்லாம் எடுத்து விட்டான் போலும். அவனது விசாரணை அந்தக் கேள்வியுடன் முற்றுப் பெற்றது. அவன் தனது குறிப்புப் புத்தகத்தை மூடிக் கொண்டான்.

"நீங்கள் போகும் எல்லா வீடுகளிலும் இந்தக் கேள்விகளை எல்லாம் கேட்க வேண்டியிருக்குமோ?"

"இது ஓர் இலகுவான வேலையல்ல"

சென்சஸ் செய்ய வந்தவன் விளக்கினான்.

"ஆனால், நாங்கள் எங்களால் முடிந்த அளவு மிகத் திருப்திகரமாகச் செய்வது என உறுதி பூண்டுள்ளோம்"

"ரோட்டில் படுக்கும் மனிதர்கள், பார்க்குகளில் துயில் கொள்வோர், பிச்சைக்காரர்கள், நிலையான இருப்பிடமில்லாதோர் இவர்களை எல்லாம் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"எல்லோருமே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவார்கள்" என்றான் அவன். அவர்கள் எல்லோரையும் சேர்த்த 350 மில்லியன் சுயாதீனமான மக்களைக் கொண்டது தானே இந்தியா - அது தான் பாரத்! "

"சென்சஸ்" செய்ய வந்தவன் அறையை விட்டு வெளியே போவதற்காக மீண்டும் தலையைக் குனிந்து கொண்டான். பிசைந்த மாவை அமுத்துவதற்காக அடுத்த வீட்டுக்குச் சென்ற எனது மனைவி, அந்த நேரம் பார்த்து உள்ளே வந்தாள். மனைவி உள்ளே வந்ததும் அவனது முகத்தில் அடிப்பது போல் கதவை அடித்துச் சாத்தினேன்.

"அவர்களுக்கு வேறு வேலையே இல்லையா?" எனது மனைவி குற்றம் சாட்டினாள்.

"அழையா விருந்தினர்களைப் போல் உள்ளே நுழைந்து விடுகின்றனர். இவர்கள் இப்போதெல்லாம் பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை".

"அவர்களும் தமது வேலையைச் செய்யத்தானே வேண்டும் " என நான் மறுத்துரைத்தேன். "அது எப்படியாயினும் அவன் இனிமேல் வரமாட்டான்" [2]

"அவர்கள் பிள்ளைகளை ஹைதராபாத்துக்குக் கடத்துகிறார்களாம்."

எனது மனைவி அர்த்தமில்லாமல் கதைத்துக் கொண்டிருந்தாள்.

"எமக்குத்தான் பிள்ளைகளே இல்லையே".

என்ன உரையாடல் நடக்கிறது என்ற சிந்தனையின்றிக் கூறினேன்.

நன்றி - நூலகத்திட்டம்



# உலகின் மிகப்பெரிய ஹில்

எனது மனைவி என்னைப் புதுமையாகப் பார்த்தாள். நான் மடத்தனமாகப் பேசுவதாகக் கூட அவள் நினைத்திருக்கலாம். நான் சாப்பிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினாள். நான் சாப்பாட்டை விழுங்கத் தொடங்கினேன். அது எனது பழக்கமாகி விட்டிருந்தது.

"நான் வரநேரமாகும் கதவைத் திறந்து வைத்திரு" எனக் கூறிக்கொண்டு அறையை விட்டு வெளியேறினேன். நான் சினிமாவுக்குத்தான் போகிறேன் என அவளுக்குத் தெரியும். அதற்கான நாலேமுக்கால் அணாவிற்காக அவள் என்னுடன் முரண்பட்டுக் கொள்வதில்லை. இது பழக்கத்தால் ஏற்பட்ட ஓர் கட்டாயத் தேவையாக மாறியிருந்தது. ஒரு பழக்கத்தைத் தொடர்ந்து கைக்கொண்டு பின் அதை விடாப்பிடியாக வைத்திராவிட்டால், மனைவிமார் கவலையடையத் தொடங்கி விடுவார்கள்.

எனது அதிர்ஷ்டம் 'கலரி'யில் இரண்டு பேரே இருந்தனர். அதனால் முன்னே இருந்த சீற்றில் கால்களை வசதியாகப் போடக்கூடியதாக இருந்தது. மண்டபம் இருளடைந்தது. உடனே 'பார்க்கிலிஹில்' பேச ஆரம்பித்தார். நிமிர்ந்து அமர்ந்து கொண்டு அவரது குரலைக் கேட்கத் தொடங்கினேன். "உலகின் மிகப்பெரிய சென்சஸ்' 'ஹில்', சபையோரை பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னை போன்ற நகரங்களின் சந்தடிமிக்க தெருக்களின் வழியாக அழைத்துச் சென்று கொண்டிருந்தார்.

"உங்கள் வாசலுக்கு சென்சஸ் செய்ய வருபவன் வரும்போது..." என குறைந்த தொனியில் மிஸ்டர் ஹில் பேசத் தொடங்கினார். "... நீங்கள் நகரத்தில் வேலை செய்பவராக இருந்தால் என்ன, நாளாந்தக் கூலியாக இருந்தால் என்ன, அல்லது மாட்டுவண்டி ஓட்டுபவராக இருந்தால் என்ன..."

நல்லது, நான் மாட்டுவண்டி ஓட்டுவதில்லை. அத்துடன் ஏற்கெனவே, சென்சஸ் செய்ய வந்தவனை எதிர்நோக்கியும் விட்டேன். அதில் மன எழுச்சி அடைவதற்கு எதுவுமே இருக்கவில்லை. நான் சென்சசிலிருந்து சிரத்தையிலிருந்து விடுபட்டு, சிறுதுயிலில் ஆழ்ந்தேன்.

நான் விழித்துக் கொண்டபோது எனது கால்கள் தரையைத் தொட்டுக் கொண்டிருந்தன. முன் சீற்றிலிருந்த எனது கால்களை யாரோ நகர்த்தி விட்டிருந்தனர். காதோடு காதாகப் பேசும் சத்தம் கேட்டது. திரை பிரகாசமான வர்ணத்திட்டாகத் தெரிந்தது. எங்கோ மெக்சிக்கோவில்... 'அஸ்ரெக்' நாகரீகம்..., ஃவிற்ஸ் பற்றிக்'... சிறு துாக்கம்....

மீண்டும் நான் விழித்தபோது, "இப்போது அவன் இறப்பான்" என்று யாரோ கதைத்துக் கொண்டிருந்தது கேட்டது. சம்பவங்கள் பல நிறைந்த நாடகம் போன்ற அந்தத் திரைப்படத்தை நான் பார்க்கத் திரும்பியபோது, (வையில்ட்வெஸ்ரில் ஒரு மனிதவேட்டை) அது முடிவடையும் கட்டத்தை அடைந்திருந்தது.

"உனது மூளை சிதறுவதற்கு முன் வெளியே வா" என கதாநாயகன் கத்தினான்.


"உள்ளே வந்து என்னைப் பிடிக்க முடியுமானால் பிடி"

'பாங்க்' என்ற சத்தத்துடன் பாரின் கதவு திறந்தது. வில்லன் மார்பில் குண்டு புகுந்த நிலையில் இறந்து கிடந்தான்.

சேணத்தை அங்கேயே விட்டுவிட்டு, ஒரு குதிரை தன் பின்பக்கத்தைக் காட்டியபடி ஓடியது... நான் வெளியே வர முற்பட்டேன்.

வெளியே, அது ஓர் அழகு பொருந்திய இரவாக இருந்தது. செம்மறி ஆட்டு ரோமக்குவியல்கள் போலிருந்த முகில் கூட்டத்தினூடாக வெளியே வந்த சந்திரன், எனது சந்தை ஒளிமயமாக்கியது. கழைக்கூத்தாடியைப்போல் நுனிக்கால் விரல்களால், அங்கு படுத்துக் கிடக்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகளை மிக ஜாக்கிரதையுடன் தாண்டிப் போய்க் கொண்டிருந்தேன். நான் பல வருடங்களாகவே இந்தச் சந்து வழியாகப் போய்வருபவன் தான். இந்தச் சந்து நகரத்தின் இருதயம் போன்ற பகுதியிலிருந்தாலும், அது நகரிலிருந்து வேறுபட்ட ஒரு பகுதியாகவே இருந்தது. சட்டென இனங்கண்டு கொள்ள முடியாத பல நிரை யான வீடுகள் அங்கு இருந்தன. நிரைகள் முட்செடிகளால் பிரிக்கப்பட்டிருந்தன.

புதியவன் ஒருவன் ஓர் வீட்டைக் கண்டுபிடிப்பதாயின், ஆயாசமுண்டாகும் வகையில், பல மணி நேரத்தை அங்கு செலவளிக்க வேண்டிவரும். நிச்சயமாக அந்தத் தபாற்காரன் ஓர் அதிசயப்பிறவி



தான். அங்குள்ள எல்லோரது பெயர்களும் குருட்டுப் பாடம் போல் அவ னுக்குத் தெரியும். அங்கு வசிக்கும் அத்தனை பெண்களும் அவனுக்கு சிநேகிதமாகியிருந்தனர். தங்கள் கணவன்மார் இல்லாதபோது அபூர்வமாகவே மற்ற ஆண்களுடன் கதைக்கும் அந்தப் பெண்கள், அந்தத் தபால்காரனுடன் மட்டும் நெருங்கிப் பழகுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அட்டைக்கரிபோல் துலங்கும் இரவுகளில் அங்கு ஒரு தெருவிளக்கு மட்டுமே ஒளிர்ந்து

## த. ராமநாதன்

கொண்டிருக்கும். அப்போது எனது சந்து, துக்கம் நிரம்பி காற்றுடன் கூடி நிற்பதுபோன்ற உணர்வுடன் திகழும். மழை பெய்யும் போதெல்லாம் அங்கு படுத்திருக்கும் மனிதர்கள் எங்கோ மறைந்து விடுவார்கள். ஒரு அந்தத்திலிருந்து மறு அந்தம் வரை சுற்றிச் சுற்றி வளைந்து செல்லும் சாக்கடை தனித்து விடும். உஷ்ணமாக இருக்கும் நட்சத்திரங்களால் நிரம்பிய இரவுகளில், அல்லது முழு நிலவு வரும் உன்னதமான நாட்களில், பலமான கடற்காற்றால் உதிர்ந்த இலைகள் சுழன்றாடும். நெருக்கமாக அடைபட்டது போல் படுத்துக் கிடக்கும் உடல்கள் - காதலர்கள், கிழவர்கள், ஈனச்செயல் புரிவோர், எலிகள் எல்லாமே வேதனையுடன் கூடிய ஆன்மாக்களாக மாறி, மாயையும் வினோதமும் கலந்த தொடர்ச்சியான விம்பங்களாகத் தெரியும்.

உயிர்ப்பே இல்லாத இந்த உலக வாழ்வில், எளிய களியாட்டங்களுடன் கூடிய இந்தத் தீவிர உணர்வுகளில் கண்களை மேயவிடுவதில், எனக்கு ஒரு வகையான கிளர்ச்சி ஏற்படுவது வழக்கம். நித்திரையின் போது சுயாதீனமாகத் திரும்புகின்ற கால்கள், அணைக்கும் பாவனையுடன் கூடிய கைகள், காதோடு காதாக எழும்பும்படி தனது துணைக்குக் காதலன் கூறுவது...

வழமை போல் தெருவில் உள்ள குழாயடிக்கு வந்தேன். யாரோ ஒரு கவலை யீனமான மனிதன் அதனைத் திறந்து விட்டிருந்த தால் நீர் ஓடிக் கொண்டிருந் தது. நான் எனது கால்களைக் கழுவிவிட்டு குழாயைப் பூட்டினேன். மிகவும் சிரத்தையுடன் அதனைச் செய்தேன்.

அறைக் குப் போவதற் குள் மீண்டும் கால்க ளில் மண் படாத வாறு இருப்பத ற்காக, நுனிக்கால் விரல்க ளால் எனது கதவடி வரை நடந் தேன். கதவு திறந்த நிலையிலிருந்தது. உள்ளே ஓர் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. எனக்கு எரிச்சல் வந்தது. எத்தனை முறை நித்திரைக்குப் போவதாயின் கதவுக்கு தாழ்ப்பாள் போட்டுவிட்டுத் தூங்கும்படி மனைவிக்கு எச்சரித்திருக்கிறேன்? கோபத்துடன் கதவைத் தள்ளித் திறந்தேன். நான் அறைக்குள் வருவதுபோல் வேறு யாராவது அந்நியன் நுழைந்தால், இப்போது அகாலமாகி விட்டாலும் கூட அவளை எழுப்பிச் சண்டையிடத் தான் வேண்டும். அறை வெறுமையாக இருந்தது. பாய்கள் விரிக்கப்பட்டுத் தலையணைகளும் போடப்பட்டிருந்தன. ஓர் சிறிய மண்ணெண்ணெய் விளக்கின் திரி முழு அளவில் எரிந்து கொண்டிருந்தது. ஆனால், அவள் அங்கு இல்லை. எனக்கு நீரில் அமிழ்வது போன்ற உணர்வு ஏற்பட்டது. பின் அவள் அறைக்குள் வரும் காலடி ஓசை கேட்டது. இந்தப் பின்னிரவு நேரத்தில் அடுத்த வீட்டில் ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்கிறது!

சடுதியாக அடித்துப் பிடித்தபடி எனது மனைவி அறைக்குள் வந்தாள்.

"ஓ நீங்கள் வந்திட்டீர்கள்" என அதிகார தோரணையுடன் அடித்துக் கூறினாள். பழைய பெட்டியொன்றில் கைவிட்டுக் குடைந்து ஒரு துப்பரவான கந்தல் சீலைச் சுருளை எடுத்தாள்.

"இவை வேலையை முடிக்க உதவும்" எனக் கூறியவள், மருவத்துவச்சி எந்த நேரத்திலும் இங்கு வரலாம்" என்றாள்.

"எங்கே வருகிறாள்... இங்கேயா?"

"அடுத்த வீட்டிற்கு" எனப் பொறுமையின்றிக் கூறியவள், ஜானகிக்கு வலி கண்டிருக்கிறது" என்கிறாள்.

"ஜானகியா...? வெரிக்கோஸ் நாளங்களையுடைய அந்தப் பெண்ணா?"

எனது மனைவி என்னை வாடிய முகத்துடன் பார்த்தாள்.

"உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்க நேரமில்லை" எனக் கத்தியபடி அவள் அங்கிருந்து வெளியேறினாள். மாறுகண்களும், முழங்கால் மூட்டடியில் பச்சை நிறமுடைய அந்தப் பெண்ணே அந்த ஜானகி என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது. இன்று காலையில் கூட பலருடன் சேர்ந்து அவளும் பாடினாள். இப்போது முனகுகிறாள். இலேசான தடுப்பே எங்களது பகுதியையும் ஜானகியின் பகுதியையும் பிரிக்கிறது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள், நிச்சயமாக இந்த வேலையை பெண்களிடமே விட்டிருப்பார்கள். எனது மனைவியின் குரல் அப்பெண்களின் குரல்களுடன் சேர்ந்து ஒலித்தது.

பெண்களுக்கு ஆண்களின் துணை தேவைப்பட்டாலும், சரீர சம்பந்தமான துன்பங்கள் ஏற்படும்போது அவர்கள் தம்மைத் தனிமையில் விடுவதையே விரும்புவர்.

"ராம்... ராமச்சந்திரா... ராம்"

அவளது முனகல் ஒலி எனது ஆன்மாவைக் கத்தியால் குத்துவது போலிருந்தது. நான் போதைவசப்பட்டவன் போல் அசைவற்றுக் கிடந்தேன். தரையில் விரிக்கப்பட்டிருந்த பாயில் சலிப்புடன் கூடிய அலட்சியத்துடன் புரண்டேன். சிறிதுநேரம் நிசப்தம் நிலவியது. ஆனால், அதிக நேரம் அது நீடிக்கவில்லை.

"ராம்.. ராம்.. ராம்" எனது மனைவி மீண்டும் எமது அறைக்குள் வந்தாள்.

"எந்த நிமிடத்திலும் அது நிகழலாம்" என்றாள். எனது மனைவி "மருத்துவச்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டாள்..."

எமது அறையிலிருந்து ஒரு யார் கூட இல்லாத ஆப்பு வடிவமான 'பக்கீஸ்' பலகைகளால் அமைந்த தடுப்புக்கு மறுபக்கத்தில், மரணவலியால் ஏற்பட்டிருக்கும் மெலிதான முனகலும் ஒரு குழந்தை பிறப்பிற்காகப் போராடிக் கொண்டிருப்பதும், பக்தி பூர்வமான பயத்தையும் அழுத்தத்தையும் அங்கு உருவாக்கியிருந்தது. அதன் பின், வலியால் ஏற்பட்ட கணமூடித்தனமான கதறலுடன் குழந்தையின் அழுகுரல் கேட்டது.

'அது பிறந்து விட்டது போலும்' என்று எண்ணினேன். இந்த வறுமையான இருண்ட சந்தை அது தேர்ந்தெடுத்திருக்கிறது. மாலைக்கும் நள்ளிரவிற்கும் இடைப்பட்ட இந்த நேரத்தில் ஓர் ஆண்குழந்தை அடுத்த வீட்டில் ஜனித்துள்ளது. சென்சஸ் செய்ய வந்தவன் எனது அறைக்கு வந்து போனது என்னவோ, வெகு நாட்களுக்கு முன்பு நடந்த காரியம் போல் எனக்குத் தோன்றியது. நடைபாதையில் துயிலும் மனிதர்கள், சாக்கடையின் அண்மையில் மிக மெலிதாக வீசும் காற்றின் சலசலப்பு, அடுத்த அறையில் நிலவும் புரிந்துகொள்ள முடியாத அமைதி எல்லாம் ஒன்று சேர்ந்து எனக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தியது. மிகவும் மெலிதான தொனியில் சுவரிலிருந்த 'குயின் ஆன்' கைக்கடிகாரத்தின், டிக் - டிக் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. நான் வியர்வையில் தோய்ந்து போனேன்.

அறையில் வேறு யாரோ இருக்கிறார்கள். அவள் நித்திரை செய்கிறாள். எங்கள் இருவரது பாய்களையும் ஒரு அடி தூரத்திற்கு குளிர்ந்த தரை பிரித்திருந்தது. நான் எனது கைகளை அவளின் மேல் போட்டேன். அவள் புரண்டு வந்தாள். இருவருமே ஒரே தழுவலில் கட்டுண்டோம்.

1. குடித் தொகைக் கணக்கீடு
2. குதிரை லாயமும் சேமிப்புக் கிடங்கும்

தமிழில்:- சு. மகேந்திரன்



# தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# அதிகாரத்திமிருக்குள் அவதிப்படும் மாணவர்கள்!

*1995 ஒக்டோபர் 23,* தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி உதயம்.

1996 மே 15, இப்பல்கலைக்கழகக் கல்லூரி பூரண அந்தஸ்துடைய பல்கலைக்கழகமாக அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட நாள்.

இந்நாளில் வெளிவந்த பல்கலைக்கழகம் பற்றிய அனுபந்தம் ஒன்றில், "இந்நாள் இலங்கையில் கல்வி வரலாற்றிலும், குறிப்பாக இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாற்றிலும் ஒரு பொன்னாள்" என்று எழுதப்பட்டிருந்தது நினைவுக்கு வருகின்றது.

ஆனால், இன்று அங்கு நடக்கும் சம்பவங்களையும், மாணவர் குழப்பங்களையும், விரிவுரையாளர்கள், ஊழியர்களின் குமுறல்களையும் எடுத்து நோக்கினால், இவ்வாறான ஒரு பல்கலைக்கழகம் ஏன் தான் தோன்றியதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. சுமார் மூன்று வருடத்துக்குள்ளாகவே மூன்று விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு, விசாரணைகளை மேற்கொள்ளவும், பத்திரிகைகளில் அடிக்கடி பல்வேறு பிசுபிசுப்புகளும் எரிச்சலூட்டும் செய்திகளும் வரக்கூடியளவுக்கு அப்பல்கலைக்கழகத்தில் என்ன தான் நடக்கின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட ஒலுவில் வர்த்தக முகாமைத்துவ, கலை கலாசார பீடங்கள் இரண்டையும் சம்மாந்துறையில் பிரயோக விஞ்ஞானத் துறையையும் கொண்டுள்ளது இப்பல்கலைக்கழகம். கிழக்கு, யாழ் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டு பயின்று கொண்டிருந்த முஸ்லிம் மாணவர்கள், அப்பிரதேசங்களில் நிலவிய பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டதன் பின்னணியிலேயே இப்பல்கலைக்கழகத்தின் உதயம் அமைந்திருந்தாலும், இவ்வரசின் பிரதேச ரீதியாக பல்கலைக்கழகங்களை நிறுவும் திட்டமும் இதன் உதயத்திற்கு அடிகோலியது எனலாம். இன்று மூன்று பீடங்களிலும் சுமார் 900க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக இப்பிரதேசத்தைச் சேர்ந்தவரும், பேராதனை பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான எம்.எல்.ஏ.காதர் (எம்.ஏ) நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே மூன்று வருடங்கள் உபவேந்தராகக் கடமையாற்றிய இவர், கடந்த மே மாதம் முதல் மீண்டும் மூன்று வருடங்களுக்கு உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பல்கலைக்கழகத்தில் கடந்த வருடங்களில் ஏற்கெனவே இரண்டு விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டன. ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஒரு நிர்வாக அதிகாரிக்கும், சில விரிவுரையாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடும், சில சிறிய மாணவ குழப்பங்களுமே முன்னைய இரண்டு விசாரணைக்குழுக்களும் நியமிக்கப்படுவதற்கான காரணமாகும். அவ்விசாரணைக் குழுக்களில் கடமையாற்றியவர்களுக்கு வேதனமாகவும், ஏனைய செலவுகளுக்குமாக பல லட்ச ரூபாய்கள் செலவழிக்கப்பட்டதையும், விழுந்தடித்து பல விரிவுரையாளர்களும், மாணவர்களும், ஊழியர்களும் சாட்சியமளித்ததையும் தவிர, வேறு எவ்வித கமிசன் அறிக்கைகளும் வெளிவரவுமில்லை. எதுவும் அவர்களால் தீர்த்து வைக்கப்படவுமில்லை. ஆனால், இறுதியாக மூவரடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டதன் பின்னணியும், இடம்பெற்ற சம்பவங்களும் இப்பல்கலைக்கழகத்தையே கலக்கி, உலுக்கி விட்ட சம்பவங்கள் மாத்திரமல்ல, இனி எந்த உருவத்திலும் அவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறாத வகையில் உரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டிய சம்பவங்களுமாகும்.

இச்சம்பவங்களுக்கான காரணிகளை இரண்டு வகையாக இங்கு குறிப்பிடலாம்.

ஒன்று உடனடிக் காரணி, இரண்டாவது தொடர்ந்து வந்த பல்வேறு காரணிகள்.

## உடனடிக்காரணி:

பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் ஒழுங்கு செய்திருந்த ஒரு மாணவர் ஒன்று கூடல் நிகழ்வுக்காக அழைப்பிதழை வழங்குவதில் இரு மாணவ குழுக்களிடையே அடிதடி ஏற்பட்டு ஒரு மாணவன் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு, பலத்த காயங்களுடன் மூர்ச்சையாகி விழுந்து விட்டார். அவர் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதால் உயிராபத்திலிருந்து காப்பாற்றப்பட்டார். இச்சம்பவத்தில் சுமார் 6, 7 மாணவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். இது பற்றி விசாரணை மேற்கொண்ட பல்கலைக்கழகத்தின் ஒரு சில விரிவுரையாளர்கள் அடங்கிய விசாரணைக்குழு, தாக்கிய மாணவனை விசாரணைக்கு அழைக்கவுமில்லை, அவருக்கு எவ்வித தண்டனைகளும் வழங்கப்படவுமில்லை.

இது மட்டுமின்றி குறித்த தாக்குதலில் ஈடுபட்ட சிரேஷ்ட மாணவன், ஏற்கெனவே இடம்பெற்ற பல மாணவ கைகலப்புகளில் நேரடியாக சம்பந்தப்பட்டு பல மாணவர்களைத் தாக்கியவர் மட்டுமன்றி அதற்காக இறுதி எச்சரிக்கையும் வழங்கப்பட்டவருமாகும். இம்மாணவனுக்கும், விசாரணைக்குழுவில் இடம்பெற்றிருந்த சிரேஷ்ட மாணவ ஆலோசகருக்குமிடையில் உள்ள நெருக்கமான உறவினாலேயே தாக்கிய மாணவன் எவ்வித தண்டனையுமின்றி காப்பாற்றப்பட்டார் என்ற உண்மை மாணவர்கள் மத்தியில் மட்டுமின்றி பக்கச்சார்பற்ற விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மத்தியிலும் சந்தேகமற நிலவியது. இதில் வேடிக்கை என்னவென்றால், தாக்கப்பட்டு மூர்ச்சையாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவனுக்குக் கூட விசாரணைக்குழுவால் தண்டனை வழங்கப்பட்டமையாகும். பல்கலைக்கழகத்தின் அசட்டைப் போக்கினால் பல்கலைக்கழக மரபுக்கேற்ப எவ்வித மாணவ அமைப்புகளும், சங்கமும் அமைக்க ஏற்கெனவே இடமளிக்கப்படாததால், இந்த அநியாயத்தை தட்டிக் கேட்பதற்கு மாணவர்களிடையே எவ்வித ஸ்தாபன அமைப்பும் இருக்கவில்லை. இச்சம்பவத்தின் ஓரிரு நாட்களின் பின் பெரும்பாலான மாணவர்கள் ஒன்றிணைந்து உபவேந்தரின் அலுவலகத்திற்கு முன்னால் ஒன்றுகூடி நீதியான விசாரணை ஒன்று மீண்டும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இதில் அநீதியாக நடந்து கொண்ட சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பதவி நீக்கப்பட வேண்டுமெனவும், தாக்கிய மாணவன் தண்டிக்கப்படவேண்டுமெனவும் கோஷமெழுப்பியவாறு குழுமியிருந்தனர். உபவேந்தரின் அலுவலகத்தில் விரிவுரையாளர்கள், அதிகாரிகள் முக்கிய கூட்டமொன்றில் கூடியிருந்தபோது தான் இக்கோஷம் எழுப்பப்பட்டது. கூட்டத்திலிருந்து கலை கலாசார பீடாதிபதியும், சிரேஷ்ட மாணவ ஆலோசகரும் வெளியில் சென்று மாணவர்களிலிருந்து நான்கு மாணவர்களை பேச்சுவார்த்தைக்கென அழைத்துக் கொண்டு சென்று, அங்கிருந்த விரிவுரையாளர்கள், அதிகாரிகள், மத்தியில் அவர்களை விசாரித்தபோது, அம்மாணவர்கள் மிக தைரியமாக, உறுதியாக தமது கோரிக்கைகளை முன் வைத்தனர்.

அந்நான்கு மாணவர்களின் பெயர்களையும், கையொப்பத்தையும் எழுதி வாங்கிக் கொண்ட பீடாதிபதியும், சிரேஷ்ட மாணவ ஆலோசகரும் மீண்டும் விசாரணை மேற்கொள்வதாகக் கூறி அவர்களை அனுப்பிவைத்தனர். ஆனால், ஓரிரு நாட்களின் பின் அந்நான்கு மாணவர்கள் மீது தேவையற்ற குழப்பத்திலும், கலவரத்திலும் ஈடுபட்டதாகவும் மாணவர்களைத் தூண்டியதாகவும் குற்றம்சாட்டி விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், தொலைக்காட்சி நேரடி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர் அஷ்ரஃப் அவர்களிடம் பல்கலைக்கழக சம்பவங்கள் சம்பந்தமாக தொலைபேசி மூலம் கேள்வி கேட்டதற்காகவும், ஒரு மாணவனுக்கு (குற்றஞ்சாட்டி) விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டதாகும். அத்தோடு விளக்கம் அளிப்பதற்கு மூன்று நாட்கள் மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டது. இதனால் மிகவும் அதிருப்தியும், ஆத்திரமுமுற்ற மாணவர்கள் தம்மிடையே எவ்வித ஸ்தாபன அமைப்புகளும் இன்மையால் எல்லா மாணவர்களுமே ஒன்று சேர்ந்து பல்கலைக்கழகத்தின் இவ்வநீதியான நடவடிக்கைக்கு எதிராகப் போராடுவது என்று முடிவு செய்து நால்வருக்கு மாத்திரம் அனுப்பப்பட்ட விளக்கம் கோரிய கடிதம் எல்லா மாணவர்களுக்கும் அனுப்பப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்தனர். சுருக்கமாக, ஓர் தவறை மறைப்பதற்காக மற்றொரு தவறாக விளக்கம் கோரி விடுக்கப்பட்ட கடிதங்களே, 08.07.99ல் தென் கிழக்கு பல்லைக்கழகத்தில் இடம்பெற்ற அனைத்து விபரீதங்களுக்கும், விளைவுகளுக்கும் காரணம் என்று கூறலாம். எனவே, மாணவர்கள் மறுநாள் காலையிலேயே பல்கலைக்கழகத்தின் பிரதான வீதியை அண்மித்த முகப்புப் பகுதியில் நூற்றுக்கணக்கில் கூடி, தமது கோரிக்கை பற்றிய பதாதைகளைத் தாங்கிக் கொண்டு, சிறிய ஒலிபெருக்கி மூலம் கோஷமெழுப்பிக் கொண்டிருந்தனர். பதாதைகளில் காணப்பட்ட சில முக்கிய வாசகங்கள் பின்வருமாறு:-

* சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பதவி விலக வேண்டும்.

* மாணவர் கவுன்சில் உடன் நிறுவப்பட வேண்டும்.

* பரீட்சை விதிமுறைகள், கைநூல் தயாரிக்கப்பட வேண்டும்.

* குற்றம் செய்த மாணவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

அதன்பின் அவர்கள் பல்கலைக்கழக பிரதான கட்டிடங்கள் அமைந்துள்ள எல்லைக்குள் ஊர்வலமாக வந்து பதிவாளரின் காரியாலயத்துக்கு முன்னர் குழுமியிருந்தனர். சுமார் 3,4 மணித்தியாலங்களாகக் கடும் வெயிலில் கூடியிருந்த மாணவர்கள் தமது கோரிக்கைகள் நிர்வாகத்தால் பொருட்படுத்தப்படாமலும், தமக்கு எவ்வித நியாயமும் கிடைக்காமல் இருப்பது பற்றி ஆவேசமுற்று தமது ஆவேசத்தை ஒலிபெருக்கியில் தெரிவித்துவிட்டு பதிவாளரையாவது பதில் தருமாறு கேட்டுக் கொண்டிருந்தனர். இவ்வளவுக்கும் உபவேந்தர் ஒலுவில் வளாகத்துக்கு வராது, தனது அட்டாளைச்சேனை காரியாலயத்தில் இருந்தவாறு ஒலிவிலுள்ள அதிகாரிகளுடன் தொலைபேசியில் தொடர்ந்து தொடர்பு கொண்டிருந்தார். இதற்கிடையில் கட்டுக்கடங்காத மாணவர்கள் சிலர், பதிவாளரின் காரியாலயத்தை நோக்கிக் கற்களை வீசத் தொடங்கியபோது சில ஜன்னல் கண்ணாடிகளும், விளம்பரப் [illegible] கண்ணாடிகளும் நொறுங்கின. இது நடந்த பத்து நிமிடத்துக்குள் பிரதான வாயிலினூடாக பொலிஸ் ஜீப்பொன்றும், பொலிசாரின் மோட்டார் சைக்கிளும் வளாகத்துக்குள் நுழைவதைக் கண்ட மாணவர்கள் மிக ஆத்திரமுற்று கற்களை எடுத்துக் கொண்டு பொலிஸ் ஜீப்பை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். இக்கட்டான இந்நிலைமையை அவதானித்த சில விரிவுரையாளர்கள் ஸ்தலத்துக்கு ஓடிச்சென்று மாணவர்களை ஒரு பிரிவினர் தடுத்து நிறுத்த வேறு சில விரிவுரையாளர்கள் பொலிசாரை அவ்விடத்தை விட்டுச் செல்லுமாறு வினயமாக வேண்டிக் கொண்டனர். பொலிசாரும், சற்று தூரம் நகர்ந்து சென்ற பின் மாணவர்கள் அமைதியாகக் கலைந்தனர். அன்று, ஏதாவது சிறு அசம்பாவிதமாவது நடந்திருந்தால் தானியக்கத் துப்பாக்கிகளோடு வந்த பொலிசாரின் குண்டுகளுக்கு பல மாணவ உயிர்கள் பலியாகி இருக்கும். பொலிசாரை அங்கு வரவழைத்தவர் உபவேந்தரே என்பது பின்னர் தெரியவந்தது.

இச்சம்பவத்திற்குப் பின்னர் கலை, கலாசார பீடமும், வர்த்தக முகாமைத்துவ பீடமும் ஒன்று கூடி ஆறு விரிவுரையாளர்களைக் கொண்ட இணக்க சபை ஒன்றை தெரிவுசெய்து அவர்களுக்கு சில அதிகாரங்களையும் வழங்கியது. இச்சம்பவம் நடைபெற்ற அன்றே இக்குழுவினர் மாணவர்களுடன் பல மணி நேரம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். மாணவர்கள் மிக நியாயமான பதினொரு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றைப் பெற்றுக் கொண்டு அட்டாளைச்சேனையிலிருந்த உப வேந்தருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இக்குழுவினர் சென்றபோது அங்கு ஏற்கெனவே குழுமியிருந்த நிர்வாக அதிகாரிகள் மிகக் கோபமான முறையில் காணப்பட்டதுடன் பல்கலைக்கழகத்தை உடன் மூட வேண்டுமென்ற கருத்துடையவர்களாகவும் காணப்பட்டனர். இணக்க சபையினர் உபவேந்தரை தனியாக அழைத்து நிலைமையை விளக்கியதுடன், மாணவர்களின் கோரிக்கைகளிலுள்ள நியாயத்தன்மையையும் முன்வைத்து பல்கலைக்கழகத்தை மூடிவிடாமல் விடயத்தை சமாதானமாகத் தீர்த்து வைக்கலாம் என்ற நம்பிக்கையையும் ஊட்டினர். பின்னர் உபவேந்தரும், இணக்க சபையினரும் நிர்வாக அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தைக்குச் சென்ற போது அங்கு பல்கலைக்கழகம் மூடப்படுவதற்கான சாத்தியக் கூறுகளே அதிகமாகக் காணப்பட்டன. உபவேந்தரின் வேண்டுதலின்படி மாணவர்களை சந்திப்பதற்காக இணக்க சபையினர் பி.ப. 5 மணிக்கு ஒலுவில் வளாகத்துக்கு வந்தபோது அங்கிருந்த மாணவர்கள் அனைவரும் கலைந்து சென்று விட்டதை அறிந்தனர். பின்னர் அன்றிரவு வானொலி, தொலைக்காட்சி செய்திகள் மூலம் பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாகவும் விடுதியில் இருக்கும் மாணவர்கள் அனைவரும் விடுதியை விட்டு வெளியேற வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்திற்கு ஓரிரு வாரங்களின் பின், அமைச்சர் அஷ்ரஃப்பின் கொழும்பு இல்லத்துக்கு மாணவர்களும், பல்கலைக்கழக நிர்வாக அதிகாரிகளும் உபவேந்தரும் அழைக்கப்பட்டு பல மணி நேர கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. அமைச்சர் அவர்கள் குற்றம் இழைத்தவர்களைக் கண்டித்ததோடு மாணவர் பேரவை இதுவரை அமைக்கப்படாததற்காக உபவேந்தர் மாணவர்களிடம் மன்னிப்புக்கோர வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். ஒரு விசாரணைக்குழுவை உடன் நியமித்து அதன் அறிக்கையின் பின்னரே, பல்கலைக்கழகத்தை திறப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவுக்கேற்பவே மூன்றுபேர் கொண்ட விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணைகளும்

நன்றி - நூலகத்திட்டம்



மேற்கொள்ளப்பட்டன. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கும், பல்கலைக்கழகம் மூடப்படுவதற்குமான உடனடிக்காரணம் இவைகளாகும்.

### தொடர் காரணங்கள்:

உண்மையில் இப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப காலங்களிலிருந்து, இடம்பெற்றுவரும் பல்வேறு முறைகேடான நடவடிக்கைகளும், நிர்வாகத்தின் அசமந்தப் போக்கும், ஒரு சில விரிவுரையாளர்கள், பீடாதிபதிகளின் தவறான நடவடிக்கைகளும், உபவேந்தரின் அலட்சிய மனப்பான்மையுமே இப்பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து வரும் அனைத்து அமைதியீனங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் காரணமாகும். இவற்றில் ஒரு சிலவற்றை இங்கு கோடிட்டுக் காட்டுவது ஒரு விமர்சகன் என்ற வகையில் எனது கடமையாகும். அவற்றில் சில:-


1. தேர்ச்சி பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இங்கு நியமிக்கப்படாமை.
2. மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் என்ற வகையில் உயரதிகாரிகள் மிக அதிகளவு நாட்கள் இங்கு தங்கி கடமையாற்ற வேண்டிய அவசியம் இருந்தும் அவ்வாறு இடம்பெறாமை.
3. பீடாதிபதிகளின் தகுதியின்மையும், தவறான பட்டப் பிரகடனங்களும்.
4. ஒரு சில பாட விரிவுரைகளில் காணப்படும் தவறான விளக்கங்களும், பிடிவாதப்போக்கும்
5. ஒரு சில மாணவர்கள் உயரதிகாரிகளை தமது கைகளுக்குள் போட்டுக் கொண்டு அதன் மூலம் விரிவுரையாளர்களை பயமுறுத்தவும் பரீட்சைகளில் அதிக புள்ளிகள் பெறவும் முயற்சி செய்கின்றமை, அவ்வாறு பெற்றமை.
6. பதவி நியமனம், பீட பாட மாற்றங்களில், இணைப்புகளில் பல்கலைக்கழக விதிமுறைகள் பலமுறை மீறப்பட்டமை.
7. மாணவர்களுக்கான சங்கங்கள், அமைப்புக்களை உரிய காலங்களில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படாமை.
8. பல்கலைக்கழகத்தின் ஆரம்பகால விரிவுரையாளர்கள் சிலர் மீது சந்தேகப் பார்வையும், அவர்களைப் புறக்கணித்தமையும்.
9. ஆய்வுகள், கருத்தரங்குகள், வெளியீடுகள், புலமைப்பரிசில்கள் போன்றவற்றில் விரிவுரையாளர்கள் தூண்டப்படாமையும், அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படாமையும்.
10. பிற பல்கலைக்கழகங்களிலிருந்து சிரேஷ்ட விரிவுரையாளர்களின் சேவைகள் பெற முயற்சிக்கப்படாமையும், அவர்களில் நிர்வாகத்தின் நம்பிக்கையின்மையும்,
11. கற்பிக்கும் ஆற்றலற்ற விரிவுரையாளர்கள் சிலர் தவறான வழிகளில் நியமனம் பெற்றுள்ளமை.
12. மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்பதற்காக தவறான வழிகளைக் கையாண்டமை.
13. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களை தமது சொந்த நலன்களுக்காகவும், தவறான செயல்பாட்டுக்காகவும் மாறுபட்ட குழுக்களாக அடையாளப்படுத்தியமை. இதனால் இவர்களுக்கிடையில் நிலவும் ஒற்றுமையின்மை.
14. ஓரிரு விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களாக உள்ள தமது சகோதரர்கள், உறவினர்கள், தமக்கு வேண்டியவர்களுக்காக தவறான வழியில் பரீட்சை மோசடிகளில் ஈடுபட்டமை. இவர்களின் ஒழுக்கக்கேடான நடவடிக்கைகள்.
15. பல்கலைக்கழகத்தில் கல்விசார் ஊழியர்களை அதிகளவு புறக்கணித்தமையும், நிர்வாக அதிகாரிகள், ஊழியர்களுக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டமையும்.
16. பல்கலைக்கழகத்தின் சில முக்கிய பதவிகளுக்கு திட்டமிட்ட முறையில் குறிப்பிட்ட ஒரே ஊரவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்மையும், தகுதியான பலர் புறக்கணிக்கப்பட்டமையும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக இடம்பெற்று வரும் நிர்வாகத்தின் தொடர்ச்சியான மேற்படி நடவடிக்கைகளும் அனுபவற்ற செயற்பாடுகளுமே இப்பல்கலைக்கழகத்தில் பல்வேறு அசம்பாவித சம்பவங்களும் மாணவர் குழப்பங்களும் நடைபெறுவதற்கும், இதற்காக மூன்று விசாரணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டதற்குமுரிய காரணங்களாகும்.

நாம் முன்னர் குறிப்பிட்ட முன்னைய இரண்டு விசாரணைக்குழுக்களும், தமது விசாரணைகளை பல நாட்கள் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரதும் சாட்சியங்களைப் பதிந்து தனது அறிக்கைகளை பல்கலைக்கழக நிர்வாகத்திடம் உரிய காலப்பகுதியில் ஒப்படைத்திருந்தது. ஆனால், அது பற்றிய எவ்வித விபரங்களும், சாராம்சங்களும் கல்விசாரா, கல்விசார் ஊழியர்களுக்கோ, பீடத்தலைவர்களுக்கோ, பகுதித் தலைவர்களுக்கோ இதுவரை தரப்படவில்லை. அவ்வறிக்கைகளுக்கு என்ன நடந்தது என்று, பல்கலைக்கழகத் தலைமைப்பீடம் மூச்சுக் கூட விடவில்லை. அனைத்தும் மிகக் கச்சிதமாக மூடிமறைக்கப்பட்டு விட்டன.

### மூன்றாவது விசாரணைக்குழு:

முன்னர் நாம் குறிப்பிட்ட பல்வேறு அசம்பாவிதங்கள், மாண்வர் குழப்பங்களும் எல்லை மீறி நடந்ததினால் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டு பின்வரும் மூவரடங்கிய விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. இசட்டத்தரணி எம்.வை.எம். பாயிஸ் (தலைவர்) ஜனாப் எஸ்.எச்.எம்.ஜெமீல், கலாநிதி ஏ.ஜி.எச்.இஸ்மாயில் ஆகியோரே விசாரணைக்குழு உறுப்பினர்களாவர். இவ்விசாரணைக்குழு நியமனம் பற்றியும், சாட்சியம் அளிக்க விரும்புவோர் பற்றிய விண்ணப்பம் பற்றியும் பல்வேறு பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் செய்யப்பட்டதுடன் வானொலி, தொலைக்காட்சி செய்திகளிலும் பரவலான விளம்பரம் செய்யப்பட்டது. இவ்விசாரணைக்குழுவின் அங்கத்தவர்களை உபவேந்தர் அவர்களே நியமித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்களைத் தூண்டி, குழப்பத்துக்கு காரணமாகவிருந்த விரிவுரையாளர்கள் இதன் மூலம் தண்டிக்கப்படவுள்ளனர் என நிர்வாகத்தோடு தொடர்பும், பிணைப்பும் கொண்டவர்களால் முன்கூட்டியே மகிழ்ச்சிகரமான செய்திகள் பரப்பப்பட்டன. இவ்விசாரணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றிய பத்திரிகை விளம்பரம் ஒன்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.



1. 25.06.99 முதல் 08.07.99ம் திகதிக்கிடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற ஒழுக்கக்கேடான சம்பவங்கள், கலவரங்கள், மாணவர் அமைதியின்மை என்பவற்றை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இருந்த காரணிகள் சந்தர்ப்ப சூழ்நிலைகள், நிகழ்ச்சிகளினைக் கண்டறிதல்.
2. மேற்குறிப்பிட்ட அசம்பாவிதங்களை ஏற்படுத்தியவர்கள் அல்லது அதற்கு காரணமாக இருந்தவர்கள், தூண்டியவர்கள் அல்லது அதற்கு பொறுப்பானவர்களை அடையாளம் காணுதல்.
3. மேற்குறிப்பிட்ட அசம்பாவிதங்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய ஒழுக்காற்று நடவடிக்கைகளின் தன்மை பற்றி சிபாரிசு செய்தலும், இவ்வாறான அசம்பாவிதங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி சிபாரிசு செய்தலும்.

மேற்கண்ட அறிவுறுத்தல்களின் மூலம் மாணவர் குழப்பங்களுக்கு ஒரு சிலரே (குறிப்பாக விரிவுரையாளர்களே) காரணம் என பல்கலைக்கழக நிர்வாகம் உறுதியாக நம்பியிருந்தது எனவும், எவ்வாறாயினும் அவர்களைத் தண்டிக்கும் பகீரதப்பிரயத்தனத்தின் ஒரு செயற்பாடே இவ்விசாரணைக்குழுவின் நியமனம் என்பதும் தெளிவாகத் தெரிந்தது. அதற்கேற்றவாறு நிர்வாகத்தைச் சேர்ந்திருந்தோரின் உரையாடல்களும், மகிழ்ச்சி வெளிப்பாடுகளும் அமைந்திருந்ததை அக்காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தில் பரவலாகக் காண முடிந்தது.

மிகவும் அமர்க்களத்துடன் தினசரி பத்திரிகைச் செய்திகள், வானொலி, தொலைக்காட்சி செய்திகளின் பரவலான விளம்பரங்களுடன் விசாரணைக் குழுவின் செயற்பாடுகள், ஓகஸ்ட் 2ம் திகதி முதல் 6ம் திகதி பல்கலைக்கழக அதிதிகள் விடுதியில் நடைபெற்றது. மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், நிர்வாகிகள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் நூற்றுக்கணக்கில் விசாரணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தனர். இது பற்றி ஒவ்வொரு நாளும் இலங்கையில் முக்கியமான பத்திரிகைகளில், வானொலியில், தொலைக்காட்சியில் பல்வேறு செய்திகள் சுடச்சுட வெளிவந்த வண்ணமிருந்தன. இந்த ஐந்து நாட்களும் பத்திரிகையாளர்களை அழைத்து, பத்திரிகையாளர் மாநாடுகளையும் நடாத்தி சுடச்சுட செய்திகளை பத்திரிகைகளுக்கு வழங்குவதில் பல்கலைக்கழகம் முனைப்பாக இருந்து செயல்பட்டது. படு அமர்க்களமாகவே விசாரணைக்குழு பற்றிய செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

> **மாணவர்களும், விரிவுரையாளர்களும், பெற்றோர்களும், சமூக இயக்கங்களும் ஒன்று கூடி வேண்டுகோள் விடுத்தும், அறிக்கையை வெளியிடாமல் இருக்கும் நிர்வாகத்தின் மெத்தனமான போக்கு பற்றி பல்வேறு சந்தேகங்களும், ஊகங்களும் நிலவத் தொடங்கியுள்ளன. இவ்வளவு கச்சிதமாக அறிக்கையை மூடி மறைக்குமளவுக்கு என்னதான் அதில் கூறப்பட்டுள்ளது என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.**

அவற்றில் சில:-

1. 90 பேர் விசாரணைக்குழுவின் முன் சாட்சியம்.
2. 30க்கு மேற்பட்ட ஒலிப்பதிவு நாடாக்களில் சாட்சிகளின் சாட்சியங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
3. சகல தரப்பினரும் சாட்சியமளித்து விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.
4. விசாரணைக்குழுவின் விசாரணைகள் யாவும் முடிவுற்றுள்ளன. ஓகஸ்ட் 10ம் திகதி அறிக்கை உபவேந்தரிடம் கையளிக்கப்படும்.

இவ்வாறு பல்வேறு செய்திகள் வந்துகொண்டேயிருந்தன. ஓகஸ்ட் 6ம்திகதி விசாரணைகள் முடிவுற்று, மறுநாள் விசாரணைக்குழு அங்கத்தவர்களும் கொழும்பில் தமது இருப்பிடங்களுக்கு சென்றனர். விசாரணைக்குழுவின் அறிக்கையை மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மட்டுமின்றி பெற்றோர்களும் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஏனெனில், இவ்வறிக்கை வெளிவந்து அதன் ஆலோசனைக்கேற்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னரே பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படும் என நிர்வாகம் பகிரங்கமாக பத்திரிகைகளில் அறிவித்திருந்ததாலேயே இவ்வறிக்கை மிக ஆவலுடன் சகலராலும் எதிர்பார்க்கப்பட்டது. அது மட்டுமின்றி இவ்வளவு விரிவான முறையில் பல லட்சக்கணக்கான வேதனங்கள், செலவுகளுடன் இலங்கையின் பிரபல அறிஞர்கள், சட்டத்தரணிகளை விசாரணைக்குழுவின் அங்கத்தவர்களாக நியமித்து மூன்று மாதங்களுக்கும் மேலாக பல்லைக்கழகத்தை மூடி மாணவர்களின் கல்வியையும் வீணடித்து மிக உயரிய இடம் வழங்கப்பட்டிருந்தது கமிஷன் அறிக்கைக்கு. இவ்வறிக்கை அன்று வரும், இன்று வரும் என எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டு சுமார் ஒன்றரை மாதங்கள் இழுத்தடிக்கப்பட்டு செப்டம்பர் 10 - 15ம் திகதியளவில் உபவேந்தர் வெளிநாடு சென்றிருந்த வேளை, பதிவாளரிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், அறிக்கை பற்றியும், அதன் விடயதானங்கள் பற்றியும் நிர்வாகம் வெளியில் எதுவும் சொல்லவுமில்லை. எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவுமில்லை. பல்கலைக்கழக ஆளுநர் சபை கூடி, அறிக்கையை பகிரங்கப்படுத்துவதில்லை என முடிவு செய்ததாக உபவேந்தர் பின்னர் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினார். அறிக்கையை பகிரங்கப்படுத்துவதில்லை என்ற முடிவுக்கான காரணம் எதுவும் கூறப்படவுமில்லை. முன்னர் கூறியவாறு, அறிக்கை பற்றிய எவ்வித பேச்சுமூச்சுமின்றி கடந்த 29ம் திகதி பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது. கடந்த மூன்று மாதங்களை எவ்வித பிரயோசனமுமின்றி கல்வி நடவடிக்கைகளுமின்றி வீணாகக் கழித்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் இந்நடவடிக்கையால் மேலும் மனம்நொந்து போன நிலையில் இப்போது பல்கலைக்கழகம் வருகின்றனர். கல்வி செயற்பாடுகளிலும் கலந்து கொள்கின்றனர். நிர்வாகம் தம்மை மேலும் தண்டிக்குமோ என்ற மனப்பயத்துடன் அவர்களின் வெளிப்பாடுகள் காணப்படுகின்றன. இப்போது மாணவர் பேரவைக்கான தேர்தல்கள் நடைபெற்று மாணவ பேரவையும் இக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் போது அமைக்கப்பட்டு விட்டது. இப்போது மாணவர்கள் பலம் பெற்ற ஒரு அமைப்பாக செயற்பட தொடங்கி விட்டார்கள். விசாரணைக்கமிஷனை நியமித்து, அதன் அறிக்கையை வெளியிடாத நிர்வாகத்தின் நடவடிக்கையில் அவர்களுக்கு தொடர்ந்து அதிருப்தியும், வெறுப்பும் ஏற்பட்டுள்ளதை அவர்களின் உரையாடல்கள் மூலம் அவதானிக்க முடிகின்றது.

மறுபக்கத்தில் அறிக்கை வெளியிடப்படாமைக்கும் நிர்வாகத்தின் தான் தோன்றித்தனமான போக்குக்கும் எதிராக மாணவர்களின் பெற்றோர்களும் விரிவுரையாளர்களும், சமூக பிரதேச இயக்கங்களும் ஓரணியில் திரள தொடங்கியுள்ளன. இந்நடவடிக்கையை கண்டித்து பெற்றார் ஒருவரால் இரண்டு துண்டுப்பிரசுரங்கள் வெளிவந்துள்ளதுடன் தொடர்ந்து வெளியிடப்படும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. சில அமைப்புகளும் சங்கங்களும் உடன் அறிக்கையை வெளியிடுமாறு பத்திரிகை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன. கடந்த செப்டெம்பர் 29ம் திகதி கூடிய தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கமும் ஏகமனதாக அறிக்கையை உடன் பகிரங்கப்படுத்துமாறு உபவேந்தருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இது சம்பந்தமாக அமைச்சர் அஷ்ரஃப் உயர்கல்வி அமைச்சர்களுக்கும், தொலைமடல் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்களும், விரிவுரையாளர்களும், பெற்றோர்களும், சமூக இயக்கங்களும் ஒன்று கூடி வேண்டுகோள் விடுத்தும், அறிக்கையை வெளியிடாமல் இருக்கும் நிர்வாகத்தின் மெத்தனமான போக்கு பற்றி பல்வேறு சந்தேகங்களும், ஊகங்களும் நிலவத் தொடங்கியுள்ளன. இவ்வளவு கச்சிதமாக அறிக்கையை மூடி மறைக்குமளவுக்கு என்னதான் அதில் கூறப்பட்டுள்ளது என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது. இவ்வாறு மறைப்பதன் மூலம் இன்னொரு பூகம்பம் பல்கலைக்கழகத்தில் வெடிக்குமோ என்ற மனக்கிலேசமும், பல்கலைக்கழக நலன் விரும்பிகள் மத்தியில் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவை அனைத்துக்கும் எதிர்காலம் தான் விரைவில் பதில் சொல்ல வேண்டும்.

**-பல்கலை அவதானி**

நன்றி - நூலகத்திட்டம்



# கட்டவிழ்குழலார் ஆற்றுகையும் அது ஏற்படுத்திய அதிர்வுகளும்

99ஒக்.15 அன்று அன்று திருகோணமலை புளித ஜோசப் அரங்கில் இலக்கிய விழா மிகவும் சிறப்பாக ஆரம்பமானது. அன்றைய தின மாலை அரங்கில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரின் "கட்டவிழ் குழலார்" ஆற்றுகை சபையை மட்டுமன்றி, அனைத்து உள்ளங்களினையும் அதிர வைத்தது. "உலகம் ஓர் நாடக மேடை" என்பர். ஆனால் அந்த அரங்கிலேயே உலகம் அதிர்ந்தது. எந்தவித தயக்கமும் இன்றிச் சொல்லப் பயந்தும், செயற்படப் பயந்தும் தம்மைத் தாமே அழித்துக் குறுகிக் குறுகிப் புதைந்த உள்ளங்களை உரிமையுடன் தட்டியெழுப்பியது. கொற்றவையிடம் இருந்து பெற்ற அந்தச் சக்தி எமக்கும் கிடைத்தது. துணிச்சலும் வீரமும் அன்று எமக்கும் வந்தது. சின்னச் சின்ன ஆசைகளிற்குக் கூட எங்கும் தடை, எதிலும் தடை என்பதனை இந்த அரங்கில் தான் காண முடிந்தது.



பெண் என்ற ரீதியில் வீட்டிலும் சரி, சமூகத்திலும் சரி, வீதியிலும் சரி நிகழ்கின்ற கொடுமைகள், அன்புக் கொலைகள் யாவும் எமக்கு ஓர் ஆவேச வெறியைத் தந்தது. இந்தப் பெண்கள் வித்தியாசமான வாழ்க்கை வாழ விரும்புகின்றனர். அவர்களுடனேயே நாமும் போக வேண்டும். இந்தச் சமூகத்தின் கரி நாக்கைத் துண்டு, துண்டாகக் கிழித்துப் பிய்த்துக், கொளுத்த வேண்டும் என்ற கொதிப்பும், ஆவேசமும் அந்தக் கறுப்புத் துண்டைக் கிழிக்கும்போது வந்தது. எமக்கென்ற உணர்வில் நாம் வாழ வேண்டும். இன்னொருவனின் ஏமாற்று மனங்களை நம்பி வாழக் கூடாது என்ற உறுதியான முடிவு, எம்மில் வந்தது. உண்மை உணர்வுடன் அந்த அரங்கு முழுவதும் தமது பலத்தை நிலைநாட்டியுள்ளனர். வித்தியாசமான அரங்க, அளிக்கையாகவும் காண்பியங்களும் எம்மைத் தொட்டன.

பெண் இன்பத்திற்கும், கவர்ச்சிக்கும், விளம்பரத்திற்கும், அடுப்புக்கும் உரியவள் அல்ல. அவள் "வீரத்தாய்" என்பதனை அந்த ஒளிப் பயணத்தில் உறுதியாகக் காணும்போது மெய்சிலிர்த்தது.

பிறந்தவுடன் சிரிக்கவும், பின்பு கால் ஆட்டவும் கற்றுத் தந்த பெற்றோர் இன்று வாய் திறந்து ஓர் வாய் பேசத் தடை. அவள் எந்த இடத்தில் வித்தியாசமாகச் செயற்பட எண்ணுகின்றாளோ அங்கு கொடூரம் நிலவுகின்றது.

ஒவ்வொரு ஆசா பாசங்களையும் காட்டி எம்மை அன்புக் கொலை செய்கின்றனர் என்பதனை "ஒப்பாரி" மூலம் உணர முடிகின்றது. இது பெற்றோர் குற்றமுமல்ல, பிள்ளைகளாகிய எம் குற்றமுமல்ல. சமூகம் மரபு ரீதியாகப் பேணிவந்துவிட்டது என்பது தான் உண்மை. அதை மாற்றி எமக்கென்ற வாழ்க்கை வாழ எண்ணுவது தவறா? என்ன குறை என்ன குறை என்று பெற்றோர் தம் கடமையைச் செய்கின்றனர் தான் இல்லை என்றில்லை. ஆனால், பிள்ளையின் உண்மையான நியாயமான விருப்பு என்ன? ஆசை என்ன? என்று சிந்திக்கின்றனர் இல்லை. அவர்களைச் சிந்திக்க ஏன் அவர்கள் விடுகின்றார்களில்லை.

எத்தனையோ பெற்றோர், பிள்ளைகளை அடக்கி, ஒடுக்கி, மடித்து வைத்திருக்கின்றனர். தம் சொற்படியும், தம் விருப்பத்தின் படியும் தான் செயற்பட விடுகின்றனர். ஏன் அவளுக்கென்ற உணர்வு இல்லையா? தன்னைப் பற்றிச் சிந்திக்க அவளுக்கு முடியாதா? அதற்கு உரிமையில்லையா? சுதந்திரம் இல்லையா? சுதந்திரம் பெற்றோராலும், சமூகத்தினாலும் மற்றும் எவராலும் வழங்கப்படுவதில்லை அல்லவா? தனக்குத் தான் வழங்கும் உரிமை அல்லவா சுதந்திரம்!




பிள்ளை போகும் வழி தவறானதாக இருந்தால் பெற்றோரும், பிள்ளையும் அன்னியோன்யமாகக் கலந்து, பேசிச் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். அதைவிட்டுப் பெண் என்பதற்காக முட்கம்பி இடுவது போதாமல் அதனுள் கடி நாயையும் விடுவதா?

உண்மையில் இந்த ஆற்றுகை என்னை மட்டுமன்றி உலக மனங்களையும் ஏதோ ஒரு வகையில் தொட வைத்திருக்கும். அவர்களிற்கிடையே பரஸ்பர உணர்வையும் தந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், அன்று அரங்கு ஆரம்பத்தில் விட்ட கண்ணீர், இன்றும் எம் கண்களில் வழிந்து கொண்டு இருக்கின்றது. இறுதியில் கட்டவிழப்பட்டதும் அந்த வீரம், துணிவு எமக்கும் ஓர் துடிப்பைத் தந்துள்ளது. இவர்கள் தாம் மட்டும் சந்தோசமாக இருக்க விரும்பவில்லை. அனைத்துத் தமிழ் உள்ளங்களினதும், ஏன் அனைத்துப் பெண்களினதும் சந்தோஷத்திற்காகப் பொறுமையாகப் பொங்குகின்றனர். இப்படியான ஓர் [illegible]மான ஒளிப் பயணத்தினை உணரும் போது, உண்மை உள்ளங்களினையும் உணர முடிகின்றது.

- கலைப்பிரியை

# காகத்தின் மரணமும் நிஷாந்தவும்



நான்கு வருடங்களுக்கொரு முறை நடாத்தப்படும் "சர்வதேச குறுந்திரைப்பட விழா" விற்கு முதன் முதலாக தெற்காசிய பிராந்தியத்திலிருந்து இலங்கையர் ஒருவரின் திரைப்பிரதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விழாவுக்கான திரைப்பிரதிகள் விண்ணப்பம் 1998ம் ஆண்டு கோரப்பட்டது. இதற்கு 48 நாடுகளிலிருந்து 180 பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டன. இவற்றில் 5 பிரதிகள் மிகச் சிறந்த திரைப்பிரதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளன. நோர்வே, சிங்கப்பூர், ஜப்பான், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்தே இந்த ஐந்து பிரதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெற்காசியா நாடொன்றிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரே பிரதி இலங்கையைச் சேர்ந்த பிரதியாகும். இந்த பிரதியை இளம் படைப்பாளியான நிஷாந்த தென்னக்கோன் தயாரித்துள்ளார்.

பேராதெனிய பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறையில் பட்டம் பெற்ற, ஊடக நிறுவனங்கள் பலவற்றில் நிகழச்சி தயாரிப்பாளராக சேவையாற்றிய இவர் தற்போது முழு நேர திரைப்படவியலாளராவார்.

நிஷாந்த தனது திரைப்பிரதிக்கு " கப்புட்டாகே மரணய" (Death of Crow) என தலைப்பிட்டுள்ளார்.

'தொழிற் புரட்சியின் காரணமாக சமூகத்தின் பயண வேகம் அதிகரிக்கின்றது. இதனால் மனிதாபிமானம் ஒவ்வொருவரிடமிருந்தும் விலகிச் செல்கின்றது. மனிதர்களுக்கிடையில் மோதல்கள் ஏற்படுகின்றன. அம் மோதல்கள் தனிப்பட்ட மோதலாகவும், சமூக மோதலாகவும் மாற்றமுறுகின்றது. இதனையே இப்பிரதி சொல்கிறது.

இவரது பிரதிக்கான பின்னணி இன்றைய சமூக மோதலிலிருந்து தோற்றம் பெறுகின்றது. அதன் விளைவாக சமூகத்தில் ஏற்படும் மோதல்களால் மனிதர்களுக்கிடையில் மட்டுமன்றி, மனிதருடன் தொடர்புள்ள அனைத்து இயற்கை அலகுகளுடன் மோதல் விரிவடைகின்றது. (உதாரணம்:- சூழல்-விலங்குகள்)

மோதலின் விளைவாக மனிதன் தன்னைப் பற்றி மட்டும் எண்ணும் "மனிதனாக" மாறுகின்றான். இதனை எமது சமூகத்தில் வெவ்வேறுபட்ட காலகட்டத்தில் நாம் அனுபவித்துள்ளோம். அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இந்நிலைமையை நாம் உணரத் தொடங்கியது 88-90 காலகட்டத்திலாகும்.

இக்காலகட்டத்தில் மனிதர்களை கொலை செய்வது வழமையான நிகழ்வாகின்றது. அக் கொலைகள் இயற்கையான மரணமல்ல. எனினும், எமது சமூகத்தில் பலர் அம் மரணங்களை இன்னும் உணராமலே உள்ளனர். சமூகத்தில் உள்ள மிகவும் உணர்ச்சி வசப்படும் மனிதர்களுக்கு இந்நிலைமையை தாங்கிக் கொள்ள முடியாது உணர்ச்சியை பிரதிபலித்து விடுகின்றனர். இதனால் சமூகத்தினால் இவ்வாறான மனிதர்கள் "பைத்தியக்காரர்கள்" எனப் பெயர் சூட்டுதலுக்காளாகின்றனர்.

இவரது திரைப்பிரதியில் பிரதான பாத்திரமாக ஒரு உணர்ச்சிவசப்படும் (Over sensitive man) மனிதன் சித்திரிக்கப்படுகின்றான்.

அவன் காகம் ஒன்றின் மரணத்தின் மூலம் மனிதர்களுக்குள் இருக்கும் தந்திரம், சுயநலம், மனிதாபிமானமற்ற தன்மை போன்றவற்றை காண முயலகின்றான். இவ் அனைத்து தன்மைகளும் இறுதியில் "பைத்தியக்கார"னினால், 'இரும்புத் துண்டங்களுக்கு இன்பத்தின் போது சிரிக்கவும், துன்பத்தின் போது அழுது புலம்பவும் முடியாது' என்றவாறு விபரிக்கப்படுகின்றது.


இந்த திரைப்பிரதிக்கான விருது வழங்கும் விழா ஜூன்- ஜூலை மாதங்களில் தாய்லாந்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கான திரைப்பிரதியை திரைப்படைப்பாக மாற்றிக் கொண்டால் இந்த படைப்பை ஐந்து சர்வதேச திரைப்பட விழாவில் பிரதிநிதித்துவம் செய்ய முடியும்.

இந்தத் திரைப்பிரதியை திரைப்படமாக மாற்றிக் கொள்ள தேவையான நிதி இன்மை நிஷாந்த தென்னக்கோன்க்கு உள்ள நெருக்கடியாகும். 2000ம் ஆண்டு 15ம் திகதிக்கு முன்னர் இந்த திரைப்படத் தயாரிப்பை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இக்காரியத்திற்கு உதவியளிக்க எவராயினும் முன்வருவார்களாயின் அது படைப்பாளியான நிஸாந்தவிற்கு பெரும் உதவியாகவிருக்கும். இந்த குறுந்திரைப்படத்திற்கான செலவு சராசரியாக 4 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. தனிப்பட்ட ரீதியில் ஆதரவு வழங்க முடியாவிட்டாலும், குழுக்களாகவோ ஸ்தாபனரீதியாகவோ உதவி நல்க முடியும் என நிஷாந்த தென்னக்கோன் கலை ஆர்வலருக்கு கோரிக்கை விடுக்கின்றார்.

-ரத்னா

நன்றி - நூலகத்திட்டம்






# அரச சார்பற்ற பெண்கள் அமைப்புகள் குறித்து....

சரிநிகர் இதழ் 182 இல் நாங்கள் எழுதியிருந்த கட்டுரையில் பெண்கள் அமைப்புகள் ஒருபாலுறவு உரிமை குறித்த விடயங்களில் அக்கறை காட்டத் தயங்குகின்றன என்று குறிப்பிட்டு எழுதியதை மறுத்து சென்ற இதழில் செல்வி திருச்சந்திரன் அவர்கள் எழுதிருந்தார்.

செல்வி அவர்கள் இவ் விடயத்தில் பொறுப்புடன் கருத்துக்களை முன்வைத்தமை வரவேற்கப்பட வேண்டியது. அதை நாம் கௌரவிக்கிறோம். இது குறித்து அவர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொறுப்பும் எமக்கு உண்டு.

"கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியலாமா" என அவர் எங்களை நோக்கி எழுப்பிய கேள்விக்கு, எதனை நோக்கி எறிகிறோம் என்பதைத் தெரிந்து தான் அதனை எறிந்தோம் என்பதை நாம் தெரிவித்தாக வேண்டும். அவர் குறிப்பிட்ட 'லெஸ்பியன் மாநாடு குறித்து 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளிவந்த மோசமான கட்டுரையை எதிர்த்து பெண்கள் அமைப்புகள் விடுத்த அறிக்கை எமக்குத் தெரிந்தே இருந்தது. (அதனைத் தம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று செல்வி கூறியிருந்தார்.) ஆனால் அந்த அறிக்கையை வைத்துக் கொண்டு பெண்கள் அமைப்புகளெல்லாம் தொடர்ச்சியாக இவ்வுரிமை குறித்து கரிசனையுடன் இருப்பதாக முடிவுக்கு வர எம்மால் முடியவில்லை. பெண்கள் அமைப்புகளின் கடமை இந்த அறிக்கை விடுவதுடன் முடிந்து போவதில்லை என்பதும், இவ்வாறான பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்பெண்கள் அமைப்புகள் காத்த மௌனங்களுமே எமது நிலைப்பாட்டுக்கு வலு சேர்க்கின்றன.

ஒரு மாற்றுப் பத்திரிகை என்கிற அளவில் சரிநிகரில் 'ஒருபாலுறவு என்பது சம்பந்தப்பட்டவர்களின் ஜனநாயகத் தெரிவு' என்கின்ற நிலைப்பாட்டுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. பெரும்போக்கோடு சமரசம் செய்து கொண்டு போனால் தான் முதலாளித்துவ சந்தையில் இருப்பைப் பேணலாம் என்கிற நிலையையுடைய ஊடகங்கள் குறித்து எமக்குப் புரிதலுண்டு. செல்வி அவர்கள் கூறுவது போலவே அப்பத்திரிகைகள் ஏனைய வெகுஜன இயக்கங்களின் அறிக்கைகளைக் கூடப் பிரசுரிப்பதில்லை என்பதற்கும் எமக்கு தெளிவான விளக்கம் உண்டு. ஆனால் இவை பற்றிப் பேச வாய்ப்பு இருக்கின்ற இடங்களைக் கூட செல்வி அவர்கள் இதுவரை பயன்படுத்தியதாக எமக்குத் தெரியவில்லை.

சரிநிகர் இவ்விடயம் தொடர்பாக கொண்டுள்ள கவனத்தையும் அது தொடர்பாக அது வெளியிட்டு வரும் கட்டுரைகளையும் தெரிந்து கொண்டும் சரிநிகரைச் சேர்ந்த 'சரவணன் ஏன் இதுவரை இது பற்றி எதுவும் எழுதவில்லை' என்று செல்வி அவர்கள் கேள்வி எழுப்புவதில் அர்த்தமில்லை. அது வெறும் விதண்டாவாதத்துக்கான கேள்வியாக மட்டுமே இருக்க முடியும். மறுபுறத்தில் "தேவகௌரி, சூரியகுமாரி ஆகியோர் தங்கள் நிறுவனங்களுக்கள் இருந்து கொண்டு கூட ஏன் இவற்றுக்காக குரல்கொடுக்க முடியவில்லை" என்று கேட்பதிலும் நியாயமில்லை. ஏனென்றால் இதற்கான பதில் செல்விக்கு தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. ரூபவாஹினியின் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கும் செல்வியால் அதில் இவ்விடயம் தொடர்பாக ஏதாவது செய்ய முடிந்திருக்கிறதா? ஏன் அவரது நிறுவனமான பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் சஞ்சிகையில் கூட இவை குறித்து ஏதாவது விடயம் வெளிவந்துள்ளதா? இன்னும் பெண்கள் அமைப்புக்களின் வெளியீடுகளான பெண் (சூர்யா அபிவிருத்தி நிறுவனம்), பெண்ணின் குரல் (பெண்ணின் குரல் அமைப்பு) என்பவற்றில் கூட இவை தொடர்பான கட்டுரைகள் எவற்றையும் காணக்கிடைக்கவில்லையே ஏன்? தேவகௌரி, சூரியகுமாரிக்கு பொருந்துவது செல்விக்கும் பொருந்தத் தானே வேண்டும். அப்படியென்றால் கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிவதில் தான் எங்களுக்குச் சற்றும் சளைத்தவரில்லை என்பதை செல்வி ஒப்புக் கொள்கிறாரா?

ஒருபாலுறவு உரிமை குறித்து வெறும் பெண்ணிய இயக்கங்கள் தான் பேச வேண்டுமென்று இல்லை. ஜனநாயகத்துக்கு குரல்கொடுக்கும் அனைத்து தரப்பினரதும் பொறுப்பு அது. ஆனால் லெஸ்பியன்களின் உரிமை என்ற விடயத்தில் பெண்கள் இயக்கங்களுக்கு அதிக பொறுப்பு உண்டென நாங்கள் நம்புகிறோம். நாங்கள் தனி நபர்கள் என்கிற வகையில் எம்மிடம் எதிர்பார்ப்பதைவிட செல்வி போன்ற பெண்ணிய உரிமைகளுக்கான நிறுவனங்களை கொண்டிருப்பவர்களிடம் சமூகம் அதிகமாக எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாததே. அவ்வாறான நிலையிலிருந்தே பெண்கள் அமைப்புகளின் தயக்கங்கள் குறித்தும் குறிப்பிட நேரிட்டிருந்தது.

இலங்கையில் எந்தப் பெண்கள் அமைப்புக்கும் ஒரு உறுதியான பெண்ணிய வேலைத்திட்டம் இருந்தது கிடையாது என்பதை தயக்கமின்றிக் கூறலாம். பெண்கள் அமைப்புகளுக்கு, ஏன், பூர்ஷ்வா அரசியற் கட்சிகள் போலவே எந்தவொரு இடதுசாரி இயக்கங்களுக்கும் கூட ஒரு தனித்துவமான பெண்ணிய வேலைத் திட்டம் இருந்தது கிடையாது. அவ்வப்போது அல்லது குறிப்பிட்ட காலத்துக்கான நிகழ்ச்சி நிரல்கள் மட்டும் தான் இருந்திருக்கின்றன. இலங்கையில் 35,000 என்.ஜீ.ஓக்கள் இருப்பதாக அண்மையில் வெளியான ஒரு தகவல் தெரிவிக்கின்றது. இவற்றில் கணிசமானவை பெண்கள் அமைப்புகள் என்பதும் உண்மை. பெருமளவில் இவ்வமைப்புகளின் நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பது அமைப்புகளின் நீண்டகால இலக்குகளின் மீதிருந்து இல்லை. பெரும்பாலும் நிதி வழங்கும் நிறுவனங்களின் "இவற்றுக்குத் தான் நிதி வழங்குவோம்" என்கிற நிபந்தனைகளுக்கேற்றாற் போன்ற நிகழ்ச்சி நிரல்களை தயாரிப்பதும், தகவமைப்பதும் தான் நடந்து வருகின்றது.

இலங்கையில் உள்ள சமூக உருவாக்கங்களை விளங்கிக் கொள்ளல், வர்க்க சக்திகள், ஆதிக்க-அடக்குமுறைக் குழுமங்களை விளங்கிக் கொள்ளல் இந்தக் குழுமங்கள் மொத்தத்தில் பெண்களின் மீது செலுத்துகின்ற அதிகாரத்துவ பாத்திரம், முரண்பாடுகளின் தன்மை, அவற்றின் படிநிலையொழுங்கு, அவை ஒன்றிலொன்று ஏற்படுத்தியிருக்கின்ற உறவு, அதன் அடிப்படையில் நேச -பகைமை சக்திகளின் அணிபிரிகையை அடையாளம் காணல், இதற்கான மூலோபாயம் தந்திரோபாயங்களை வகுத்தல் என்பனவற்றிலிருந்து இச்சூழலுக்கேற்ப பெண்ணியத் திட்டத்தை வரையறை செய்துகொள்வது வரை தொடரப்பட வேண்டிய பாரிய தேவைகளை கோரி நிற்கும் பெண்ணிய வேலைத்திட்டம் பற்றி இந்த அமைப்புகள் எதுவும் தீவிரமாக சிந்திப்பதாகத் தெரியவில்லை. பதிலாக மேம்போக்கான தன்னியல்பான, எதனைச் செய்ய வேண்டுமோ அதுவல்லாமல், எதனை நோகாமல் செய்ய முடியுமோ அதனைச் செய்வது, (இலங்கையில் பெண்ணிய இயக்கங்களுக்கு மாத்திரமல்ல பல்வேறு இயக்கங்களுக்கும் பொதுவானது) என்கிற போக்கே இங்கு நிலவுகிறது.

இது தான் நாம் எழுதிய கட்டுரையில் பெண்கள் அமைப்புகள் தொடர்பாக எழுதிய குறிப்பின் சாரம்.

சரவணன்
சூரியகுமாரி
தேவகௌரி

# எது மொத்த வியாபாரம்?

அண்மையில் அக்கரைப்பற்றில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பகிரங்க கூட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின்பின் அமைச்சர் அஷ்ரப் உரையாற்றுகையில் வன்னியில் நடப்பது மொத்த வியாபாரமென்றும் அக்கரைப்பற்றில் நடப்பது சில்லரை வியாபாரமென்றும் ஆக்ரோஷமாக பேசினார்.

வன்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மொத்த வியாபாரத்திற்கு யார் பொறுப்பாளிகள் (முதலாளிகள்) எப்படி பொறுப்பாளிகளானார்கள் என்பது அஷ்ரப்புக்கு தெரியாதவிடயமா? இந்நாட்டை மாறி மாறி ஆண்ட சிங்கள அரசியல் தலைவர்களும் அரசியல்வாதிகளுமென்பது வெளப்படையான விடயமே. தமிழ்மக்களினதும் தமிழ் மிதவாத தலைவர்களினதும் கோரிக்கைகளையும் உணர்வுகளையும் மதிக்காமல் அவற்றை சிரத்தையுடன் சீர்துாக்கிப்பார்க்காமல் அவர்களது உரிமைகளையும் ஜனநாயகமான செயற்பாடுகளையும் மறுத்தும் மறைத்தும் வந்ததன் விளைவே வன்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அஷ்ரப் சொன்ன மொத்த வியாபாரமாகும். இவற்றிற்கு தன்னைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும் பொறுப்பு உண்டு என்பதனை உயர்ந்தும் அறிந்திருந்தும் அரசியலின் சந்தர்ப்ப சூழ்நிலையான சாக்கடைத்தனத்திற்கு இசைந்து தமிழ் மக்கள்படும் சொல்லொண்ணா இன்னல்களையும் தமிழ் இளைஞர்கள் இரத்தம் உயிர் சிந்தும் போராட்டங்களை மொத்த வியாபாரமென்று கொச்சைப் படுத்து விட்டனர். இது இவரின் அரசியலின் கபடநாடகத்தின் ஓர் அங்கமே.

அதேபோல் இன்று அஷ்ரப்பினதும் அவரது கைக்கூலிகளினதும் முஸ்லிம் காங்கிரசினதும் நடவடிக்கைகள் மீது அதிருப்தியடைந்த முற்போக்கான முஸ்லிம் இளைஞர்களினது சிந்தனைக்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியாமல் தினறும் அஷ்ரப் அவ்விளைஞர்களை அடக்க மனித உரிமைகளை மீறும் வகையில் நடந்துவிட்டு அக்கரைப்பற்றில் நடைபெறுவது சில்லறை வியாபாரமென்று இலேசாகவும் சிந்தனைத்தனமில்லாமலும் பேசிவிட்டு சென்றுவிட்டார். வன்னியில் மொத்த வியாபார நடைபெற ஆரம்பகால காரண கர்த்தாவாக இருந்த சிங்களத் தலைவர்களின் வாரிசுகளோடு தேனிலவு கொண்டிக்கொண்டு அக்கரைப்பற்றில் வன்னியில் மொத்த வியாபாரத்தின் பாணியிலான சில்லறை வியாபாரத்தை ஆரம்பித்து வைத்துவிட்டு சென்றுவிட்டார். இதுவும் முஸ்லிம் சமூகத்தின் மீது பாரிய மொத்த வியாபாரத்தை ஆரம்பித்துவிட்டு சென்றுவிட்டார். மொத்த வியாபார பாணியிலான சில்லறை வியாபாரத்தை ஆரம்பித்துவிட்டு சென்றுவிட்டார். இதுவும் முஸ்லிம் சமூகத்தின் மீது பாரிய மொத்த வியாபாரமாகாமல் பார்த்துக்கொள்வது அஷ்ரப்பை சார்ந்த விடயமாகும். முஸ்லிம் சமூகத்தினதும், இளைஞர்களனிதும் சிந்தனைகளுக்கு மதிப்பளித்து நான் மட்டும்தான் ராஜாவாக நினைத்துக்கொள்ளாமல் எதிர்கால சந்ததிகளான இளைஞர்களின் வேண்டுகோள்களுக்கும் செவிசாய்க்கவேண்டும். தமிழ் இளைஞர்கள் கோரிக்கைகளும் வேண்டுகோள்களும் நிராகரிக்கப்பட்டதே வன்னி மொத்த வியாபாரத்திற்கான அடித்தளம் என்பது போல் முஸ்லிம் சமூகத்தின் மீது இன்னுமொரு மொத்த வியாபாரம் நடத்த எண்ணாமல் அஷ்ரப் மக்களுடைய பிரச்சினைகளைப் புகுந்து கொள்ள வேண்டும்.

வன்னிக்கு உரிய நேரத்திற்கு உணவு அனுப்பாமல் இழுத்தடிப்பும் தடைகளும் மேற்கொண்டு தமிழ் மக்களை யுத்தத்தால் மட்டுமின்றி பட்டினியாலும் சாகடிக்கும் அரசுடன் கைகோர்த்துக்கொண்டு மொத்த வியாபாரத்தின் பங்காளிகளா (பங்குதாரர்) இருந்து கொண்டு மொத்த வியாபாரம்பற்றி பேசுவதில் என்ன தான் நியாயமிருக்கிறது.

எம்.ஐ.எம்.கபீர்
அக்கரைப்பற்று.

# கண்டாயோ!

யாழ்ப்பாணத்தையும் வடமராட்சியையும் இணைப்பது வல்லைப்பாலம் பருத்தித்துறையிலிருந்து கப்பலில் வரும் பொருட்களை ஏற்றி வரும் லொறிகள் வல்லைப் பாலத்தில் இராணுவத்தினரின் சோதனையிலிருந்து விடுபடுவதற்காக இராணுவத்தினருக்கு தலா ஐந்நுாறு ரூபாய் கொடுப்பது வழக்கம். இப்படி ஒரு நாள் லொறிக் கிளீனர் ஒருவர் பணம் கொடுக்கும் போது அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் பார்த்து விட்டார். பணம் வாங்கிய சிப்பாயும் அவரைக் கண்டு விட்டான். மறுநாள் அந்த அரசாங்க உத்தியோகத்தர் மணித்தியாலக் கணக்கில் தடுத்து வைக்கப்ட்படு நீ புலி என இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டார்.

# யார் இது?

கடந்த வியாழக்கிழமை இரவு ஊடரங்கு வேளையில் யாழ் நவீன சந்தையில் உள்ள ஆறு கடைகளில் திருட்டு இடம் பெற்றுள்ளது. திருடர்கள் அலவாங்கால் கதவுகளைக் குத்தியும், வாள் பிளேட்டால் வெட்டியும் கதவுகளை உடைத்துள்ளார்கள். யாழ். நவீன சந்தையிலிருந்து ஐம்பது யார் துாரத்தில் தான் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு திருடர்கள் அலவாங்கால் குத்திய சத்தம் கேட்கவில்லையா என்கின்றனர் கடைக்காரர்கள். இராணுவத்தினரே இந்தக் கொள்ளையைச் செய்திருக்கலாமெனவும் கடை உரிமையாளர்கள் சந்தேகப்படுகின்றனர்.

# இப்போது நேரம் என்ன?

பொன்னம்பலம் வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர். இவர் அண்மையில் திருமண வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு விட்டு இரவு எட்டு மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அளவெட்டி இராணுவ முகாம் காவலரணில் நின்ற சிப்பாய் இவரது காலில் சுட்டுவிட்டு இப்போது நேரம் என்ன ஊரடங்கு எத்தனை மணிக்கு என்று தெரியாதா கெதியாக வீட்டுக்குப் போ என உத்தரவிட்டாராம். பின்னர் இராணுவ உயரதிகாரிகள் பொன்னம்பலத்தை அழைத்து இராணுவத்தினர் தான் சுட்டார்கள் என்பதற்கு என்ன ஆதாரம். நீங்கள் புலிகள் தான் உங்களைச் சுட்டதாக வாக்குமூலம் கொடுங்கள் என வற்புறுத்தினாராம். அதற்கு பொன்னம்பலம் புலிகள் என்னைச் சுடுவதானால் சுட்டுவிட்டு நேரம் கேட்டுவிட்டு கெதியாக வீட்டுக்குப் போ என்று சொல்லமாட்டார்கள் என்றாராம். நல்லவேளை பொன்னம்பலத்திற்குக் காலில் சூடு பட்டபடியால் பொன்னம்பலத்தால் இப்படிக் கூற முடிந்தது. இல்லாவிட்டால் பொன்னம்பலத்தைப் புலிகள் சுட்டு விட்டார்கள் என்று அரசாங்கம் பிரச்சாரம் செய்திருக்கும்.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## நாம் செய்யப்போவது என்ன?

*" நந்த வனத்திலோர் ஆண்டி*
*நாலாறு மாதமாய் குயவனை வேண்டி*
*கொண்டுவந்தான் ஒரு தோண்டி — அதை*
*கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி..... "*

அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவர்கள் ஊன்று கோலும், கையுமாய் ஓடி ஓடி மூன்றாண்டு காலமாக மூச்சுவிடாமல் யுத்தம் செய்த வன்னி நிலப்பரப்பினை நான்கே நாட்களுக்குள் மீளப் பறிகொடுத்த நிகழ்ச்சியைச் செய்திகளாகக் கேட்டுக் கொண்டிருக்கையில் மேற்சொன்ன பாடல் ஞாபகத்திற்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

1997 மே 13ம் திகதி ஆரம்பித்த " ஜயசிக்குறு " இராணுவ நடவடிக்கை மூலம் அரசாங்கம் வன்னி நிலப்பரப்பை முற்றாக விடுவித்து, வடக்குக்குத் தரைமார்க்கப் பாதை திறக்க முனைந்ததும், அதற்க ஈடாகக் கோடிக் கணக்கில் செலவிட்டு யுத்தம் புரிந்ததும், அனுருத்தர் நம் காலத்துச் " சப்புமல் குமாரய " வாகத் தன்னைப் பாவித்துப் " படை நடப்பு " நடாத்தியதையும் ஆரவாரத்துடன் அறிவித்துக் கொண்டு ஜனாதிபதி அவர்கள் தேர்தல் களத்தில் குதித்ததும் எல்லாம் வீணான நந்தவனத்து ஆண்டியின் செயலுடன் ஒப்பிடுவதில் நியாயம் இருக்கவே செய்கின்றது.

சமாதானத்திற்காக யுத்தம் புரிவதாகக் கூறிய அரசாங்கம், கடந்த வருட மாவீரர் தினத்தில் புலிகளால் சமாதானத்திற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் அதை மறுத்துப் புலிகளுடன் யுத்தம் செய்தே தீருவது என்று தீவிரமாக இயங்கியதை அவதானிப்பவர்கள் யாரும் இப்படி நினைக்காமல் இருக்க முடியாது.

வன்னிக் கள நிலவரம் கடந்த வாரம் திங்கள் முதல் தீவிரமாகப் புலிகளுக்குச் சாதகமாக மாறிவிட்டிருந்ததும் ஆயுதப் படைகள் தாக்குப் பிடிக்க முடியாமல் பின் பின்வாங்கி ஓடி வந்ததும் பத்திரிகைகளில் முன் பக்கச் செய்திகளாக வெளிவந்து கொண்டிருந்தன. அமைச்சர் ரத்வத்தையும், றொஹான் தலுவத்தையுமாக வவுனியாவுக்குச் சென்று நேரடி நிலைமைகளை " அவதானித்த " போதும் புளியங்குளத்தையும் பறிகொடுப்பது வரை அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. புளியங்குளமும் பறி போய், ஓமந்தைக்கும் புலிகள் வந்து விடுவார்களோ என்ற அச்சத்துடன் இராணுவ தளபாடங்களை லொறிகளிலும், ட்ரக்ரர்களிலும் ஏற்றிக் கொண்டு ஈரப்பெரியகுளம் நோக்கிப் படையினர், பின்வாங்கிக் கொண்டிருந்ததை வவுனியா வாசிகள் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் வந்து கொண்டிருந்தன.

அதற்குப் பிறகும், செய்திகள் வெளிவருவது அரசாங்கத்திற்குப் பிடிக்கவில்லை.

ஏற்கெனவே இருந்த செய்தித் தணிக்கையை மீண்டும் இறுக்கமாகவும், வேறு பல புதிய கட்டுப்பாடுகளுடனும், தீவிரமாக அமுல்படுத்தப் போவதாக அது அறிவித்தது. இராணுவப் படை நகர்வுகள், அரசாங்கத்திற்குச் சாதகமாக இருக்கும் வரை செய்தித் தணிக்கையில் ஒரு வித நெகிழ்ச்சியைக் கடைப்பிடித்த அரசாங்கம் இப்போது அதை மிகவும் தீவிரமாக அமுல்படுத்தத் தொடங்கியுள்ளது. தோல்விகளைத் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருப்பது, இராணுவத்திற்கும், இதர படையினர்க்கும் மனச் சோர்வைக் கொடுப்பதுடன், ஜனாதிபதியின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளையும் பெரிதும் பாதிக்கும் என்ற அச்சம் காரணமாக இந்தத் தணிக்கை மீண்டும் தீவிரமாக அமுல்படுத்தப்படத் தொடங்கியுள்ளது.

இந்தச் செய்தித் தணிக்கை மக்களின், உண்மையறியும் உரிமை மீது விதிக்கப்பட்ட ஒரு தடை என்றும், அது விடுவிக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் கோரியதுடன், அரசாங்கம் இவ்வாறு நடந்து கொள்வதை எதிர்த்துக் கண்டனமும் தெரிவித்தார்.

ஆனால், இதற்குப் பதிலளிக்குமாப்போல் அமைச்சர் மங்கள சமரவீர - தகவல், தொடர்புகட்குப் பொறுப்பான அமைச்சர் இவர் - இவ்வாறு கோருவது, அதுவும் நாடு இப்படி ஒரு நெருக்கடியான நிலைக்கு உள்ளாகி இருக்கும் நிலையில், ஒரு துரோகத்தனமான செயல் என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

யுத்தம் செய்வதும், சமாதானத்தின் பெயரால் கோடிக்கணக்கான செல்வத்தை விரயம் செய்து வடக்குக் கிழக்கிலுள்ள மக்களைப் பட்டியாலும், குண்டுகளாலும் கொன்று குவிப்பதும் துரோகம் அல்ல. யுத்த களத்தில் என்ன நடக்கின்றது என்பதை மக்கள் அறியும் விதத்தில் செய்தி எழுதுவது தான் அல்லது அப்படி எழுதவிடும்படி கோருவதுதான் துரோகமாகிப் போய்விட்டது இலங்கை அரசாங்கத்திற்கு !

ஐ. தே. கயினால் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாகச் சாதிக்க முடியாமல் இருந்த வன்னி நிலப்பரப்பைக் கடந்து, குறைந்த பட்சம் மாங்குளம் வரைக்குமாவது போவதைச் சாதித்த பெருமை ஜனாதிபதித் தேர்தலில் நிச்சியம் வெற்றி வாய்ப்பைத் தேடித்தரும் என்பது சந்திரிகாவின் கணிப்பு. தவிரவும், மலையகத் தரகுக்குத் தொண்டமான், முஸ்லீம் தரகுக்கு அஸ்ரஃப், வடக்குக் கிழக்குத் தரகு வேலை செய்ய டக்ளஸ், வரதர் என்று வெற்றி வாய்ப்புக்கு ஆட்களையும் பிடித்ததுடன், ஜனாபதிப் பதவியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐ. தே. கவில் யார் யாரெல்லாம் மோசமான அரசியல்வாதிகள் என இந்த அரசாங்கம் எதிர்க் கட்சியில் இருக்கும் போது, முன்பு குற்றம் சாட்டியதோ, அவர்களுக்கு எல்லாம் மந்திரிப் பதவி ஆசை காட்டி, வளைத்து எடுத்து வியூகம் வகுத்துக் கொண்டார்.

ஆனால், அவர் வாயில் மண் விழுந்தது போலப் புலிகளின் படை நகர்வு அமைந்து விட்டது. ஆக, இதிலிருந்து தப்பிக் கொள்ள இருக்கின்ற ஒரே வழி, உண்மை எப்படி இருந்தாலும், வெற்றி எமக்குத்தான் என்று பிரச்சாரம் செய்ய வசதியாகச் செய்தித் தணிக்கையை அமுல் செய்வது தான். தீவிரமான செய்தித் தணிக்கை அமுலில் இருக்கையில், உண்மையை அறியும் உரிமைக்கான குரலைத் துரோகக் குரலாக முத்திரை குத்தும் அரசியல் சூழ்நிலையில், அனைத்து அயோக்கியர்களது ஆதரவையும் திரட்டி அம்மையார் அமைக்கப் போகின்ற ஆட்சியில் சமாதானம் பிறக்கும் என்று நம்பிக் கொண்டு, அவருக்குப் புள்ளடி போடும்படி கேட்க - அதுவும் தொடர்ச்சியான யுத்தத்தால் சொல்லொணாத் துன்பங்களைச் சுமந்து கொண்டிருக்கும் தமிழ், முஸ்லீம் மக்களிடம் கேட்க - தொண்டா(இப்போது அவரது மறைவுக்குப் பின் இ. தொ. கா.), அஸ்ரஃப், டக்ளஸ், வரதர் கூட்டணி முன்வரப்போகின்றது.

இதற்குச் செவிசாய்த்து இன்னொரு தடவையும் முட்டாள் பட்டம் கட்டுப்பட நாம் தயாரா ? அல்லது இந்த ஏமாற்றுத் தேர்தலை நிராகரித்து, எமது எதிர்ப்பைக் காட்டப் போகின்றோமா ?

இது தான் நம் முன் உள்ள - தமிழ், முஸ்லீம் மக்கள் முன் உள்ள - கேள்வி.

பதில் எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சொல்லச் சொற்களுக்கு எந்த அவசியமும் இல்லை !.

# தலைகீழாக மாறிய வன்னிப் போர்நிலை!

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு அதாவது செவ்வாய்க்கிழமை உதயத்தின் போது வன்னிப் போர் முனைகளைச் சேர்ந்த ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய இராணுத்தின் படைத் தளங்கள் மீது விடுதலைப் புலிகள் ஆரம்பித்த உக்கிரமான அதிரடித்தாக்குதல்கள், இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, ஒலுமடு, கரிபட்டமுறிப்பு, அம்பகாமம், மாங்குளம், கனகராயன்குளம், புதூர் சந்தி, நைனாமடு, புளியங்குளம், பனங்காமம், மூன்றுமுறிப்பு, ஒதியமலை, கஜபாபுர, ஜானகபுர ஆகிய பத்துக்கும் மேற்பட்ட இராணுவ



முகாம்களும், அவற்றைச் சூழ்ந்திருந்த சிறிய இராணுவ முகாம்களும் விடுதலைப் புலிகளினால் தாக்கி நிர்மூலமாக்கப்பட்டு, அவற்றில் இருந்த பெருமளவிலான போர் ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள், இராணுவ வாகனங்கள் என்பனவும் அவற்றுடன் சார்ந்த பெருந்தொகையான பொருட்களையும் அவர்கள் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றியுள்ளார்கள்.

இராணுவத்தினர் எதிர்பாராத வகையில் அவர்கள் மீது ஓயாத அலைகள் 3 என்ற தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ள விடுதலைப் புலிகள், தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ள சிங்களப்படைகளைத் தாக்கி தமது தாய் மண்ணை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்தப் போர், மண் மீட்புப் போர் என வர்ணித்திருக்கின்றார்கள்.

வன்னிப்பகுதியின் மையப் பகுதிகளில் உள்ள முக்கிய இராணுவ முகாம்களைக் கைப்பற்றிய புலிகள். வன்னிப் பிதேசத்தின் கிழக்குப் பகுதிகளில் நெடுங்கேணிக்கு அப்பால் இருந்த கென்ற், டொலர் மற்றும் சிலோன் தியேட்டர்ஸ் பண்ணைகள், ஒதியமலை, கஜபாபுர, ஜானகபுர ஆகிய முக்கிய இராணுவ மினி முகாம்களைக் கைப்பற்றி அழித்து, மணலாற்றில் அமைந்துள்ள பிரதான இராணுவ தளத்தின் மீது இப்போது மோதிக்கொண்டிருக்கின்றார்கள்.

வழமையாக நடைபெறுவது போல, குறிப்பிட்ட ஒரு இராணுவ முகாமை அல்லது அதனுடன் சார்ந்த இராணுவ முகாம் தொகுதியைத் தாக்காமல், வன்னிப்பிரதேச்தின் பல்வேறு முனைகளில் பல்வேறு அணிகளாகப் பிரிந்து புலிகளின்

தாக்குதல் அணிகள் தமது தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். கடந்த காலங்களில் அதிரடியாக ஒன்றிரண்டு தினங்களிலேயே தமது தாக்குதல்களை முடித்துக் கொண்டது போலல்லாமல், இம்முறை அதாவது - ஓயாத அலைகள் 3 தாக்குதல்களை ஒருவாரத்திற்கு மேலாக விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள். இது எப்போது முடிவுறும் என்று ஊகித்துக் கூற முடியாத அளவிற்கு வன்னிப் போர் முனைகளில் நிலைமைகள் நாளுக்கு நாள் கடுமையாகிச் செல்வதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன.

சங்கிலித் தொடராக பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருந்த வன்னிப்பகுதி இராணுவ முகாம்கள் மீது மாரி மழைக்கு ஒப்பாக ஆர்ட்டிலறி ஷெல்களையும், மோட்டார் குண்டுகளையும் பொழிந்து தள்ளிய புலிகளின் தாக்குதல்களில், இதுவரையில் எத்தனை இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பது அண்ணளவாகக் கூட படை அதிகாரிகளினால் கணக்கிடப்படவில்லை.

ஏனென்றால், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல், அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளில் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் கட்டுக்கடங்காத சீற்றத்துடன் எதிர்த்தாக்குதல்களைத் தொடுத்து, இராணுவ முகாம்களை நொறுக்கி அழித்துத் துடைத்து முன்னேறிக்கொண்டிருக்கின்றார்கள். படையினரின் காயமடைந்தவர்களையும், உயிரிழந்தவர்களின் சடலங்களையும் மீட்கக் கூட முடியாத அளவிற்கு புலிகளின் தாக்குதல்கள் உக்கிரமாக அமைந்திருப்பதாக, வன்னிப் போர் முனைகளில் இருந்து இப்போதும் தப்பியோடி வந்து கொண்டிருக்கின்ற இராணுவச் சிப்பாய்கள் தெரிவிக்கின்றார்கள்.

மொத்தத்தில், வன்னிப் போர் முனைகளின் இராணுவ நிர்வாகக் கட்டமைப்பு. அதன் ஒருங்கிணைந்த செயற்பாடு என்பவற்றை தகர்த்து, சீர்கெட வைத்த புலிகள் மீது அரசாங்கம் இப்போது தனது முழுமையான இராணுவ பலத்தையும் பிரயோகித்து ஒரு தற்காப்புச் சண்டையைத் தொடக்கியுள்ளது.

வன்னிப் போர்முனைகளில் இவ்வாறு படுமோசமான தோல்விகளைச் சந்தித்துள்ள இராணுவத்தினர் தமது பழைய நிலைகளை வென்றெடுத்து விடுதலைப் புலிகளை அவர்களின் பழைய நிலைகளுக்குப் பின்தள்ளப் போகின்றார்களா அல்லது சகல பிரதேரங்களையும் இழந்து, ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் நிலைகொண்டிருந்த தாண்டிக்குளம், அங்கிருந்து பூவரசங்குளம் வரையிலான தொடர் முன்னணி காவலரண்கள் நிலைக்குப் பின்வாங்கி தமது முன்னரங்குகளை அமைக்கப் போகின்றார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஈழப் போர் வரலாற்றில் புதியதோர் பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ள புலிகளின் ஓயாத அலைகள் 3 தாக்குதல் நடவடிக்கையானது, வன்னி இராணுவ பிராந்தியத்தின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவின் தலைமைப் பொறுப்புக்கு மட்டுமல்லாமல், இலங்கை அரசாங்கத்தின் அடித்தளத்தையும் ஆட்டம் காணச் செய்துள்ளது.

ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு ஒரு வருடகாலம் முன்னதாகவே, ஜனாதிபதி தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று ஆரம்பித்துள்ள ஜனாதிபதி தேர்தலை அரசாங்கம் இப்போது திட்டமிட்டபடி நடத்துமா இல்லையா என்பது குறித்துத் தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில், மண்மீட்புப் போரில் ஆக்ரோஷமாகப் பாய்ந்து இன்னும் ஓயாமல், தாக்குதல் நடத்துகின்ற விடுதலைப் புலிகளை எதிர்க்கவும், அவர்கள் இராணுவ தளங்களைத் தமது ஆர்ட்டிலறி பீரங்கிகளைக் கொண்டு தாக்காமல் தடுப்பதற்கும் பெருமளவிலான துருப்புக்கள் வன்னிப் பகுதிகளில் இப்போது தேவையாகியுள்ளது.

தலைகீழாக மாறியுள்ள வன்னிப் போர்முனைகளுக்குத் தேவையான படையணிகள் பொலிஸ் அணிகளை அங்கேயே வைத்திருப்பதா அல்லது அவர்கள் இல்லாத நிலையில் நாடெங்கிலும் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியுமா என்பது தெரியவில்லை. அரசுக்குத் திருப்தியான முறையில் விடுதலைப் புலிகளை இராணுவம் அடக்கி வைக்காத ஒரு நிலையில், அவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டே, ஜனாதிபதி தேர்தலை நடத்துவது என்பது இரு தோணிகளில் கால் வைக்கும் நிகழ்வுக்கு ஒப்பான காரியமாகவே அமையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

**ஆக்கிரமிப்புக்காக தொடக்கப்பட்ட சண்டை தற்காப்பைத் தேடி ஒளியும் நிலையில்...**

**தனபால்**

வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு:பிறின்ற்இன், இல.07,கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 09.11.1999